# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 11 புதன்கிழமை (27.07.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 243





03 காங்கேசன் துறைமுக அபிவிருத்தி முக்கியம்

14 தொடரும் புதிவுகளால் கிலிகொள்ளும் தமிழர்கள்

21 கையொப்பமிட மறுத்தார் விஜய்

22 தேசத்துக்கு மகுடம் கண்காட்சி

25 இலங்கை அணியில் யாழ். வீரர்கள்










காங்கேசனில் மீட்பு நடவடிக்கை




விடுதலைப் புலிகளால் காங்கேசன்துறைமுகப் பகுதியில் மூழ்கடிக்கப்பட்ட கடற்படைக் கப்பல்களை அகற்றும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் இந்தியத் தூதர் அசோக் கே.காந்த ஆகியோர் கொடி அசைத்து பணிகளை ஆரம்பித்து வைத்தனர். படம்: சமிந்த ஹித்தட்டிய

# ஆட்சியை பகிர்ந்தளி

## தேர்தல் மூலம் தமிழர்கள் கேட்டது இதுவே என்கிறார் தலைவர் ஆர். சம்பந்தன்

-எமது திருகோணமலை செய்தியாளர்-

**''ஆட்சி அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படவேண்டும்; தமிழ் மக்களின் பொருளாதார சமூக கலாசார பண்பாட்டு செயற்பாடுகள் பேணப்படவேண்டும். இதுவே, உள்ளூராட்சித் தேர்தலில் அரசுக்கு தமிழர்கள் வழங்கிய தீர்க்கமான செய்தி'' - என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன்.**

தேர்தல் முடிவுகள் குறித்து தனது திருகோணமலை வீட்டில் இருந்து உதயனுக்கு அளித்த சிறப்புச் செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்ததாவது:-

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களைப் பொறுத்தவரை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் வழங்கிய முடிவுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதான நம்பிக்கைக்கும் தங்களது எதிர்கால சுபீட்சத்திற்கும் அவர்கள் வழங்கிய அழிக்க முடியாத தீர்ப்பு.

பல்வேறு அழுத்தங்கள், பயமுறுத்தல்கள் மத்தியிலும் தமிழ் மக்கள் துணிந்து இத்தகைய முடிவினை அரசுக்கு வெளிப்படுத்தியுள்ளனர். ஜனநாயக ரீதியாக மக்களால் வழங்கப்பட்ட இந்த ஆணையை ஏற்று தமிழ் மக்களுக்கென நீதியானதும் நியாயமானதுமான அரசியல் தீர்வினை அரசு வழங்க முன்வரவேண்டும்.

1956இல் இருந்தே தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியில் தங்கள் முடிவினை ஒரே மாதிரி வெளிப்படுத்தி வருகின்றனர். எனினும்

பக் 27

## 2,700 அரச நியமனங்கள் 230 மட்டுமே தமிழருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 27

நாடுமுழுவதும் 2,709 ஆசிரியர் நியமனங்கள் விரைவில் வழங்கப்பட உள்ளன. இதற்கான அறிவித்தலை கல்வி அமைச்சு விடுத்துள்ளது. எனினும் அவற்றில் 230 நியமனங்கள் மட்டுமே தமிழர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அமைச்சின் அறிவித்தல்படி 1,662 சிங்கள மொழி மூல ஆசிரியர்களும் 230 தமிழ் மொழி மூல ஆசிரியர்களும் 138 அழகியல்பாட ஆசிரியர்களும் 84 தகவல் தொழில்நுட்ப பாட ஆசிரியர்களும் நியமனம் செய்யப்பட உள்ளனர்.

இதற்கான நியமனக் கடிதங்கள் விரைவில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அனுப்பி வைக்கப்பட உள்ளது.

அரசு விரைவில் 4,000 பேருக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்கும் என்று இரு மாதங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தது. எனினும் அதில் அரைவாசிப்பேருக்கு மட்டுமே இப்போது நியமனங்கள் வழங்கப்படுகின்றன. ஏனையோருக்கும் நியமனங்கள் வழங்கப்படுமா என்று தகவல் இல்லை. (உ-302)

## சரணடைகிறான் வீரத் தமிழன்

யாழ்ப்பாணம், ஜூலை 27

சிலை புனரமைப்பு என்ற பேரில், யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னனான சங்கிலியனை போவோர் வருவோரிடம் எல்லாம் யாழ். மாநகர சபை சரணடைய வைத்திருப்பது குறித்து குடாநாட்டில் உள்ள வரலாற்று ஆய்வாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

''சங்கிலியன் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போரிட்ட ஒரு தமிழ் வீரன்; மன்னன். அவனை வாளினைத் தூக்கிய படி சரணடையும் கோலத்தில் சிலையாக்கியிருப்பது கண்டிக்கத்தக்கது. நிபுணத்துவ யோசனைகள் எதனையும் பெறாது சகட்டுமேனிக்குத் தான் தோன்றித்தனமாகத் தீர்மானங்களை எடுப்பதால் ஏற்படும்

பக் 27

## நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பதால் சிறுபான்மையின மக்களின் பிரச்சினை தீராது

### மு.கா. கருத்து; தீர்வில் தமக்குரிய இடம் குறித்தும் கேள்வி

அம்பாறை, ஜூலை 27

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் முஸ்லிம்கள் பங்குபற்றிய தனது நிலைப்பாட்டை அரசு விரைவில் வெளியிட வேண்டும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது. நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைப்பதால் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கப் போவதில்லை என்றும் அது தெரிவித்துள்ளது.

''தீர்வு விடயத்தில் முஸ்லிம்கள் பற்றி அரசு என்ன நிலைப்பாட்டில் உள்ளது என்பது தெளிவாக இல்லை. நீண்ட காலத்துக்கு இதனைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. விரைவில் முஸ்லிம் காங்கிரஸ் தனது மௌனத்தைக் கலைக்கும்'' - என்றார் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ரீ.ஹஸனலி.

பக் 27

## 5,200 தமிழர்கள் ரகசியத் தடுப்பில்

### சோஷலிச இளைஞர் அமைப்பு திடுக் தகவல்



கொழும்பு, ஜூலை 27

சுமார் 5,200 தமிழ் அரசியல் கைதிகள் இரகசியமான இடங்களில் அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர் விவரங்களை சோஷலிச இளைஞர் அமைப்பு திரட்டுகின்றது. இந்தப் பெயர் பட்டியல் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் பகிரங்கப்படுத்தப்படும்.

- இவ்வாறு சோஷலிச இளைஞர் அமைப்பின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்னாயக்க தெரிவித்தார். சோஷலிச இளைஞர் அமைப்பின் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை பத்தரமுல்ல பெலவத்தையிலுள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

காணாமற்போன இளைஞர், யுவதிகள் குறித்து ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் ஒன்றை வெளியிட

பக் 27

## தேர்தல் முடிந்த கையோடு கொள்ளைகள் ஆரம்பம்

### நேற்றிரவு மட்டும் கோண்டாவிலில் இரு மோ.சைக்கிள்கள் அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் முடிந்த கையோடு கொள்ளைச் சம்பவங்கள் ஆரம்பித்துள்ளன. நேற்றிரவு மட்டும் ஆயுத முனையில் இரு மோட்டார் சைக்கிள்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

கத்திகள், வாள்களுடன் வந்த நபர்கள் இந்தக் கொள்ளையில் ஈடுபட்டனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கோண்டாவில் பாடசாலை வீதியிலுள்ள வீடு ஒன்றுக்குள் நுழைந்த இந்தக் கோஷ்டியினர் அங்கிருந்த இளைஞர்

பக் 27

## ஈ.பி.டி.பி. ஆதரவாளர் நேற்று நையப்புடைப்பு

### கூட்டமைப்பு ஆதரவாளர் மூவர் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 27


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர்களை வம்புக்கிழுத்த ஈ.பி.டி.பி. ஆதரவாளர் ஒருவர் நையப்புடைக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. பண்ணாலையில் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தமது கட்சியின் ஆதரவாளரான சந்திரபாலன் என்பவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

பக் 04

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானம் காணப்படும் சாத்தியம்.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை ப யாழ்ப்பாணம்
ஆடி 26, 2011
பங்குச்சந்தைச்சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6493.58↑
மிலங்கா(MPI) 5928.45↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1.9Bn
பங்குகளின் அளவு(No.) 157.5Mn
வியாபாரம்(No.) 13202
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
ஆர்பிகோ பினான்ஸ் 106.00
நுவரெலியா 1500.00
புறபரி டிவலொப்மன்ர் 59.80
ஓட்டோறோம் 799.50
சீலின்சிங் 1300.00
குறைவு(Top 5 losers) - விலை Rs.
பறகன் சீலோன் 1875.00
கொகோ லங்கா 40.30
நந்தா 16.70
கீல்ஸ் பூட் 108.00
அலுப(f)ப் 145.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# புதூர் வங்கியில் கொள்ளையிடப்பட்ட 2 கோடி பெறுமதியான நகைகள் மீட்பு

## கல்கிசையில் தமிழ்ப் பெண் கைது

கொழும்பு, ஜூலை 27

மட்டக்களப்பு புதூர் அரச வங்கி ஒன்றில் கொள்ளையிடப்பட்ட 15 கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகளில் 12 கோடி ரூபா பெறுமதியானவை கல்கிசைப் பகுதியிலும் மட்டக்களப்பிலும் இரகசியப் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

புதூர் அரச வங்கியொன்றில் அண்மையில் 15 கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகளும் 35 லட்சம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டன.

இந்த வங்கிக் கொள்ளை தொடர்பாக மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ்ப் பெண் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர். அவரிடமிருந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் 12 கோடி ரூபா பெறுமதியான நகைகள் மீட்கப்பட்டுள்ளன.

கைதான பெண் கல்கிசையிலும், தெஹிவளையிலும் இரு வீடுகளை வாடகைக்குப் பெற்றிருந்தார். அந்த இரு வீடுகளிலும் 2 கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன. இதன் பின்னர் மட்டக்களப்பில் உள்ள அவரது இல்லத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 கோடி பெறுமதியான 10 கிலோ தங்க நகைகள் மீட்கப்பட்டுள்ளன.

வென்னப்புவ பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட இந்த வங்கிக் கொள்ளையை மேற்கொண்ட குழுவின் தலைவன் எனக் கருதப்படும் பிரதீபன் என்பவரிடம் பெறப்பட்ட தகவல்களை அடுத்தே மேற்படி பெண் கைது செய்யப்பட்டார் என மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பெண் கைது செய்யப்படுவதற்கு முன்னர் வங்கியின் அலுவலக உதவியாளர் ஒருவரின் ஒத்துழைப்புடன் கொள்ளையில் நேரடியாக பங்கேற்றதாக கருதப்படும் பிரதீபன், கண்ணன் ஆகியோர் கைதாகியிருந்தனர். இவர்கள் அனைவரும் மட்டக்களப்பு இரகசியப் பொலிஸ் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். (த-22)

# பொது இடங்களில் சிறுநீர் கழித்த 20 பேர் கைது

கொழும்பு, ஜூலை 27

தம்புள்ள பகுதியில் வீதிகள் உள்ளிட்ட பொது இடங்களில் சிறுநீர் கழித்த 20 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தின் சுகாதார நிலைமைகளைப் பரிசோதிப்பதற்காக சுகாதார மற்றும் அரச அதிகாரிகள் அங்கு சென்றபோது அந்த இடத்தில் சிலர் சிறுநீர் கழித்துக்கொண்டிருந்ததைக் கண்டனர். இதையடுத்து இவ்வாறு பொது இடங்களில் சிறுநீர் கழிப்பவர்களைக் கைதுசெய்வதற்கான ஏற்பாட்டை மேற்படி அதிகாரிகள் மேற் கொண்டனர்.

இதனையடுத்தே மேற்படி 20 பேரும் கைதுசெய்யப்பட் டனர். இவர்கள் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பொது நூலக சிறுவர் பகுதியின் கையளிப்பு நிகழ்வு வெள்ளியன்று

## சிங்கப்பூர் முன்னாள் அமைச்சர் பங்கேற்பார்

யாழ்ப்பாணம், ஜூலை 27

சிங்கப்பூர் அரசின் நிதியுதவியுடன் நவீன முறையில் புனரமைக்கப்பட்ட யாழ். பொது நூலகத்தின் சிறுவர் பகுதி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நூலக நிர்வாகத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படவுள்ளது.


இந்த நிகழ்வில் சிங்கப்பூர் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜோர்ஜ் ஜோ பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிங்கப்பூர் அரசின் பூரண நிதிப் பங்களிப்புடன் யாழ். பொது நூலகத்தின் சிறுவர் பகுதி நவீன வசதிகளுடன் புனரமைப்புச் செய்யப்பட்டது. இந்தப் புனரமைப்புப் பணிகள் தற்போது பூர்த்தியடைந்துள்ளன. இந்தப் புனரமைப்புப் பணிகளை முன்னர் ஆரம்பித்து வைத்தவர் அப்போது சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சராக இருந்த ஜோர்ஜ் ஜோ. அவர் இப்போது பதவியில் இல்லை.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்குப் பொது நூலகத்தில் இந்தக் கையளிப்பு வைபவம் நடைபெறவுள்ளது. முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜோர்ஜ் ஜோ இதில் கலந்து கொண்டு சிறுவர் பகுதியை நூலக நிர்வாகத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிப்பார். (த-26)

# புற்றுநோய் வைத்தியசாலைக்கு நிதி திரட்ட எனது கிரிக்கெட் துடுப்பு விரைவில் ஏலம்

## உதயனுக்கு சங்கக்கார செவ்வி



யாழ்ப்பாணம், ஜூலை 27

எனது துடுப்பாட்ட மட்டை மற்றும் உடைகள் உட்பட எமது அணியின் ஏனைய வீரர்களின் பொருள்களையும் புற்றுநோய் வைத்தியசாலை அமைப்பதற்கான நிதி திரட்டும் நடவடிக்கைக்காக ஏலத்தில் விற்பனை செய்யவுள்ளோம்.

இவ்வாறு இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார 'உதயனுக்கு' வழங்கிய விசேட செவ்வியில் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்த நடைப்பயணம் இலங்கையில் மிக முக்கியமான ஒன்றாகும். இலங்கையர் அனைவரும் இதில் பங்கெடுக்க வேண்டும். புற்றுநோயால் பாதிக்கப்பட் டவர்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். இதற்கு சகலரும் உதவ வேண்டும். இது இலங்கையர் ஒவ்வொருவரினதும் கடமை. அந்தவகையில் தான் நானும் இதில் பங்கெடுக்கின்றேன். இதில் பங்குபற்றுவதில் பெருமிதமடைகின்றேன்.

இதில் இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள் பங்கெடுத்ததன் மூலம் அதிகளவான நிதியைத் திரட்ட முடிந்துள்ளது. ஏனெனில் இலங்கையில் பெரும்பாலான ரசிகர்களைக் கொண்ட விளையாட்டு கிரிக்கெட்தான். கிரிக்கெட் வீரர்கள் பங்குபற்றிய நாள்களில் அதிகளவான நிதி திரட்டப்பட்டது.

மேலும் இந்த வைத்தியசாலையை ஆரம்பிப்பதுடன் நின்றுவிடாது தொடர்ந்தும் இதனைக் கொண்டு நடத்தவேண்டும். அதற்காக நானும் ஏனைய இலங்கைக் கிரிக்கெட் வீரர்களான ரி.எம்.டில்ஷான், மஹேல ஜெயவர்த்தன, அஞ்சலோ மத்தியூஸ், அரவிந்த டீ சில்வா, சாமர சில்வா, பிரசன்ன ஜெயவர்த்தன, மலிங்க பண்டார ஆகியோரும் எமது கிரிக்கெட் துடுப்பு, உடைகள், தொப்பிகள் என்பவற்றை ஏலத்தில் விடுவதற்குத் தீர்மானித்துள்ளோம். இதன் மூலமாக கிடைக்கும் பெருமளவான நிதியும் இந்தப் புற்றுநோய் வைத்தியசாலைப் பணிக்கே வழங்கப்படவுள்ளது. ஏனைய பிரதேசங்களில் இந்த நடைபயணத்துக்குக் கிடைத்த வரவேற்பை விட யாழ்ப்பாணத்தில் அதிகளவான வரவேற்பு எமக்குக் கிடைத்தது. நான் முன்னர் வர்த்தக நோக்கிலான நிறுவனம் ஒன்றுக்காக யாழ்ப்பாணம் வந்தேன். தற்போது சமூக நலனுடைய ஒரு நிகழ்வுக்காக யாழ்ப்பாணம் வந்திருக்கின்றேன். இவ்வாறான இந்த நிகழ்வு எனது வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு நிகழ்வு - என்றார். (த-15)

# நிர்வாக சேவைப் பயிற்சியாளருக்கு வீரசிங்கம் மண்டபத்தில் ஒன்றுகூடல்

யாழ். மாவட்டத்தில் தற்போது பயிற்சி பெறும் இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு ஒன்றுகூடல் நிகழ்வு ஒன்று எதிர்வரும் ஒகஸ்ட் 4 ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

இந்த ஒன்றுகூடலில் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேசசெயலக உத்தியோகத்தர்களும் பிரதேச ரீதியாக கலை நிகழ்வுகளை நடத்த உள்ளனர்.

தமிழர் பண்பாடு, யாழ்ப்பாண வாழ்வியல் குறித்தான இயல், இசை, நாடக நிகழ்வாக உத்தியோகத்தர்களின் கலை நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கான ஆயத்தப் பணிகளில் தற்போது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர். (த-121)

# நிகழ்வுகள்

### விளையாட்டு விழாவும் சிறுவர் நூலகத் திறப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஜூலை 27

ஆவரங்கால் மேற்கு மத்திய முன்பள்ளி மழலைகளின் 37 ஆவது வருடாந்த விளையாட்டு விழாவும் சிறுவர் நூலகத் திறப்பு விழாவும் இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு மத்திய முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மத்திய முன்பள்ளி தலைவர் கா.சிவசோதி தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி.ஜெயா தம்பையா கலந்துகொள்வார். (ற-313)

### நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்.ஐன்ஸ்டீன் அறிவியல்கழகத்தின் ''அசேதன இரசாயன நட்சத்திரம்'' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி [illegible]சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இரசாயனவியற்றுறை விரிவுரையாளர் பி.அபிமன் கலந்துகொள்வார். (ற-313)

### அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

தென்மராட்சி கல்வி வலயத்தில் க.பொ.த. உயர்தர வகுப்பிலுள்ள பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 1 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதியின் பொருளாதார மேம்பாட்டுக்கு காங்கேசன் துறைமுக அபிவிருத்தி முக்கியம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடபகுதியின் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவும்வகையில் காங்கேசன்துறைமுகம் நவீன வசதிகள் கொண்டதாக புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படும் என்றார் இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்த.

காங்கேசன்துறைமுகத்தில் மூழ்கடிக்கப்பட்ட 6 கப்பல்களை மீட்டு அகற்றும் பணியைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடன் இணைந்து நேற்று ஆரம்பித்து வைத்தார்.

அதற்கு முன்னதாக உரை நிகழ்த்தும் போதே இந்தியத் தூதுவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

காங்கேசன்துறைமுகத்தில் மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களை அகற்றி அதனை நவீன வசதிகள் கொண்ட துறைமுகமாகப் புனரமைப்புச் செய்யவுள்ள இந்தத் திட்டம் முக்கியமானதாகும்.

இது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் முன்னெடுக்கப்படுகின்றது. இந்தியக் கப்பல் கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு முன்னதாக மூழ்கடிக்கப்பட்ட கப்பல்கள் முழுமையாக அகற்றப்பட்டுவிடும். அதனைத் தொடர்ந்து துறைமுகம் புனரமைக்கும் பணிகள் இடம்பெறும்.

கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட இணக்கத்தின் பிரகாரம் கடந்த 21 ஆம் திகதி இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுச் சில தினங்களிலேயே பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க விசேட அம்சமாகும்.


வடபகுதியின் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவும் வகையில் காங்கேசன்துறை துறைமுகம் நவீன வசதிகள் கொண்டதாகப் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது - என்றார் தூதுவர் அசோக் கே.காந்த.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்திய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்ததாவது:

இலங்கையின் அபிவிருத்திக்கு இந்திய அரசு பல்வேறு வழிகளிலும் உதவி வருகின்றது. வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் பெரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களில் பலவும் இந்திய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருபவையாகும்.

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திப் பணியும் இந்திய அரசினால் முன்னெடுக்கப்படுகின்றது. ஏ9 வீதி மூடப்பட்ட காலத்தில் இந்தத் துறைமுகம் ஊடாகவே மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன. அவ்வாறான துறைமுகத்தை இந்திய அரசு புனரமைக்க முன்வந்தமை பெருமைக்குரிய விடயமாகும் - என்றார். (ஒ-14)

**கப்பல்களை அகற்றும் பணிகளை ஆரம்பித்து வைத்த இந்தியத் தூதுவர் தெரிவிப்பு**



நேற்றைய காங்கேசன் நிகழ்வுக்கு வருகை தந்த அமைச்சர் பஸிலை ஆரத் தழுவி வரவேற்றார் அமைச்சர் டக்ளஸ்.

## நுணாவில் மத்தி ஆலயத்தில் சிலைகள் நேற்றுத் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 27

சாவகச்சேரி, நுணாவில் மத்தி கந்தசுவாமி கோயிலில் (வைரவர் கோயிலில்) நேற்றுப் பட்டப்பகலில் தெய்வச் சிலைகள் திருட்டுப் போயுள்ளன.

கண்ணன் - ராதை - ருக்குமணி மற்றும் அம்மன் ஆகிய சிலைகள் நேற்று நண்பகல் 12 மணிக்கும் 4 மணிக்கும் இடைப்பட்ட வேளையில் அபகரிப்பட்டுள்ளனவென்று தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ)

## கலைமாணிப் பட்டியல்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகினால் நடத்தப்பட்ட கலைமாணி இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்து கலைமாணிப் பட்டம் பெறுவோர் பட்டியல் வெளியாகியுள்ளதாக வெளிவாரிப் பரீட்சைப் பிரிவு இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இம்முறை 300 மாணவர்கள் கலைமாணிப்பட்டம்பெறுவதுடன் இவர்களில் இரு மாணவர்கள் இரண்டாம் தரம் மேற்பிரிவிலும், 18 மாணவர்கள் இரண்டாம் தரம் கீழ்ப் பிரிவிலும் 280 மாணவர்கள் சாதாரண சித்தியிலும் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-எ)

# புலம்பெயர் தமிழர் தம் செயற்பாட்டில் மாற்றம் கொண்டுவர வேண்டும்

**லண்டன் கூட்டத்தில் சுமந்திரன் எம்.பி.**

லண்டன், ஜூலை 27

புலம்பெயர் தமிழ் மக்கள் தமது செயற்பாடுகளில் மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும்.

மேற்கண்டவாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் லண்டனில் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரிட்டிஷ் கிளை ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் சுமந்திரன் உரை நிகழ்த்தினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அரசுக்கும் இடையிலான பேச்சுகளில் கடைசியாக இடம்பெற்ற மூன்று பேச்சுகளிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுவதாகவும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்போது பெரும்பான்மை சிங்கள மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றே சாத்தியமானது என்றும் கூறினார்.

புலம்பெயர் தமிழ் மக்களின் செயற்பாடுகளை, தாம் பிரிட்டனிலும், வேறு இடங்களிலும் சந்தித்த இராஜதந்திரிகள் விமர்சித்தனர் என்றும் புலம்பெயர் தமிழர்களின் செயற்பாடுகளை தாம் பெரிதுபடுத்துவதில்லை என்று அவர்கள் தெரிவித்தனர் என்றும் சுமந்திரன் மேலும் அங்கு கூறினார்.

# 60 பயணிகளுடன் போதையில் பஸ்ஸை செலுத்தி வந்தவர் சிக்கினார் பொலிஸில்

**யாழ்.நகரில் வைத்து மடக்கினார் எஸ்.எஸ்.பி.**

யாழ்ப்பாணம், ஜூலை 27

மதுபோதையில் 60 பயணிகளுடன் வேகமாக வாகனம் ஓட்டியவர் யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவவிடம் வகையாக மாட்டிக்கொண்டார்.

நேற்றுமாலை 4.15 மணியளவில் யாழ்.நூலகப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கொடிகாமத்தில் இருந்து 60 பயணிகளுடன் வந்த தனியார் பஸ் நூலகத்துக்கு அருகில் உள்ள சந்தியில் வேகமாகத் திரும்பியது. அப்போது அந்தப் பகுதியில் சென்ற யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவ பஸ்ஸை மறித்துச் சோதனை செய்தார்.

பிரஸ்தாப பஸ்ஸின் சாரதி மதுபோதையில் இருந்தமையை அறிந்த அவர் பயணிகளை நடந்து செல்லுமாறு கேட்டுக் கொண்டார்.

பஸ்ஸையும் சாரதியையும் தடுத்து வைத்துப் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். இன்று அவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்.

மதுபோதையில் சாரதிகள் வாகனம் செலுத்தினால் அவற்றில் பயணம் செய்ய வேண்டாம் என்று நேவின் பத்மதேவ கேட்டுள்ளார். (ஒ-ஐ)

**இறுதிப்போரில் உயிரிழந்த, காணாமற்போனோர் குறித்த**

# சர்வதேச விசாரணை அவசியம் என்பதை தேர்தலில் தெரிவித்து விட்டனர் எம் மக்கள்



**நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்**

கொழும்பு, ஜூலை 27

உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள், இறுதிக் கட்டப்போரில் கொல்லப்பட்ட , காணாமற்போன தமது உறவுகள் குறித்த சர்வதேச விசாரணை அவசியம் என்பதை வலியுறுத்தியே வாக்களித்துள்ளனர்.

எனவே அந்த மக்களின் விருப்பை நிறைவேற்ற சர்வதேச தரத்திலான, சர்வதேசம் ஏற்றுக்கொள்ளக்கூடிய விசாரணைக்குழுவை இலங்கை அரசு நியமிக்க வேண்டும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தல் முடிவு குறித்து உதயனுக்கு அவர் தெரிவித்தவை வருமாறு:-

ஐ.நா. நிபுணர் குழு, இறுதிக்கட்டப்போரில் பெரும் எண்ணிக்கையானவர்கள் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்தது. அது தவறு என்றும் எவரும் கொல்லப்படவில்லை என்றும் தெரிவித்து அரசு தேர்தல் பிரசாரம் செய்தது.

ஐ.நா. கூறுவது போல் பெரும் எண்ணிக்கையானவர்கள் கொல்லப்பட்டனர்; காணாமற்போயினர் அவர்களுக்கு நேர்ந்த கதி குறித்து விசாரணை செய்ய வேண்டும் என்பதற்கே தமிழ் மக்கள் வாக்களித்துள்ளனர்.

எனவே தேர்தல் மூலம் மக்கள் முன்வைத்த கோரிக்கையை ஏற்று இறுதிக்கட்டப்போரில் கொல்லப்பட்டவர்கள் தொடர்பாக விசாரணை நடத்த சர்வதேச தரத்தில், சர்வதேசம் ஏற்றுக்கொள்ளக்கூடிய விசாரணைக்குழுவை அரசு நியமிக்க வேண்டும்.

அரசு நியமித்துள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு புறம்பாக இந்த விசாரணைக்குழு அமைக்கப்பட வேண்டும் - என்றார்.

**தமிழரின் ஆணையை அரசு மதிக்க வேண்டும்**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ்மக்கள் மீண்டும் ஆணை தந்துள்ளார்கள். அதை மதித்து எதிர்காலப் பேச்சுக்களில் காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்வது முக்கிய விடயமாக இருக்கும். இந்த விடயத்தில் அரசு சரியான முடிவை எடுக்க வேண்டும்.தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை மதிக்க வேண்டும்.

அக்கறையுடனும் பற்றுறுதியுடனும் பேச்சுக்களை நடத்த வேண்டும். தொடர்ந்தும் இதய சுத்தி இல்லாமல் பேச்சுக்களை அரசு நடத்தினால் தீர்வைக் காணமுடியாது.

மக்கள் ஆணை தந்துவிட்டார்கள். இப்போது அரசே இதய சுத்தியுடன் செயற்படவேண்டும் - என்றார். (ஒ-ஐ)

# 25பேர் வரை இராணுவ முகாமுக்கு அழைக்கப்பட்டு விசாரணை

**சேருவில, மூதூர்ப் பகுதிகளில் பீதி**

மூதூர், ஜூலை 27

திருகோணமலை மாவட்டத்தில் சேருவில மற்றும் மூதூர் பிரிவுக்கு உட்பட்ட கிளிவெட்டி, அரியமான்கேணி, எல்.பி.III, லிங்கபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 25 பேர் நேற்றுமுன்தினம் நீலாப்பலை இராணுவ முகாமுக்கு அழைக்கப்பட்டு, இராணுவத்தினரால் விசாரணை செய்யப்பட்டனர்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக முன்பு செயற்பட்டவர்கள், அவர்களுக்கு உறசாகம் அளித்தவர்கள், உணவு வழங்கியவர்கள் என்ற சந்தேகத்தின்பேரிலேயே இவர்கள் இராணுவ முகாமுக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் அதே தினம் மாலை 7 மணியளவில் விடுவிக்கப்பட்ட போதிலும், தேசிய அடையாள அட்டையின் பிரதியையும், புகைப்படத்தையும் கொண்டு வரும்படி இராணுவத்தினரால் இவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவடைந்த கையோடு இப்படிப்பட்ட நடவடிக்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டிருப்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வளர்ச்சியை மேற்குறிப்பிட்ட பகுதிகளில் தடுப்பதற்கான ஓர் உத்தியாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, இராணுவத்தினரின் இச்செயற்பாட்டால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்து உள்ளார்கள் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய்க்கு எதிரான நடை பயணம் 'டயலொக்' நிறுவனமும் இணைகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடக்கு மக்களின் புற்றுநோய்க்கு எதிரான போராட்டத்துக்குக் கைகொடுக்கும் வகையில் தெவேந்திரமுனை முதல் பருத்தித்துறை வரை நடைபெறும் நடை பயணத்தின் இறுதிநாள் நிகழ்வில் இலங்கையின் முன்னணித் தொலைத்தொடர்பு நிறுவனமான 'டயலொக் ஆசி ஆட்டா' ஒன்றிணைகின்றது.

இன்று புதன்கிழமை வல்லைச் சந்தியிலிருந்து பருத்தித்துறை வெளிச்சவீடு வரை செல்லும் இந்த நடை பயணத்தில் இந்த நிறுவனமும் இணைந்துகொள்ளவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய்ப் பிரிவை நிறுவுவதற்காக நிதியினைத் திரட்டும் பொருட்டு 670 கிலோ மீற்றர் பயணிக்கும் இந்த நடை பயணத்தில் பல்வேறு வகையிலான வியாபாரச் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அந்த வகையில் டயலொக் நிறுவனம் 'ட்ரெய்ல்' வணிகப் பொருள்களை விற்பனை செய்யும் 3 விற்பனை நிலையங்களை நிறுவியுள்ளது.

வடக்கு, கிழக்கு மக்களின் அபிவிருத்தியில் ஒவ்வொரு தருணத்திலும் இணைந்துள்ள ஒரேயொரு வலையமைப்பு என்ற வகையில் டயலொக் நிறுவனம் தனது ஆதரவை வழங்கியுள்ளது.

டயலொக்கின் ஆதரவுடன் இடம்பெறும் இறுதிநாள் நிகழ்வுகள் இன்றுடன் முற்றுப்பெறாமல் புற்றுநோயிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் முயற்சியின் தொடக்கமாகவும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-313)

## சங்கீத சாகரம் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் எதிர்வரும் 30ஆம், 31ஆம் திகதிகளில் இடம்பெறவிருந்த ''சங்கீத சாகரம்'', ''பல் இசை சங்கம'' நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழக இசைத் துறையினரையும், யாழ்.மாவட்ட கலைஞர்களையும் ஒன்றிணைத்து நடத்தவிருந்த இந்த நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்கிய கலைஞர்களுக்கு இந்தத் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ற-313)

## ஈபிடிபி ஆதர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''காடையர் கும்பலால்'' தாக்கப்பட்டார் என்று ஈபிடிபி கட்சி நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்தது.

''பதிலுக்கு வீதியில் சென்று கொண்டிருந்த எமது ஆதரவாளர்களை கெட்ட வார்த்தைகளில் திட்டி சந்திரபாலன் தாக்கினார். அவரிடம் இருந்து தப்ப அவர்கள் முயன்றதில் அங்கு சிறிய கைகலப்பு ஏற்பட்டுள்ளது'' என்று வலி.வடக்கு பிரதேச சபைக்கு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட சஜீவன் தெரிவித்தார்.

இவரது தலைமையிலான கும்பல் ஒன்றே ''மிலேச்சத்தனமான தாக்குதலை'' நடத்தியது என்று ஈபிடிபி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால், சந்திரபாலனின் குற்றச்சாட்டின் பேரில் தெல்லிப்பழைப் பொலிஸார் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் மூவரைக் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர். அவர்களில் சஜீவன் அடங்கவில்லை என்று பொலிஸார் கூறினர்.

''தாக்குதல் நடந்த போது நான் யாழ்ப்பாணத்தில் இருந்தேன். எனக்கு இந்தச் சம்பவத்தில் எந்தத் தொடர்பும் இல்லை. ஈபிடிபி வேண்டும் என்றே என் மீது பழி போடுகிறது. நான் தாக்குதலில் தொடர்புபட்டிருந்தால் இப்போது எப்படி வெளியே நடமாட முடியும்?'' என்றார் சஜீவன்.

வலி. வடக்குப் பிரதேச சபைக்கு நடத்தப்பட்ட தேர்தலில் அரசு சார்பில் போட்டியிட்ட தமது உறுப்பினரான தயாபரன் என்பவரின் சகோதரரே சந்திரபாலன் என்று ஈபிடிபி கட்சி உரிமை கோரி உள்ளது.

(உ)

## இன்னிசை நிகழ்வு

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் சுற்றாடலில் உள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிறு தோறும் இடம்பெற்றுவரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இன்னிசை நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களின் நெறிப்படுத்தலுடன் நிகழ்த்துவார்கள்.

(ச-236)

## நல்லிணக்க ஆணைக்குழு 'சனல்-4' வீடியோவைப் பார்த்தது

கொழும்பு, ஜூலை 27

'சிறிலங்காவின் கொலைக்களம்' என்ற பெயரில் சனல் - 4 தொலைக்காட்சி அண்மையில் வெளியிட்டிருந்த யுத்தக்குற்ற ஆவணத் திரைப்படத்தை நல்லிணக்க ஆணைக்குழு பார்வையிட்டது. தற்சமயம் அந்தத் திரைப்படம் தொடர்பில் ஆய்வுசெய்யப்பட்டு வருகிறது

- இவ்வாறு நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடக இணைப்பாளர் லக்ஷ்மன் விக்ரமசிங்க நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தயாரிக்கும் பணிகள் கணிசமான அளவு பூர்த்தியடைந்து வருகின்றன. திட்டமிட்டபடி எதிர்வரும் நவம்பர் மாதத்தில் அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கவுள்ளோம்.

இந்த நிலையில், சனல் - 4 தொலைக்காட்சி அண்மையில் வெளியிட்டிருந்த 'சிறிலங்காவின் கொலைக்களம்' என்ற ஆவணத் திரைப்படத்தை நல்லிணக்க ஆணைக்குழுவின் உயர்மட்ட உறுப்பினர்கள் குழு பார்வையிட்டது. அந்த வீடியோ தொடர்பாக தற்சமயம் ஆய்வு நடத்தப்பட்டும் வருகின்றது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கைகளில் எந்த வழியிலும் அரசு தலையிட்டதில்லை. அவ்வாறான தலையீடுகளையும் ஆணைக்குழு அனுமதிக்காது. நல்லிணக்க ஆணைக் குழு சுயாதீனத் தன்மை உடையது. அந்த வகையில், சாட்சியங்கள் பதியப்பட்டு இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. - என்றார்.

## விபத்தில் பெண்மணி பலி

கொழும்பு, புத்தளம் பிரதான வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

டிப்பர் வாகனமும் முச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.





சீட்டிழுப்பு இலக்கம் 770 திகதி 25-07-2011

வெற்றி எண்கள்

07 56 58 59 W (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 10,000,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 10,000,000/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 19 | 50,000/= | 950,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 354 | 1,000/= | 354,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 611 | 1,000/= | 611,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15727 | 60/= | 943,620/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7960 | 40/= | 318,400/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 205925 | 20/= | 4,118,500/= |
| ஆங்கில எழுத்து | 30107 | 20/= | 602,140/= |
| | | மொத்தம் ரூ. | 8,697,660/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| குருநாகல் | 600400322-7-07 |
| நுவரேலியா | 600404393-9-09 |
| கம்பஹா | 600405897-8-28 |
| களுத்துறை | 600409130-8-18 |
| யாழ்ப்பாணம் | 600402039-9-29 |
| கேகாலை | 600410212-1-01 |
| இரத்தினபுரி | 600413996-8-28 |
| குருநாகல் | 600401842-2-02 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,097,660/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட

ரூ. 10,402,360/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 ஜூலை 28 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு-02
தொ.பே: 2333546/7

Enriching Your Life
DEVELOPMENT LOTTERY






உதயகுமாரன் - ராகினி தம்பதியரின் இரட்டைச் செல்வங்களான கம்சியா, கனிசா தங்களது முதலாவது பிறந்த தினத்தை மந்துவில் மேற்கிலுள்ள குணப்பெரியப்பாவின் இல்லத்தில் இன்று (27.07.2011) புதன்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள்.

இவர்கள் பல கலைகளும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:-

அப்பா, அம்மா, பெரியன்ரா, பெரியப்பா, சின்னன்ரா, பெரியமாமா- அத்தை, சின்னமாமா - அத்தை, அப்பம்மா, றஜனி அத்தை, அம்மப்பா, அம்மம்மா, அஜந்தன் அண்ணா (சுவிஸ்), கார்த்தி அண்ணா, அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், சித்தப்பாமார், சித்திமார், அக்கராயன் மாமா- அத்தை.

தகவல்: நா.உதயகுமாரன் (தேவன்), மந்துவில் மேற்கு, கொடிகாமம்.



மனமார்ந்த நன்றிகள்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தேர்தல் - 2011



இன்றைய நிலையை உணர்ந்து தமிழ் இன உணர்வோடு தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்து அமோக வெற்றியை ஈட்டித் தந்ததுடன், எனக்கும் அதிக விருப்பு வாக்குகளை அளித்து மூன்றாவதாக வெற்றி பெற வைத்த என் அன்பிற்கினிய வாக்காளப் பெருமக்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

தம்பிராசா திருநாவுக்கரசு
(ஓய்வுபெற்ற அதிபர்)
உரும்பிராய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சந்திரிகாவின் சுடலை ஞானம்

இலங்கையில் இன நல்லிணக்கத்தை உண்டாக்குவதற்கு சமஷ்டி முறையிலான அரசமைப்பபே உகந்தது. அதனை உணர்ந்தே உண்மையான சமஷ்டி அரசமைப்புச் சட்டநகல் ஒன்றை நான் 2000 இல் தயாரித்திருந்தேன். ஆனால் அப்போது எதிர்க்கட்சியாக விளங்கிய ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழீழ விடுதலைப் புலிகளும் அதனை நிராகரித்து விட்டனர்-

அந்த வேளையில், நிறைவேற்று ஜனாதிபதி என்ற வகையில் எனக்கிருந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, எனது மன உளைச்சலை நீக்குவதற்கு அந்த அரசமைப்புச் சட்டமூலத்தை அமுலாக்க நினைத்தது உண்டு. எனினும் ஜனநாயக விரோதமாகச் செயற்படக்கூடாது என்ற எண்ணத்தில் அவ்வாறு செய்யவில்லை-

ஆனால் இப்போதைய மஹிந்த அரசாங்கம் சமஷ்டி ஆட்சி முறையை நிராகரித்து, தமிழ்ச் சிறுபான்மையினர் மீது, சிங்கள-பௌத்த பெரும்பான்மை ஆதிக்கத்தை மேலும் திணிக்கும் இலக்குடன் செயற்படுகிறது.

இவ்வாறு கவலை வெளியிட்டிருக்கிறார் 1994 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டு வரையான பதினொரு வருடங்கள் இந்த நாட்டை ஆண்டு, அப்பாடா, விட்டால் போதும் என்று அரசியலில் இருந்து ஓய்வு பெற்று வாழும் சந்திரிகா குமாரணதுங்க.

கடந்த வார இறுதியில், அமரர் முன்னாள் நீதியரசர் கே.பாலகிட்ணரின் நினைவுப்பேருரையைக் கொழும்பில் நிகழ்த்திய வேளையிலேயே, அவர் மேற்கண்ட தொனியில் கழிவிரக்கம் தெரிவித்தார்.

அதிகாரங்கள் பொங்கி வழிந்த அரச அதியுயர் பதவியிலிருந்த போது, நாட்டு நலன் கருதி செயற்படுத்த விளைந்ததை செயற்படுத்த மனமின்றி ஒதுங்கிய அம்மையார், இப்போது கவலை தெரிவிப்பதால் ஏதேனும் ஆக்கபூர்வமாக, பயன்விளைக்கக்கூடிய, உருவாக்கக்கூடிய வாய்ப்பு எதுவும் தெரியவில்லை.

எனினும் அவர் தெரிவித்த சில கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப் பட வேண்டியவை எனத் தோன்றுகிறது.

★ 14 ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய அரசர்கள் இலங்கைமீது 52 தடவைகள் படையெடுத்தனர். அதனால் சிங்களப் பெரும்பான்மையினர் மத்தியில் காணப்படும் அச்ச உணர்வு அகற்றப்பட வேண்டும்.

★ இருப்பினும் தற்போதைய நிலையில், சிங்கள மக்கள் தமிழர்களுடன் சமஷ்டி அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். அதுவே எமது நாட்டை ஒன்றாக வைத்திருக்க உதவும்.

★ அதிகாரங்களை இரு தரப்பினரும் பகிர்ந்து கொள்வதால் பெரும்பான்மைச் சிங்கள மக்களையும் சிறுபான்மைத் தமிழ் மக்களையும் ஒன்றிணையச் செய்ய வழி பிறக்கும்.

★ பல்லின மக்கள் பெரும் எண்ணிக்கையில் வாழும் மிகப் பரந்த இந்தியா சுதந்திரம் பெற்று அறுபது வருடங்கள் சென்ற பின்னரும், ஒன்றுபட்ட ஒரே நாடாக விளங்குகிறது என்றால், சமஷ்டி ஆட்சி மற்றும் மதச்சார்பின்மை ஆகிய இரண்டு அம்சங்களுமே அதற்குப் பிரதான காரணங்கள்.

★ அதேவேளை, தனிச்சிங்களச் சட்டம் மற்றும் பௌத்தம் தேசிய மதம் ஆகிய சட்டங்களைக் கொண்டு வந்தாலேயே இலங்கையில் பாரதூரமான பாதிப்புக்களை, இனப்பிளவுகளைக் கொண்டுவந்துள்ளன.

★ இப்போது, தமிழீழ விடுதலைப் புலிகளை மஹிந்த அரசு போரில் வென்றிருக்கலாம். ஆனால் அமைதியையும் தேசிய நல்லிணக்கத்தையும் நாட்டில் உண்டாக்கும் பெரும் கஷ்டமான போரை மட்டும் இந்த அரசாங்கம் இன்னும் ஆரம்பிக்கவில்லை. உண்மையான நேர்மையான தேசிய நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் உண்டாக்குவதில் இன்னும் ஓர் அங்குலமேனும் அடி எடுத்து வைக்கவில்லை. இன்றைய யதார்த்த நிலையை அப்பட்டமாக வெளிப்படுத்தி இருக்கிறார்.

எம்மிடம் உள்ள அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதால் எமது பலம் குறைந்துவிடப் போவதில்லை. மாறாக அது பிரிந்திருக்கும் சமூகங்களை ஒன்றிணைக்கும் என்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா யதார்த்த நிலையை எடுத்துக்காட்டி உள்ளார். அவருக்கு இப்போது பிறந்திருக்கும் சுடலைஞானம், மீண்டும் அரசியல் சகதிக்குள் கால் புதைப்பதற்கான எத்தனமாகவும் இருக்கலாம்.

எவ்வாறேனும், சந்திரிகாவின் புத்திமதியை காதில் போடும் நிலையில் ஜனாதிபதி மஹிந்த இல்லை என்பது தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி சிங்கள மக்களுக்கும் தெரியும்.

ஆனால் சர்வதேச நாடுகள் நாட்டம் கொண்டால், மனம் வைத்தால், சந்திரிகா கூறிய புத்திமதிகளை, ராஜபக்ஷ அரசை கவனத்தில் எடுக்கச் செய்யலாம். அதற்கான மந்திரக்கோல் அவற்றிடம் உண்டு.

கடந்தவாரம் நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் சர்வதேசம் எதிர்பார்த்த முடிவைத் தமிழ் மக்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

தமது தாயகப் பிரதேசத்தில் தம்மைத் தாமே நிர்வகிக்கும், ஆளும் உரிமை வேண்டும் என்று தமது வாக்குகள் மூலம் ஊன்றி, உறுக்கிக் கூறி உள்ளார்கள் தமிழ் மக்கள். இதனைச் சர்வதேசம் உன்னிப்பாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதன்போது, சந்திரிகா குமாரதுங்க கூறிய கருத்துக்களை, அரசியலில் ஓய்வுபெற்ற நிலையிலும் வெளியிட்ட யதார்த்தமான நிலைப்பாடுகளை, உண்மைகளை உள்வாங்கிக் கொள்வது சர்வதேசத்துக்குப் பயன்படுவதாக அமையும்.

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தலில் அளித்த வாக்குகளை அவர்களிடம் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பாக அனைத்துலகம் கணக்கில் கொள்ள வேண்டும். அதனை மனதில் வைத்து, தற்போது தன்னிடம் கைவசமுள்ள அஸ்திரத்துடன் இலங்கை அரசை நியாய வழிக்குக் கொண்டுவர வேண்டும். அதுவே தாக்கமான, பெறுமதியான பலனைத் தந்து, தமது ஆறு தசாப்த கால அரசியல் அடிமைத் தளையிலிருந்து தம்மை மீட்டெடுக்கும் என்று ஈழத் தமிழர்கள் நம்புகிறார்கள். சர்வதேசமே, இதனை மனதில் ஆழப் பதித்துச் செயற்படுக.

தமிழ் மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை வழங்கி, அதற்கடுத்து உங்கள் நலன்களை இலங்கையில் பேணுவதனை நாடியும் செயற்படுவதற்கு இது நல்ல வாய்ப்பைத் தரும். வெறும் அறிக்கைகள், [illegible] விகள், கிலுகிலுப்பைகளாகி அமுங்குமேயன்றி பா[illegible] செய்து பலனை நல்காது.

# கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் சேவை நீடிப்பில் அரசியல் தலையீடு

## வட மாகாணச் செயலருக்கு ஜோசப் ஸ்ராலின் கடிதம்

அச்சுவேலி, ஜூலை 27

வடக்கு மாகாணத்தில் பணிபுரியும் ''இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு 60 வயதுக்கு மேல் சேவை நீடிப்பு வழங்குவதில் மாறுபட்ட நடைமுறை கடைப்பிடிக்கப்படுவதுடன் அரசியல் அதிகார துஷ்பிரயோத்துடன் தேசிய கொள்கைக்கு முரணாகச் சேவை நீடிப்பும் வழங்கப்படுகின்றது. இது உடனடியாக சீர்செய்யப்படவேண்டும். இளம் அதிகாரிகளுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் யோசப் ஸ்ராலின் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரின் கவனத்துக்கும் கொண்டுவந்து சீர் செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

இலங்கைக் கல்வி நிர்வாக சேவையை சேர்ந்தவர்களுக்கு 60 வயதுக்கு மேல் சேவை நீடிப்பு வழங்குவதற்கு விசேடமாக சம்பந்தப்பட்டவர்களின் விவரம் குறிப்பிட்டு அமைச்சரவை அனுமதி பெறப்பட வேண்டும். ஆனால் வடக்கு மாகாண அதி காரிகளின் விடயத்தில் இந்த நடைமுறை பின்பற்றப் படவில்லை. அரசியல் தலை யீட்டுடன் அதிகாரத் துஷ்பிரயோகம் மேற் கொள்ளப் பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர் ஒருவருக்கு ''ஓய்வுபெறுவதால் பொறுப்புக்களை ஒப்படைக்குமாறும்''. ''பொறுப்புக்களை ஒப்படைக்கத் தேவையில்லை; கடமையில் தொடருங்கள்'' எனவும் இரண்டு வேறுபட்ட பணிப்புரைகள் ஒரே நேரத்தில் கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ளன. இவை எல்லாம் அதிகாரத் துஷ்பிரயோகத்தை வெளிப்படுத்துகின்றன.

இந்த வகையில் துணுக்காய் கல்வி வலயப் பணிப்பாளருக்கும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் என்ற பதவி உயர்வும் 60 வயதுக்கு மேற்பட்ட நிலையில் வழங்கப்பட்டுள்ளது.

முறைகேடான பதவி உயர்வு கல்வி நிர்வாகத்தில் நம்பிக்கை இல்லாத குளறுபடி நிலையைத் தோற்றுவிப்பதோடு, வடக்கின் கல்வி அபிவிருத்தியிலும் பாதிப்பை ஏற்படுத்தும். தேசிய கொள்கைக்கு அமைய மேலதிக சேவை நீடிப்புக்கள் வழங்கவேண்டும் - என்றுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மத்திய கல்வி அமைச்சின் செயலாளரை நேரில் சந்தித்து விளக்கி கூறி இருப்பதாகவும் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார். (த-11)

# கூட்டுறவு தினத்தை ஒட்டிய போட்டிகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

89 ஆவது சர்வதேசக் கூட்டுறவுத் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையினால் நடத்தப்படும் முன்பள்ளி மாணவர்கள், கூட்டுறவுப் பணியாளர்கள் மற்றும் அங்கத்தவர்கள் ஆகியோருக்கான குழு நடனப் போட்டிகள், நாடகப் போட்டிகள் என்பன இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாக உள்ளன.

முன்பள்ளி மாணவர்களுக்கான குழு நடனப் போட்டிகள் முற்பகல் 10 மணிக்கும் கூட்டுறவு அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களுக்கான நாடகப் போட்டிகள் பிற்பகல் 1 மணிக்கும் இடம்பெறவுள்ளன.

முன்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கூட்டுறவு உத்தியோகத்தர்கள் அனைவரையும் போட்டிக்குத் தயாராக வருமாறு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் செயலாளர் திருமதி. வே.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (த-26-311)

# சங்கக் கிளையில் திருட்டு முயற்சி: விழிப்படைந்த மக்களால் முறியடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்றை உடைத்து அங்கிருந்த பொருள்களைத் திருடர்கள் சூறையாட மேற்கொண்ட முயற்சி அப்பகுதி மக்களால் முறியடிக்கப்பட்டது.

இந்தத் திருட்டு முயற்சி கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சங்கத்தின் 20 ஆம் இலக்கக் கிளையே இவ்வாறு திருடர்களின் கைவரிசைக்கு இலக்கானது.

திருடர்கள் கிளையின் முன்பக்கக் கதவை கூரிய ஆயுதங்களால் உடைத்து உள்ளே சென்று பொருள்களை எடுத்துக்கொண்டிருந்தனர்.

கதவு உடைக்கப்பட்ட சத்தத்தால் விழிப்படைந்த அயலவர்கள் கூக்குரல் இட்டு ஒன்று சேர்ந்ததையடுத்து எடுத்த பொருள்களையும் அப்படியே போட்டு விட்டு திருடர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டு முயற்சியை முறியடித்து சங்கத்தில் இருந்த பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைப் பாதுகாத்தமைக்காக அப்பகுதி மக்களைக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி. கே. அருந்தவநாதன் பாராட்டியுள்ளார். (த-26)

# நல்லூர் ஆலயச் சூழலில் அமைந்துள்ள மலசலகூடங்களில் சுகாதாரச் சீர்கேடு

யாழ்ப்பாணம், ஜூலை 27

நல்லூர் ஆலயச் சூழலில் அமைந்துள்ள மலசல கூடங்களை வெளிமாவட்டங்களில் இருந்து வருகைதரும் உல்லாசப்பயணிகள் மற்றும் வர்த்தகர்கள் சுகாதாரமற்ற முறையில் பாவிப்பதால் ஆலயச் சூழலில் உள்ள பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆலயச் சூழலில் ஆண்கள், பெண்களுக்கென தனித்தனியாக மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனைப் பாவிக்கும் சுற்றுலாப்பயணிகள், வர்த்தகர்கள் சுகாதாரமற்ற முறையில் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் அந்தப் பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது.

மலசல கூடங்களில் இருந்து கடும் துர்நாற்றம் வீசுவதுடன், அவை சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றன.

இதனால் தொற்றுநோய்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்களும் அந்தப் பகுதியில் அதிகரித்துள்ளதுடன் ஆலயச் சூழலில் உள்ள பொது மக்களும் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

அடுத்த மாதம் இடம்பெறவுள்ள வருடாந்த உற்சவ காலத்தில் மலசல கூடங்களின் பாவனை அதிகமாகத் தேவைப்படுவதால் அதற்கு முன்னர் இதனைச் சீர் செய்வதற்கு உரிய அதிகாரிகள் கவனம் எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(த-313-496)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆஸ்பத்திரி புற்றுநோய் விடுதியில் சிறுவர்களுடன் உரையாடினார் சங்ககார

## நடை பயணம் இன்றுடன் நிறைவடையும்



யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்ககார, நேற்று யாழ். போதனா வைத்தியாசலையில் உள்ள புற்றுநோய் விடுதிக்குச் சென்று அங்கு சிகிச்சை பெறும் சிறுவர்களுடன் கலந்துரையாடினார். அத்துடன் அந்த சிறுவர்களுக்கு அன்பளிப்புக்களையும் அவர் வழங்கினார்.

இங்கு உரையாற்றிய சங்ககார தெரிவித்தவை வருமாறு:

இன்று சிரித்த முகத்துடன் உள்ள இந்தச் சிறுவர்களைப் போன்று எதிர்காலத்தில் ஏராளமான சிறுவர்கள் இந்தப் புற்றுநோயிலிருந்து விடுப்பட்டு சிரித்த முகத்துடன் வாழவேண்டும் இதற்கான முயற்சியே எமது நடைபயணம்.

இங்கேவந்திருக்கின்ற பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் முதலில் நான் நன்றி கூறுகின்றேன். இவர்கள் குணமாக்கப்பட்ட நிலையில் இங்கிருக்கின்றதைப் பார்க்கும் போது சந்தோசமாக இருக்கின்றது. நீங்கள் துணிவாக இந்த நோய்க்கு சிகிச்சை பெற்றதையிட்டு நான் பெருமையடைகின்றேன்.

யுத்த காலத்தில் நீங்கள் இங்கிருந்து மஹரகமவுக்குச் செல்லும் போது எதிர்நோக்கிய துன்பங்கள், தியாகங்கள் ஆகியவற்றை நான் நன்கு அறிவேன். இனிமேல் உங்களுக்கு அவ்வாறானதொரு பிரச்சினை ஏற்படாது. இந்த சிகிச்சை நிலையம் சிறப்பாகத் தொடர்ந்து இயங்க வேண்டும்.

இங்குள்ள சிறுவர்களைப் போன்றுதான் எனது பிள்ளையும். என்னுடைய இரண்டு வயதுப் பிள்ளையைப் போல் இங்கு பல சிறார்கள் இருக்கின்றனர். இவர்களையும் நான் எனது பிள்ளைகளைப் போலவே பார்க்கின்றேன் - என்றார்.

இதேவேளை -

நேற்று அதிகாலை யாழ். போதனா வைத்திய சாலையின் முன்னாலிருந்து நடை பயணத்தை ஆரம்பித்த குழுவுக்கு இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்ககார தலைமை வகித்தார்.

இந்தக் குழுவினருக்கு வழியின் இரு மருங்கிலும் நின்ற பொது மக்கள் ஆதரவு தெரிவித்ததுடன் மலர் மாலைகள் அணிவித்துக் கௌரவித்தனர். புத்தூர் சந்தியில் மக்கள் நிறைகுடம் வைத்து நடைபாதை அணியினரை வரவேற்றனர்.

இன்றுடன் இந்த நடை பயணம் முடிவடையவுள்ளது. இந்தக் குழுவினர் இன்று காலை வல்லைச் சந்தியிலிருந்து புறப்பட்டு பருத்தித்துறை வெளிச்ச வீட்டை அடையவுள்ளனர்.

(த-15-86-23)

## நடமாடும் வைத்திய சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 27

நல்லூர் ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் உறுப்பினர்கள் மற்றும் நல்லூர் பிரதேசத்திலுள்ள ஆயுள்வேத வைத்தியர்கள் அனைவரும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குக் கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் நடைபெறவிருக்கும் நடமாடும் வைத்திய சேவையில் கலந்துகொள்ளுமாறு நல்லூர் ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் தலைவர் டாக்டர் வி.வேதநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுவரை பதிவு செய்யப்படாத வைத்தியர்களை அன்றைய தினமும் அடுத்த நாளும் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.(க)

## தீயணைப்பு சேவை தற்காலிகமாக இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்.மாநகரசபையின் தீயணைப்புச் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அவசர திருத்த வேலைகள் இடம்பெறுவதால் இந்தச் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்துள்ளார். (ம-7)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமத்தில் நான்கு பிரதேசங்களில் 1636 குடும்பங்கள் குடியமரவில்லை

## கண்ணிவெடி அகற்றாமையே காரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 27
சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், கோப்பாய் ஆகிய பிரதேசங்களில் 1,636 குடும்பங்களைச் சேர்ந்த 5,968 பேர் இதுவரை மீள்குடியமர்த்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசங்களில் கண்ணி வெடி அகற்றும் பணிகள் முற்றுப்பெற்று அதற்கான சான்றிதழ்கள் வழங்கப்படாமையே மீள்குடியமர்வு இடம் பெறாமைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சங்கானைப் பிரதேசத்தில் மூன்று கிராமசேவகர் பிரிவுகளில் 664 குடும்பங்களைச் சேர்ந்த 2,563 பேரும், சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 409 குடும்பங்களைச் சேர்ந்த 1,445 பேரும், உடுவில் பிரதேசத்தில் குப்பிளான், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் 174 குடும்பங்களைச் சேர்ந்த 644 பேரும், கோப்பாய் பிரதேசத்தில் 389 குடும்பங்களைச் சேர்ந்த 1326 பேரும் இதுவரை மீள்குடியமர்த்தப்படுவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குடும்பங்களை வெகு விரைவில் மீள்குடியமர்த்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.
(த-313)

# மோதலுக்குத் தயார் நிலையில் இருந்த 38 பேர் வாள், கத்திகளுடன் சிக்கினர்

## அல்வாயில் நிகழவிருந்த மோதல் தவிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27
வடமராட்சி, அல்வாய்ப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த பெரும் கோஷ்டி மோதல் ஒன்றை நெல்லியடிப் பொலிஸார் முறியடித்துள்ளனர்.

தகவல் கிடைத்து குறிப்பிட்ட இடத்துக்குச் சென்ற பொலிஸார் சுற்றிவளைத்து 38 பேரைக் கைது செய்தனர்.

அல்வாய் வைரவர் கோயிலுக்குச் சமீபமாக அரிவாள், கத்திகள், அசிட் மற்றும் பொல்லுகள், தடிகளுடன் முட்டி மோதிக் கொள்ளத் தயாரான நிலையில் இளைஞர்கள் இருந்தனர். இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. அங்கு எந்த வேளையிலும் மோதல் வெடிக்கலாம் என்ற நிலையில் ஊர்மக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

அதை அடுத்து பொலிஸார் அங்கு ஜீப்களில் விரைந்து வந்திறங்கி அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்துக் கொண்டனர். எவரும் தப்பி ஓட முடியாத நிலையில் அனைவரும் ஆயுதங்கள்சகிதம் சிக்கிக்கொண்டனர். ஆலய இசை நிகழ்ச்சி ஒன்றின் போது இளைஞர் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட முறுகலே இந்த மோதல் ஆயத்தத்துக்குக் காரணம் என்று கூறப்பட்டது.

பொலிஸாரிடம் சிக்கிய 38 பேரும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் 38 பேரில் 36 பேரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். ஏனைய இருவரும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆரம்பமாகவுள்ள ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருப்பதால் நீதவான் அவர்களை எச்சரித்து விடுவித்தார். (ஒ-319)

## உங்கள் உரிமை...



உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்: மண்ணின் மகிமை காணி உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வது தொடர்பான நிகழ்வு நல்லூர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.டி.ஏ.பி பொறலஸ் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (த-7)

# தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு 35 பரப்புக் காணி அன்பளிப்பு

அளவெட்டி, ஜூலை 27
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு 35 பரப்புக் காணி, அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் காணியில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இயங்கும் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெறவரும் நோயாளிகளின் நன்மை கருதியே தாம் இந்தக் காணியை வழங்கியதாகவும், இந்தக் காணியில் இவர்கள் தங்கிச் சிகிச்சை பெறுவதற்கான விடுதிகள் அமைக்கப்படவுள்ளமை வரவேற்கக்கூடிய விடயம் எனவும் இந்தக் காணியை அன்பளிப்புச் செய்தவர்களில் ஒருவர் கூறினார்.

மேற்படி காணி வலி. வடக்கு பிரதேச செயலரின் அனுசரணையுடன் கனரக வாகனம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகிறது. (த-36)

# மாலையில் மட்டும் இயங்கும் மானிப்பாய் வைத்தியசாலை

## பிரதேச மக்கள் பெரும் சிரமம்

நவாலி, ஜூலை 27
மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை மாலை வேளையில் மட்டும் இயங்கி வருவதால் காலையில் அவசர சிகிச்சைக்காக நோயாளிகள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ஓய்வில் சென்றுள்ளதைத் தொடர்ந்து கடந்த ஆறு மாத காலமாக உடுவில் அரசினர் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரையும் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் பணிபுரிந்து வருகின்றார்.

இதனால் காலை வேளையில் சிகிச்சை பெற வரும் பாடசாலைப் பிள்ளைகள், உத்தியோகத்தர்கள், அன்றாட உழைப்பாளிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேலும் இங்குள்ள பிரசவ விடுதியில் முன்னர் அடிக்கடி பிரசவங்கள் இடம் பெற்று வந்தன. கடந்த இரண்டு மாதங்களாகப் பிரசவத்துக்கு வருவோர் தொகையும் மிகவும் குறைந்துள்ளது.

இந்த வைத்தியசாலை சீராக இயங்காததினால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இந்தப் பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
(த-100)

# போசாக்கு வேலைத் திட்டத்தில் சுகாதாரத் தொண்டர் புறக்கணிப்பு

## அனுபவம் குறைந்தவர்களுக்கு நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 27
சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 10 வருடங்களுக்கு மேலாகத் தொண்டர் அடிப்படையில் பணியாற்றிய 75 இற்கு மேற்பட்டோர் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் அந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டத்தில் இருந்து புறக்கணிக்கப்பட்டுக் குறைந்த காலச் சேவையுடையவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டமை குறித்துக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

ஜப்பான் நிறுவனத்தினர் இந்தப் பிரதேசத்தில் போசாக்கு செயற்றிட்டம் ஒன்றை விரைவில் ஆம்பிக்கவுள்ளனர். இந்த திட்டத்தைச் செயற்படுத்த சுகாதாரத் தொண்டர்களிலிருந்து தெரிவு செய்து அனுப்புமாறு கோரப்பட்டிருந்தது.

இதன் போது 10 வருடங்களுக்கு மேல் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றுவோர் புறக்கணிக்கப்பட்டு ஒரு வருடம், ஒன்றரை வருடம் தொண்டர்களாகப் பணியாற்றிய 14 பேரின் பெயர்கள் திட்ட நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த சுகாதாரத் தொண்டர்கள் இந்தத் திட்டத்துக்குக் கோப்பாய் பிரிவிலிருந்தும் ஆள்களைச் சேர்க்கவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

சுகாதாரத் தொண்டர்களாக பணியாற்றிய இவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வந்த உலர் உணவுப் பொருள்களும் கடந்த டிசெம்பர் மாதத்துடன் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் இந்த வேலைத் திட்டத்தில் இணைவோருக்கு மாதாந்தம் கொடுப்பனவு வழங்கப்படுமெனவும் தெரிவித்தனர்.

புறக்கணிப்புத் தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போது, அரச நியமனம் வழங்கப்படும் போது, சேவைக் காலம் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமென்பதால் இந்தத் திட்டத்தில் இணைக்கப்படவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது. (த-207)

## மக்களின் மீள்குடியமர்வை அடுத்து

# பருத்தித்துறை - வடமராட்சி கிழக்கு பஸ்சேவையை அதிகரிக்கக் கோரிக்கை

வடமராட்சி, ஜூலை 27
பருத்தித்துறைக்கும் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கும் இடையே மக்களின் போக்குவரத்து அதிகரித்துள்ளதால் பருத்தித்துறையிலிருந்து இந்தப் பகுதிக்கு மேலதிக பஸ் சேவையை நடத்தவேண்டும் எனப் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பிரதேச மக்களுக்கெனப் பருத்தித்துறையிலிருந்து கட்டைக்காடு வரை 6 தடவைகள் இ.போ.ச பஸ்சேவைகளும் 5 தடவைகள் தனியார் பஸ் சேவைகளும் இடம்பெற்று வருகின்றன. இதில் இ.போ.ச. பஸ்சேவையில் சிறிய பஸ்களே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

மீள்குடியேற்றம் இடம்பெற்று வடமராட்சி கிழக்குக்குச் சென்று வருவதற்கான பாதை திறக்கப்பட்டதையடுத்துப் பருத்தித்துறை - கட்டைக்காடு பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் நாகர் கோயில் பாதை திறக்க முன்னர் பருத்தித்துறையிலிருந்து அம்பன் வரை நடத்தப்பட்டு வந்த பஸ்சேவை நிறுத்தப்பட்டது.

அம்பனுக்கான பஸ்சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாலும் நாகர்கோயில் பிரதேசத்தின் ஒரு பகுதியில் மீளக்குடியேற்றம் இடம்பெற்றுள்ளதாலும் வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்களுக்குப் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்தப் போக்குவரத்து நெருக்கடியைத் தீர்க்கப் போக்குவரத்து அதிகமான நேரத்தில் பருத்தித்துறை - கட்டைக்காடு பிரதான பாதையில் மேலதிக பஸ் சேவையை அல்லது யுத்த காலத்துக்கு முன்னர் இடம்பெற்ற பருத்தித்துறை - நாகர்கோயில் பஸ் சேவையை நடத்துமாறு வடமராட்சி கிழக்கு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைபெறப் போகும் தேர்தல்களின் வெற்றிக்கு துணுக்காய், மாந்தை கிழக்கு மக்கள் முகவுரை

## வினோநோகராதலிங்கம் எம்.பி அறிக்கை

முல்லைத்தீவு,ஜூலை27

புதுக்குடியிருப்பு, மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல்களின் வெற்றிக்கான முகவுரையை மாந்தை கிழக்கு மக்களுடன் துணுக்காய் பிரதேச மக்களும் எழுதி ஆரம்பித்து வைத்துள்ளார்கள் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒத்திவைக்கப்பட்ட புதுக்குடியிருப்பு, மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல்களின் வெற்றிக்கான முகவுரையை மாந்தை கிழக்கு மக்களுடன் துணுக்காய் பிரதேச மக்களும் எழுதி ஆரம்பித்து வைத்துள்ளார்கள், தமிழ் தேசியக் கூட்டமைப்பே தமிழ் மக்களின் ஒரே அரசியல் பலம் என்பதனை முல்லை மாவட்ட மக்கள் ஏற்று வழங்கிய மற்றுமொரு தீர்ப்பு இதுவாகும்.

பல்வேறு அழுத்தங்கள், மிரட்டல்களுக்கு மத்தியிலும் எமது வேட்பாளர்களும் மக்களும் பெற்றுத் தந்த இந்த வெற்றியானது வன்னி யுத்தத்தில் பலி கொள்ளப்பட்ட விலை மதிப்பற்ற எமது உடன் பிறப்புக்களுக்கும், இதே ஜூலைத் தினங்களில் வெலிக்கடையில் வெட்டிச் சாய்க்கப்பட்ட எமது தலைவர்கள், தியாகிகளுக்கும் சமர்ப்பிக்கின்ற வெற்றியாகும்.

இத்தேர்தல் வெற்றிக்கு துணிவுடனும், உணர்வுடனும் உழைத்த வேட்பாளர்கள், ஆதரவாளர்கள், தமிழ் உணர்வாளர்கள், வாக்காளர்கள் அனைவருக்கும் எனது நன்றியை பகிர்ந்து கொள்கின்றேன்.

(க)



அண்மையில் நல்லூர் லயன்ஸ் கழகத்தின் தலைவராக பொறுப்பேற்றுள்ள பிரபல தொழிலதிபரும் சமூக சேவையாளருமான லயன் ஈ.எஸ்.பி. நாகரத்தினத்தின் சமூக சேவையைப் பாராட்டி சர்வதேச லயன்ஸ் கழகங்களின் தலைவரால் வழங்கப்பட்ட சிறப்புச் சான்றிதழை இலங்கை மாவட்டம் 306 பி இன் உப மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜா அவருக்குக் கையளிக்கிறார். (த)

# போர்க்குற்றம் புரிந்த புலித் தலைவர்களை இலங்கையிடம் ஒப்படைக்க வேண்டும்

## போர்க் ரோவின் நோர்வேக்கு வலியுறுத்து

போர்க்குற்றச்செயல்களுடன் தொடர்புடைய விடுதலைப் புலித்தலைவர்களை இலங்கையிடம் ஒப்படைக்க வேண்டும் என்று பயங்கரவாதத்திற்கு எதிரான நோர்வே அமைப்பின் தலைவர் போர்க் ஆர். ரோவின் தெரிவித்துள்ளார் என்று திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி பத்திரிகைச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பயங்கரவாதத்துடன் தொடர்புடைய நபர்களை நோர்வே அரசு உடனடியாக இலங்கை அரசுடன் ஒப்படைக்க வேண்டும்

இலங்கையில் புலிகளுக்கு ஆதரவளித்ததன் விளைவுகளை இன்று நோர்வே அனுபவித்து வருகின்றது. நோர்வே அரசு பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்ததாக பகிரங்கமாக ஒப்புக் கொள்ளவேண்டும்.

விடுதலைப் புலிகளுக்கு நோர்வே நிதி உதவிகளை வழங்கியுள்ளது. எனவே நோர்வே அரசு இலங்கை யிடம் மன்னிப்புக்கோர வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார் என்று அந்தப் பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சிங்கப்பூர் விமான நிலைய ஊழியருக்கு இலங்கையர் லஞ்சம்

## அந்த நாட்டு நீதிமன்றம் அபராதம்

சிங்கப்பூர் விமான நிலையத்தைச் சேர்ந்த ஊழியர் ஒருவருக்கு லஞ்சம் வழங்கினார் என்கிற வழக்கில் குற்றத்தை ஒப்புக் கொண்ட இலங்கை வர்த்தகர் ஒருவருக்கு சிங்கப்பூர் நாட்டு மாவட்ட நீதிமன்றம் ஒன்று 5000 அமெரிக்க டொலர் அபராதம் விதித்து நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

பிரதீப் ரூபசிங்க (வயது 41) என்ற மேற்படி வர்த்தகர் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக அடிக்கடி சிங்கப் பூருக்குச் செல்வார். சிங்கப்பூர் விமான நிலையத்தில் பயணிகள் உதவியாளராகக் கடமையாற்றுகின்ற வில்லியம் வொங் என்பவருடன் நெருங்கிப் பழகி அவரைத் தம்வசமாக்கிக் கொண்டார்.

இதனால் அந்த வர்த்தகர் சிங்கப்பூருக்குச் செல்லும்போது அவரது பயணப்பொதிகளை சோதனைக்குட்படுத்தாத வகையில் வில்லியம் வோங்குக்கு லஞ்சம் வழங்கியுள்ளார். 2008 ஆம் ஆண்டு நடுப் பகுதியில் 300 டொலரும், அதே வருடம் ஒக்ரோபர் மாதம் 400 டொலரும் வொங்குக்கு லஞ்சம் கொடுத்தி ருக்கின்றார்.

எனவே மேற்கண்ட குற்றச் சாட்டுக்களை ஏற்றுக் கொண்டமையால் குறைந்த பட்சத் தண்டனைதான் அவருக்கு வழங்கப்பட்டது.

# நைகர் நாட்டு முன்னாள் போராளிகளுக்கு இலங்கையில் தொழில் பயிற்சி

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான நைகர் டெல்டா நாட்டின் முன்னாள் போராளிகளுக்கு இலங்கையில் தொழில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சிகளுக்காக நைகர் நாட்டிலிருந்து முன்னாள் ஆண் போராளிகள் 50 பேர் இலங்கை வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி முன்னாள் போராளிகளுக்கு படகு கட்டுமானம், நீருக்கு அடியி லான நடவடிக்கைகள், ஆழ் கடல் பொருத்துக்கள் மற்றும் முத்துக்குளித்தல் உட்பட்ட பல துறைகளில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இலங்கையில் உள்ள ரொப்ப சேஞ் (Topher Zhang) என்ற தொழிற் கல்வி பயிற்சி நிறுவனத்தில் இவர்களுக்கான 6 மாதங்களுக்கான பயிற்சி வழங்கப்படவுள்ளது.

**காணி விற்பனைக்குண்டு**

உரும்பிராயில் ஒஸ்கா வீதிக்கும் பெற்றோல் நிரப்பு நிலையத்துக்கும் இடையில் பலாலி வீதிக்கு சமீபமாக 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. T.P No. 0777031293

**அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

50 நாள்கள் நிரம்பிய முதலாவது தடுப்பு மருந்து கொடுக்கப்பட்ட (புத்தகத்துடன்) ஆண்,பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
துர்க்காபாம், மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.
தொடர்பு 0779346599

**தேவை**

உணவகத்துக்கு ரொட்டி தயாரிப்பதில் அனுபவமுள்ளவர் தேவை. தினச் சம்பளம் 1,500/- தங்குமிட வசதியுண்டு.

தொடர்பு:- S.K உணவகம்,
கண்டி வீதி, சாவகச்சேரி.
T.P- 0775591366

**கொவிசெத**

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 817
சீட்டிழுப்பு திகதி 25.07.2011

எழுத்து: D
வெற்றி இலக்கங்கள்: 32 35 42 70

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 12,440,256.000 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 12 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 346 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 685 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 16748 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 9546 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 239144 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 37603 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 10,208,580.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 13,040,129.60

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவுதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360

இணையதளம்: www.nlb.lk

# அக்கராயன் ப.நோ.கூ. சங்கம்

## கிளைப் பொதுச் சபைக் கூட்டங்களுக்கான அறிவித்தல்

### கிளைக் குழுக்களை தெரிவு செய்தல் - 31.07.2011 ஞாயிற்றுக்கிழமை

மேற்படி சங்கத்தின் துணை விதி 27, 28 இன்படி இச்சங்கத்தின் கீழ் வரும் கிளைகளில் கிளைக் குழுக்களைத் தெரிவுசெய்வதற்காக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் குமாரசிங்கம் அருந்தவநாதன் அவர்களால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களைக் கொண்டு கிளைப் பொதுச் சபைக் கூட்டங்களை நடத்துவதற்கு அறிவிக்கப்பட்டதற்கு அமைய பின்வரும் கிளைப் பொதுச் சபைக் கூட்டங்களை கீழ் குறிப்பிட்ட இடங்களில் நடத்துவதற்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. இதற்கமைய வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்களுக்குக் கூட்ட அறிவித்தல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கிளைக் குழுக்களைத் தெரிவுசெய்வதற்காக கிளைப் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் இடத்துக்குச் சமுகமளித்துத் தெரிவுசெய்ய உதவவும். அறிவித்தல் கிடைக்கப்பெறாவிட்டால் அவ்வறிவித்தலை கருத்தில் கொண்டு கூட்டத்துக்கு சமுகமளிக்கமுடியும்.

1) கிளைப் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் திகதியும் நேரமும் - 31.07.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி
2) கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம்

| தொடர் இலக்கம் | கிளை இலக்கம் | கிளையின் பெயர் | கிளைப் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01 | 01 | ஸ்கந்தபுரம் | ஸ்கந்தபுரம் கிளை நிலையம் |
| 02 | 02 | கோணாவில் | கோணாவில் கிளை நிலையம் |
| 03 | 03 | யூனியன் குளம் | யூனியன் குளம் கிளை நிலையம் |
| 04 | 04 | அக்கராயன் | அக்கராயன் கிளை நிலையம் |
| 05 | 05 | வன்னேரிக்குளம் | வன்னேரிக்குளம் கிளை நிலையம் |
| 06 | 06 | ஆனைவிழுந்தான் குளம் | ஆனைவிழுந்தான் குளம் கிளை நிலையம் |
| 07 | 07 | ஊற்றுப்புலம் | ஊற்றுப்புலம் கிளை நிலையம் |
| 08 | 08 | கண்ணகைபுரம் | கண்ணகைபுரம் கிளை நிலையம் |
| 09 | 09 | ஸ்கந்தபுரம் மேற்கு | ஸ்கந்தபுரம் மேற்கு கிளை நிலையம் |

முக்கிய கவனத்துக்கு

1) கிளைப் பொதுச் சபைக் கூட்டத்துக்கான நிறைவெண் - கூட்டத்துக்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுள்ள அங்கத்தவர்களின் 1/4 அல்லது 25 பேர் இதில் எது குறைவோ அதுவாகும்.
2) கிளைப் பொதுச்சபைக் கூட்டத்தில் நிறைவெண் இல்லாவிடினும், கிளைக் குழுத் தெரிவுக்கு (5) இற்குக் குறைவான நியமனங்கள் செய்யப்படுமிடத்து கிளைக் குழு உறுப்பினர்கள் தெரிவு நடைபெறாது கூட்டம் கலையும்.
3) கிளைப் பொதுச் சபைக்கு சமுகமளித்துள்ள தகுதியான வாக்காளர்களிடமிருந்து கிளைக் குழுவுக்கு 18-35 வயதுக்கிடைப்பட்ட இருவரையாவது உள்ளடக்கியதாக அறுவரும் மகளிர் குழுவிலிருந்து இருவரும், பண்டக் குழுவிலிருந்து ஒருவரும் தெரிவு செய்யப்படுவர்.

செயலாளர்,
அக்கராயன் ப.நோ.கூ. சங்கம்.

(சி/2097)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியனம் கேட்டீர்களா?

## ஆத்திலை போறது தானே அண்ணை பிடி தம்பி பிடி...?!

தலைப்பைப் பார்த்ததும் என்ன எதுக்கு என்றுயோசிப்பது தெரிகிறது...சற்றுப் பொறுங்கள்.

குடிசன மதிப்பீடு என்பது நாடுகளின் அரசாங்கங்களால் பல்வேறு நோக்கங்கள் கருதி, கிரமமாக மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடாகும். அந்நியர் ஆட்சிக் காலத்தில் தலைவரிக்காக இத்தகைய கணக்கெடுப்புக்கள் நடத்தப்பட்டன. அந்தணர்கள், பெண்கள், வயது முதிர்ந்தவர்கள், சிறுவர்கள், நோயாளிகள் ஆகியோர் தவிர்ந்த ஏனையோர் ஒவ்வொருவரும் வரி செலுத்த வேண்டும். அதைத் தலைவரி என்றார்கள். அதற்காகவே அப்போது மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்தத் தலைவரியிலிருந்து தப்புவதற்காகப் பூனூல் தரித்தவர்களின் வழித்தோன்றல்கள் பலரும் இன்று அந்தணர்களாக உள்ளமை பலரறியா உண்மையாகும்.

இலங்கையில் முதலில் 1871ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் திகதி சட்டப்படியான குடிசன மதிப்பீடு நடத்தப்பட்டது. அதன் பின்னர் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை இது நடத்தப்பட்டு வந்துள்ளது. இடையில் 1946,1953,1963 என சிறிய வருட இடைவெளி காணப்பட்ட போதும் ஒழுங்கு முறையாக நடத்தப்பட்டது. 1981இற்குப் பின் வடக்கு, கிழக்குப் பிரதேசத்தின் அரசாங்க நிர்வாகம் முழுமையாக அமுல் நடத்தப்பட முடியாத சூழலில் 1991இல் கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை. 2001இல் வடக்கு, கிழக்கின் ஏழு மாவட்டங்களையும் தவிர்த்து அம்பாறை உட்பட 18 மாவட்டங்களில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இந்தாண்டு இலங்கை முழுவதும் ஒரு குடைக்கீழ் கொண்டு வரப்பட்ட நிலையில், 14ஆவது குடிசன மதிப்பீடு நடத்தப்படுகிறது. தொகைமதிப்பு புள்ளி விவரத் திணைக்களத்தால் நடத்தப்படும் குடிசன மதிப்பீட்டுக்குப் புறம்பாக, பாதுகாப்பு அமைச்சு தனியாக இராணுவத்தினரை ஈடுபடுத்தி மற்றொரு குடிசன மதிப்பீட்டை மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. அதற்கு எதிர்ப்புக் கிளம்பவே மூலோபாயம் மாற்றப்படாமல் தந்திரோபாயம் மாற்றப்பட்டு இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது.

இரண்டு செயற்பாடுகளும் புள்ளி விவரத் திணைக்களத்தால் ஒருங்கிணைக்கப்பட்டாலும், பாதுகாப்பு அமைச்சுக்கான மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு வழக்கமான கிராம சேவகர்களோ, முகாமை உதவியாளர்களோ தெரிவுசெய்யப்படவில்லை. மாறாக கல்விப் புலத்திலிருந்து அதிபர்கள், ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மதிப்பீடுகள் ஓரளவு பூர்த்தியடைந்துள்ளன. இந்த மதிப்பீட்டை மேற்கொண்டவர்களில் பலர் இடியப்பச் சிக்கலுக்குள் மாட்டுப்பட்டனர். அதாவது கிராமசேவகர்களின் கணக்குகளிலிருந்து இவர்களின் கணக்குகள் மாறுபட்டன. சில கிராமசேவகர்கள் குடும்பங்கள் இல்லா நிலையில் பதிவுகளை வைத்திருந்து உதவிகளைப் பெற்று வந்துள்ளனர். சில குடும்பங்களில் வெளிநாடுகளில் வதிபவர்களும் உள்ளூரில் வதிவதாகக் காட்டப்பட்டு, அவர்களுக்கான நிவாரணங்களும் தாராளமாக வழங்கப்படுகின்றன. ஒரு கிராமசேவகர் பிரிவில் மதிப்பீட்டை மேற்கொண்ட ஆசிரியர்ஒருவர் நெஞ்சு பொறுக்காமல் பல விடயங்களைக் கூறி மனம் வெதும்பினார்.

உண்மையாக வீட்டுத்திட்டம் முதலிய உதவிகள் தேவைப்படும் குடும்பங்களுக்கு எவ்வித உதவிகளும் வழங்கப்படவில்லை. அவர்கள் கிராம அலுவலரால் அலைக்கழிக்கப்பட்டு வந்துள்ளனர். மாறாக நல்ல வசதியான நிலையில் உள்ள உறவினர்கள் சகல வசதிகளையும் பெற்றுள்ளனர். அந்த உதவிகளுக்கு எந்த வகையிலும் பொருத்தமில்லாதவர்கள் அவர்கள். அதேவேளை 20 குடும்பங்கள் அந்த இடத்தில் இல்லாத நிலையில் அவர்களுக்கான நிவாரணங்கள் பெறப்படுகின்றன. இந்த நிவாரணங்கள் கிராம அலுவலருக்கு, அவரது எடுபிடிகளுக்கு, சங்கக் கடை முகாமையாளருக்கு எனப் பகிரப்படுகின்றன.

ஆத்திலை போறதுதானே! அண்ணை பிடி! தம்பி பிடி! என்று கிராமத்தில் ஒரு பழமொழி உள்ளது. அதுதான் இங்கும் நடக்கிறது. நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் என்ற தமிழ் மூதாட்டி ஔவையின் கூற்றும் இதற்கு நன்கு பொருந்தி வருகிறதல்லவா!

விழிச்சான் குஞ்சு.

# 'சனல்-4' வீடியோ வெளியிட்ட ஆவணப்படம் போலியானது

### நல்லிணக்க ஆணைக்குழு தெரிவிப்பு

இலங்கையில் போர்க் குற்றங்கள் இடம்பெற்றதாக பிரிட்டனின் 'சனல் -4' தொலைக்காட்சி வெளியிட்ட காணொளி, போலியான தகவல்களை உள்ளடக்கியதென கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஜனாதிபதி ஆணைக்குழு மேற்கொண்ட விசாரணைகளில் தெரிவிக்கப்படுகின்றது.

தொழில்நுட்ப நிபுணர்களின் ஊடாக, இந்தக் காணொளி தொடர்பில் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக நல்லிணக்க ஆணைக்குழுவால் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் காணொளியில் காணப்படும் பல விடயங்கள் செம்மைப்படுத்தப்பட்டவையாகவும், சில காட்சிகள் பொய்யான பின்னணி மற்றும் கட்டமைப்புக்களுடன் உருவாக்கப்பட்டவை எனவும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இந்த விசாரணைகளின் போது, 'சனல் -4' காணொளி தொடர்பில் பல்வேறு வல்லுனர்கள் வெளியிட்ட கருத்துக்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டதாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கமைய, இந்த விசாரணைகளின் பெறுபேறுகளை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# 800 முறைப்பாடுகள் தொடர்ந்து கிடப்பில்

கொழும்பு, ஜூலை 27

மனித உரிமை மீறல் தொடர்பான 800 முறைப்பாடுகள் கிடப்பில் உள்ளதாக மனித உரிமை ஆணைக்குழு அறிவித்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக மனித உரிமை ஆணைக் குழுவின் பணிகள் முடங்கிக் கிடந்தமையே இதற்குக் காரணம் என ஆணைக் குழுவின் தலைவர் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

உச்ச நீதிமன்றம், மேன் முறையீடு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களைச் சேர்ந்த ஐந்து நீதிவான்களிடம் இந்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்தும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். குறுகிய காலப்பகுதியில் முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ச)

## நினைவுக்குரல்...



காலஞ்சென்ற நீதியரசர் கே.பாலகிட்ணர் நினைவுச் சொற்பொழிவு கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, நீதிபதிகள், சட்டத்தரணிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

### பரீட்சை ஆணையாளர் கூறுகிறார்

கொழும்பு,ஜூலை27

இந்த ஆண்டு ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரலாற்றில் முதல் தடைவையாக இந்த வருடம் நடைபெறும் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்கு 2 லட்சத்து 94 ஆயிரம் பேர் தோற்றுகின்றனர். இவர்களுள் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 90 ஆயிரமாகும். வட பகுதியில் அமைதி நிலவுவதால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இருந்து அதிகமானவர்கள் பரீட்சைக்கு விண்ணப் பித்துள்ளமையே இந்த அதிகரிப்புக்கு காரணமாகும். இவர்கள் அனைவருக்கும் பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் நேற்றுமுன்தினம் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன- என்றார். (ச)

# பிரிட்டன் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் பொதுநலவாய நாடுகளின் செயலாளருடன் பேச்சு

கொழும்பு, ஜூலை 27

பிரிட்டனுக்குச் சென்ற எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க நேற்றுமுன்தினம் பொதுநலவாய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கம லேஷ் சர்மாவை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

லண்டன் நகரில் உள்ள மெல்பொரோ மாளிகையில் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மாவுடன் எதிர்கட்சித் தலைவர் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய நாடாளுமன்ற ஒன்றியத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மற்றும் தெற்காசிய நாடுகளின் தற்கால அரசியல் நிலைமைகள் என்பன குறித்தும் இரு தரப்பினரும் கலந்துரையாடியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

# போக்குவரத்து முற்கொடுப்பனவு அட்டைகள் அறிமுகம்

### போக்குவரத்து அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை27

போக்குவரத்துத் தொடர்பில் முற்கொடுப்பனவு அட்டைகளை அறிமுகம் செய்வதற்காக போக்குவரத்து அதிகாரிகள் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாக போக்குவரத்து அமைச்சு தெரி வித்தது. இந்தப் புதியமுறை 2013 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்ய திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய முறை பற்றி பஸ் சங்கங்களுடனும் போக்குவரத்து நிறுவனங்களுடனும் பேசப்பட்டபோது அவர்கள் இது பற்றி மிக ஆர்வமாக இருந்ததாக போக்கு வரத்து செயலாளர் விக்டர் சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய முற்கொடுப்பனவு அட்டை முறைமை பயன்பாட்டுக்கு வரும்போது நாணயக் குறிக்கோள் பற்றிய பிரச்சினை அற்றுப் போகும். பஸ் நடத்துனர்கள் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமலும் போகும்.

நாம் இந்த முறை பற்றி மேலும் ஆராய வேண்டும்.

இந்தத் திட்டத்தில் தனியார் துறையினர் முதலீடு செய்யத் தயாராக உள்ளனர் என விக்டர் சமரவீர மேலும் தெரிவித்தார். (ச)

## பொருளாதாரத் தடை வந்தால்

# 13 மில்லியன் டொலரை பறிகொடுக்கும் இலங்கை

நியூயோர்க், ஜூலை 27

இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தக் குற்றங்களுக்குப் பதில் அளித்தல், அவசரகாலச் சட்டத்தை நீக்குதல், ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தல் ஆகியவற்றை நிறைவேற்றாவிட்டால் அமெரிக்காவிடமிருந்து கிடைக்கவுள்ள 13 மில்லியன் டொலர் நிதியை இலங்கை இழக்க நேரிடும் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பான தீர்மானம் ஒன்றை அமெரிக்க வெளிவிவகாரக் குழு கடந்த வியாழக்கிழமை நிறைவேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பாக பிரிட்டனின் 'சனல் 4' ஆவணத் திரைப்படத்தை அமெரிக்க காங்கிரஸ் அரங்கத்தில் திரையிட்டதை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என அமெரிக்க காங்கிரஸ் தெரிவிக்கின்றது.

இதேவேளை, இலங்கைக்கான நிதி உதவிகளை நிறுத்த அமெரிக்க [illegible] சபையும், அமெரிக்க காங்கி[illegible] அங்கீகாரம் வழங்கவேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளணிப் பற்றாக்குறையால் அவதிப்படும் வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி

## அதிபர் கவலை

வவுனியா, ஜூலை 27

வவுனியா தொழில் நுட்பக் கல்லூரியில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையால் கல்லூரி நிர்வாகத்தினர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாகப் பதிவாளர் பதவி வெற்றிடமாக உள்ளதால் கல்லூரியின் செயற்பாடுகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும் மாணவர்கள் தொடர்பான அலுவலக வேலைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் பல்வேறு பிரச்சினைகளும் தோன்றுவதற்கு வாய்ப்புக்கள் தோன்றியுள்ளன.

மேலும் கல்லூரியின் தரவுகளைப் பதிவு செய்வதற்கெனக் கணினி உத்தியோகத்தரும் இல்லை. இதனால் பெரும் சிக்கல் நிலை தோன்றியுள்ளதுடன் அலுவலக வேலைகளும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆளணிக் குறைபாடுகள் காரணமாக கல்லூரி நிர்வாகத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வாக ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டுமெனத் தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (க-421)

## முதியோரின் முன்மாதிரி



ஆவலுடன் சிறார்கள்: கனடாவில் வசிக்கின்ற முதியோர் சிலரின் பங்களிப்புடன் ஸ்கந்தபுரம் இல. 02 அ.த.க.பாடசாலை மாணவர்களுக்குக் காலணிகள் வழங்கும் நிகழ்வு நடைபெறுகின்றது.

# மாணவரின் கல்வியைப் பாதிக்கும் யோகபுரம் பாடசாலைக் கட்டடங்கள்

மல்லாவி, ஜூலை 27

யோகபுரம் மகாவித்தியாலயத்தின் பாடசாலைக் கட்டடங்கள் மோசமான நிலையில் காணப்படுவதால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகப் பாடசாலை அதிபர் யோகானந்தராஜா தெரிவித்துள்ளார்.

குறிப்பாக வகுப்பறைகள் பற்றாக்குறையாகவுள்ளன. தற்போது உள்ள வகுப்பறையில் ஒன்று பனையோலையால் வேயப்பட்டது. இந்தக் கூரை பழுதாகிய நிலையில் காணப்படுகின்றது. இதனைப் புதிதாக வேயவேண்டிய அவசர தேவையுள்ளது. இனிமேல் மழைகாலம் ஆரம்பிக்கவுள்ளதால் மாணவர்கள் பெரும் பாதிப்புக்களைச் சந்திக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

இதனைவிடப் பாடசாலையில் பெரும் தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவுகின்றது. இங்கு நீர்த்தாங்கியொன்று உள்ளபோதிலும் கிணற்றில் போதிய நீர் இன்மையால் தண்ணீர்த் தட்டுப்பாடு தொடருகின்றது. கிணற்றை ஆழப்படுத்துவதன் மூலமே இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய முடியும்.

இங்கு கல்வி கற்கும் பல மாணவர்கள் அதிக வறுமை நிலையில் உள்ளனர். இ[illegible]ால் இவர்கள் சீரான உடைக[illegible]ன்றியும், பாதணிகள் இன்றியும் காணப்படுகின்றனர். இதனால் இவர்கள் மிகுந்த மனத்தாக்கங்களுடன் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இந்த ஏழைச் சிறார்களுக்கு வெளிநாடுகளில் வசிக்கும் பாடசாலையின் பழைய மாணவர்கள் உதவ வேண்டுமென அதிபர் வேண்டுகோள் விடுக்கின்றார்.

யுத்தத்தால் கொடிய துன்பங்களை அனுபவித்த இந்தப் பிரதேசத்திலுள்ள பாடசாலைக்கு வசதிபடைத்தவர்கள் தமது உதவிகளை நல்கி ஏழைச்சிறார்களுக்கு உதவ வேண்டுமெனப் பிரதேச மக்களும் உருக்கமாக வேண்டி நிற்கின்றனர். (க-425)

# கனடா வாழ் புலம்பெயர் முதியோர்கள் மாணவர்களுக்கு பாதணிகள் அன்பளிப்பு

அக்கராயன், ஜூலை 27

கனடாவில் வாழ்கின்ற புலம்பெயர் தமிழ் முதியோர்கள் சிலர் வழங்கிய நிதிப் பங்களிப்பினால் கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் இல.2 அ.த.க.பாடசாலையின் மாணவர்களுக்குப் பாதணிகள் வழங்கப்பட்டுள்ளன.

75 ஆயிரம் ரூபா பெறுமதியான 95 பாதணிகள் இவ்வாறு மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் முயற்சியால் இந்த அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

மாணவர்களுக்குப் பாதணிகள் வழங்கும் நிகழ்வில் கூட்டுறவாளர் கணபதிப்பிள்ளை, கிராம அலுவலர் ஜெயச்சந்திரன், கனடாவிலிருந்து முதியோர்களின் பிரதிநிதியாக வருகை தந்த திருமதி சி.யோகமலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஸ்கந்தபுரம் இல.2 பாடசாலை மாணவர்கள் மிகவும் வறிய நிலையில் உள்ளனர்.

புலம்பெயர் உறவுகளின் இத்தகைய உதவிகள் மாணவர்களின் வளர்ச்சிக்குப் பேருதவியாக அமைந்துள்ளதாக பாடசாலை அதிபர் இ.ரவிச்சந்திரன் தெரிவித்தார். (க-410)

யாழ் மண்ணில் வாழும் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

ஆஸ்திரேலிய பலராட் (Ballarat) பல்கலைக்கழகத்தின்
விசேட புலமைப் பரிசில்களும் கருத்தரங்கும்

கருத்தரங்கில் பங்கு கொண்டு ரூ. 200,000 வரை புலமை பரிசில்களை பெற்றுக் கொள்ளுங்கள்

University of Ballarat
Learn to succeed
SRI LANKA STUDY CENTRE
★★★★★
சிறந்த போதனை தரத்திற்காக 5 நட்சத்திரத்தினை கொண்டு ஆஸ்திரேலிய பல்கலைக்கழகத்தினால் விருதளிக்கப்பட்டுள்ளது

சிறந்த கணினித்துறை / வணிகத்துறை பட்ட படிப்புகள்

FOUNDATION - க.பொ.த. சா/தர பரீட்சை முடித்தவர்கள்
Bachelor in Information Technology
Bachelor in Business
Bachelor in Commerce
MBS - (HR, Marketing, Finance)
MSc Information Technology
MSc Information Systems
Courses by IBM

யாழ் மண்ணில் இரண்டு சிறந்த மாணாக்கருக்கு பட்ட படிப்பிற்கான முழுமையான புலமைப் பரிசில்கள்.
கருத்தரங்கிற்கு சமூகமளித்து உங்கள் கனவை நனவாக்கிக் கொள்ளுங்கள்



பலராட் பல்கலைக்கழகத்தின் கற்கை நெறிக்கான அத்தியட்சகர் திரு. பிரயன் டிகோல் அவர்களை சந்தித்து உங்கள் கேள்விகளுக்கு விடை காணுங்கள்.

நீங்கள் யாழில் இக்கற்கைநெறிக்கு பதிவு செய்து ஆஸ்திரேலிய IBM நிறுவனத்தின் நிர்வாக இயக்குனராகிய கலாநிதி ஜோன் ஹார்வியி[illegible]
Offer Letter ஐ நமமுடைய கொழும்பு கிளையில் ஆகஸ்ட் 14ஆம் [illegible]

நம் அனைத்து தகவல் தொழில்நுட்ப கற்கை நெறிகளும்
உலக பிரசித்திப்பெற்ற IBM நிறுவனத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்டவை

கருத்தரங்கு விவரம்
இடம் : Green Grass Hotel, இல. 33, ஆசீர்வாதம் ஒழுங்கை, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
காலம் : 2011 ஜூலை மாதம் 30ஆம் திகதி (சனிக்கிழமை)
நேரம் : காலை 10.00 மணிக்கு
மேலதிக விவரங்களுக்கு : நிசாந்தன் (Jaffna) 071 8561536

No: 113, "Habitat House", Dutugemunu Street, Kohuwala.
Tel: [illegible] 0115 553237
E-mail: info@ubsrilanka.lk web: www.ubsrilanka.lk
Eastern Province: 077 4056741 Kandy: 077 3066411 Jaffna: 071 8561536
ATMC
SKILLS advertising

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாந்தையில் உதவி அரச அதிபர் இல்லை; பொதுமக்கள் பெரும் நெருக்கடியில்

முல்லைத்தீவு, ஜூலை 27

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பணிமனைக்கு இதுவரை உதவி அரச அதிபர் நியமிக்கப்படாததால் அலுவலகச் செயற்பாடுகளில் பெரும் பின்னடைவு தோன்றியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இங்கு உதவி அரச அதிபராகப் பணி புரிந்தவர் புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபராக மாற்றலாகிச் சென்றதால் வெற்றிடம் ஏற்பட்டது. ஆனால் இந்த வெற்றிடம் இதுவரை நிரப்பப்படாமல் உள்ளது.

தற்போது துணுக்காய் உதவி அரச அதிபர் வாரத்தில் இரு நாள்கள் கடமைக்கு வருவதாகவும் ஆனால் அவசர தேவை ஏற்படின்தாம் துணுக்காய்க்குச் செல்ல வேண்டியுள்ளதாகவும் இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் மக்கள் மீள்குடியமர்ந்த இந்த நிலையில் தமது பல்வேறு தேவைகளுக்கும் உதவி அரச அதிபர் அலுவலகத்துக்கே செல்ல வேண்டிய நிலையிலுள்ளனர். இதனால் நிரந்தரமான உதவி அரச அதிபர் நியமிக்கப்படாமை இவர்களுக்கும் பெரும் சிரமங்களைத் தோற்றுவித்துள்ளது.

ஆகவே இதனைக் கருத்தில் கொண்டு நிரந்தரமாக உதவி அரச அதிபரை நியமிக்க வேண்டுமெனப் பாதிக்கப்பட்டு வரும் பொதுமக்கள் வேண்டி நிற்கின்றனர். உரிய உயர் அதிகாரிகளின் கவனம் இதில் திரும்புமா என்பதே தற்போது வினாவாக எழுந்துள்ளது. (க)

# குறைந்தது தேங்காய் விலை

முல்லைத்தீவு, ஜூலை 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏறுமுகமாகவிருந்த தேங்காயின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் இங்கு மீள்குடியமர்ந்த பின்னர் பல்வேறு காரணங்களால் தேங்காயின் விலை அதிகரித்துக் காணப்பட்டது. குறிப்பாகத் தென்னை மரங்களுக்குப் போரின் போது ஏற்பட்ட அதீத அழிவுகள் இதற்கான முக்கிய காரணமாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் யானைகளும் தமது பங்குக்குத் தென்னைகளை அழித்ததால் இங்குள்ள சாதாரண மக்கள் தமது கறித் தேவைகளுக்குத் தேங்காயை வாங்கி உபயோகிக்க முடியாத நிலை காணப்பட்டது.

ஆனால் தற்போது தேங்காய் விலையில் இறங்குமுகம் தெரிவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு, கோம்பாவில் பிரதேசங்களில் மக்கள் மீள்குடியமர்ந்த பின்னர் 40 தொடக்கம் 50 ரூபா வரை விற்கப்பட்ட தேங்காயொன்று 20 இலிருந்து 25 ரூபாவரை விற்கப்படுவதைக் காண முடிகின்றது.

இந்த விலைக் குறைவையடுத்து இந்தப் பிரதேச மக்கள் தமக்குத் தேவையான தேங்காயைக் கொள்வனவு செய்யக் கூடியதாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## முல்லைத்தீவில் நாளைய தினம் பரீட்சைகள்

முல்லைத்தீவு, ஜூலை 27


முல்லைத்தீவு கல்வி வலயப் பாடசாலைகளில் கடந்த 23 ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சைகள் யாவும் நாளைய தினம் 28 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கல்வி வலயப் பாடசாலைகளில் இந்த ஆண்டுக்கான இரண்டாம் தவணைப் பரீட்சைகள் கடந்த 20 ஆம் திகதி ஆரம்பித்து நடைபெற்று வருகின்றன.

இந்தப் பரீட்சைகள் 27 ஆம் திகதி வரை நடைபெற்று விடுமுறை 5 ஆம் திகதி தொடங்குமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

உள்ளூராட்சித் தேர்தல் 23 ஆம் திகதி நடை பெற்றதால் அன்றைய தினத்துக்குரிய பரீட்சைகள் 28 ஆம் திகதி நடைபெறவிருப்பது குறிப்பிடத் தக்கது. (க)

## துன்பங்கள் விலக...



அருள் தரும் இறைவன்: ஒட்டுசுட்டான் தான்தோன்றிஈசுவரர் ஆலயத் தீர்த்தத் திருவிழாவன்று பெருமான் திருக்குளத்தில் தீர்த்தமாடும் காட்சியைக் காணப் பெருமளவு பக்தர்கள் திரண்டிருக்கின்றனர். (500)

## தேவை ஒரு அம்புலன்ஸ் வண்டி

வவுனியா,ஜூலை 27

வவுனியா சிதம்பரபுரம் பிரதேச வைத்திய சாலைக்குப் புதிய அம்புலன்ஸ் வண்டியொன்று அவசரமாகத் தேவைப்படுகின்றது.

தற்போது இந்த வைத்தியசாலையில் பாவனையில் இருந்து வரும் அம்புலன்ஸ் வண்டி அடிக்கடி செயலிழந்து போகின்றது. இதனால் திருத்த வேலைகளுக்கென வாகனம் எடுத்துச் செல்லப்பட்டுத் திரும்பி வருவதற்குச் சில நாள்கள் எடுக்கின்றன. இந்த இடை நாள்களில் வைத்தியசாலையில் உள்ள ஆபத்தான நோயாளர்களை வவுனியாவுக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலை தற்போது காணப்படுகின்றது. இதனால் மனித உயிர்களை அநியாயமாக இழக்கக் கூடிய அபாய நிலையும் உள்ளது.

எனவே உரிய அதிகாரிகள் இதில் அக்கறை செலுத்திப் புதிய அம்புலன்ஸ் வண்டியொன்றை இந்த வைத்தியசாலைக்கு வழங்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-421)

# பரந்தன் - முல்லைத்தீவு பிரதான வீதியில் அதிகரிக்கும் திருட்டுச் சம்பவங்கள்

கிளிநொச்சி, ஜூலை 27

பரந்தனில் இருந்து முல்லைத்தீவு செல்லும் வீதியில் பயணிக்கும் பயணிகளிடமிருந்து பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டு வருவதாக மக்கள்கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

அண்மை நாள்களாக இத்தகைய திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. பயணிகள் எடுத்துச் செல்லும் பணம், நகை உட்பட பெறுமதியான பொருள்களைக் குறிவைத்தே திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

இதனால் பயணிகள் பெரும் அவலங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

குறிப்பாகப் பயணிகள் பேருந்துகளில் பரந்தனுக்கும் மூன்றாம் கட்டைக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பயணிகள் பேருந்துகளில் அளவுக்கதிகமான முறையில் பயணிகள் ஏற்றிச் செல்லப்படுகின்றனர். இதனைத் திருடர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர்.

பிரயாணப் பைகள் பிளேட் போன்ற கூரிய ஆயுதத்தால் கீறப்பட்டுப் பைகளினுள் வைக்கப்பட்டிருக்கும் பொருள்கள் களவாடிச் செல்லப்படுகின்றன.

அண்மையில் திருமண வீட்டுக்குச் செல்வதற்கெனப் பெண்ணொருவர் இரவல் நகைகளை வாங்கிக் கொண்டு பேருந்தில் பயணித்த போது அவை திருடப்பட்டதால் செய்வதறியாது கலங்கி நின்றார்.

ஆகவே முதலில் பேருந்துகளில் பயணிகளை அடைந்து கொண்டு செல்வது தவிர்க்கப்பட வேண்டும்.

அடுத்ததாகப் பயணிகள் தமது பொருள்களில் கவனமாக இருத்தல் வேண்டும். இல்லையேல் இத்தகைய திருட்டுச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்றுச் செல்லுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## இரு பாடசாலைகள் இன்று ஆரம்பம்

முல்லைத்தீவு, ஜூலை 27

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த இருபாடசாலைகள் இன்று மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைவேலி கணேசா வித்தியாலயம், கோம்பாவில் விக்னேஸ்வர வித்தியாலயம் ஆகியனவே அந்த இரு பாடசாலைகளாகும்.

இதேவேளை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைப் பழைய இடத்திலேயே இயங்க வைப்பதற்கான ஏற்பாடுகளும் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன. (க-ரி)

## ஆறு பாடசாலைகள் துணுக்காயில் அபிவிருத்தி

முல்லைத்தீவு, ஜூலை 27

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள ஆறு பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் மகிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழேயே இந்தப் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. பாண்டியன்குளம் மகாவித்தியாலயம், யோகபுரம் மகாவித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி, மாங்குளம் மகாவித்தியாலயம், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், முத்துஐயன்கட்டு வலதுகரைப் பாடசாலை ஆகிய ஆறுபாடசாலைகளே இவ்வாறு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இந்தப் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படும் போது இவற்றின் ஆரம்பப் பிரிவுகள் தனியாக இயங்குமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

# இதுவரை மின்சாரத்தைக் காணாத அக்கராயன்குளம் கிராம மக்கள்

அக்கராயன், ஜூலை 27

கிளிநொச்சி அக்கராயன் குளம் கிராமத்துக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படாததால் மீள்குடியமர்ந்த மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திருமுறிகண்டியிலிருந்து நாலாம் கட்டை வரை மின்கம்பங்கள் நடப்பட்டுள்ளன.

ஆனால் இரண்டு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள அக்கராயன் குளம் கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதில் ஏனோ தாமதங்கள் ஏற்பட்டு வருகின்றன.

அக்கராயன், ஸ்கந்தபுரம் பகுதிகளில் பிரதான வீதியின் இருமருங்கிலுமுள்ள மரங்கள் தறிக்கப்பட்டு அகற்றப்பட்டுள்ளன. ஆனால் மின்சாரக் கம்பங்கள் இதுவரை நடப்படவில்லை.

இந்தப் பிரதேசத்துக்கு மின்சாரம் வழங்கப்பட்டால் இங்குள்ள மருத்துவமனை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், எரிபொருள் நிலையம் என்பன பயன்பெறும்.

அத்துடன் இங்குள்ள பாடசாலைகளில் கணினிச் செயற்பாடுகளும் தடையின்றிச் செயற்படக் கூடிய நிலை உருவாகும்.

இதேவேளை துணுக்காய்ப் பிரதேசத்திலுள்ள சில இடங்களிலும் மின்கம்பங்கள் நடப்பட்டுள்ளன. ஆனால் அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டிய குளம் ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

உரிய அதிகாரிகள் இனியும் காலத்தை வீணடிக்காது மின்சாரத்தை வழங்கி உதவுமாறு இங்குள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
27 ஜூலை 2011 புதன்கிழமை



அண்மையில் கோப்பாய் றோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவருக்கு யாழ்.எயிட் நிறுவனம் கல்வி உபகரணங்களை வழங்கியது.கல்வி உப கரணங்களுடன் மாண வர்கள், அதிபர், ஆசிரியர் மற்றும் யாழ். எயிட் நிறுவனப் பிரதிநிதிகள்.(319)

# திறமை வாய்ந்த பேச்சாளர்களுக்கு சிறந்த கிரகித்தல் திறன் அவசியமாகும்

## வாழ்நாள் பேராசிரியர் சண்முகதாஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 27

பல்வேறுபட்ட பாடப் பரப் புக்களில் பல்வேறு வகையான விடயங்கள் உள்ளடங்கியுள் ளன. அவற்றைக் கிரகித்துச் சிந்திப்பது அவசியமாகிறது. இதனூடாகச் சிறந்த பேச் சாளர்கள் உருவாக வேண்டும். இவ்வாறு மாணவர்கள் சகல துறைகளிலும் முன்னேற வேண் டும் என்று தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேரா சிரியர் அ.சண்முகதாஸ்.

யாழ்.மத்திய கல்லூரி கலை மாணவர் மன்றம் நடத்தும் 'சூழலும் சொல்லாடு களமும், இறுவெட்டு வெளியீடு'' பாட சாலை தம்பர் மண்டபத்தில் மாணவன் யூட் கிசாந்தன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

சொல்லாடு களமானது இலக் கிய விடயம் சார்ந்ததாக உள் ளது. உயர்தர கலைப்பிரிவு மாணவர்களுக்கு அவர்களின் பாடத்திட்டத்துக்கு ஏற்ப ஒழுங்கு படுத்தித் திறமையான பேச்சாளர் களைக் கொண்டு நடத்தி வரு கின்றோம். இது மாணவர்களின் பரீட்சைக்கு வழிகாட்டியாகஇருக் கும் என்ற நோக்கோடு நடத்தப் படுகிறது.

பலபேச்சாளர்கள் மாணவர் மத்தியில் உருவாக வேண்டும். இளம் சந்ததியினரிடமிருந்து இலக்கியம் மட்டுமன்றி ஏனைய துறைகளிலும் முதன்மைப் பேச் சாளர்கள் உருவாக வேண்டும்.

பாடசாலைகளில் கற்கும் துறை, தனியார் கல்வி நிறுவனங்களில் கற்கும்முறை, வீடுகளில் கற் கும் முறைகள் என்பவற்றில் வேறு பாடுகள் இருந்தாலும் ஒவ்வொரு வரும் சிறந்த பேச்சாளர்களாக உரு வாக வேண்டும் என்பதாகும். எம்மைப் போன்று பழைமை யான பேச்சாளர்கள் பேசிக் கொண்டு இருப்பது எவ்வளவு காலம். எமக்குப் பின் பேச்சாளர் களை நீங்கள்தான் உருவாக்க வேண்டும். அதற்குக் களம் அமைத்துக் கொடுப்பதற்கு நாம் உதவி செய்வோம்.

கவித்துவமாகவும் மொழித் திறனுடனும் பேச்சுக்கள் அமைந் தால் அது இலகுவாக அனை வர் மத்தியிலும் சென்றடையும். கவிதை என்பதற்கு வரைவிலக் கணம் கவி என்பது பாடலாக வும் கதை ஒன்றை கூறுவதாகவும் விதை என்பது அதிலிருந்து இன்னொரு விடயம் உருவாவ தாகவும் அமைகிறது.

எனவே எளிமையான சொற் களோடும் கவிநயத்துடனும் சிறந்த மொழித் திறனுடனும் ஒவ் வொரு பேச்சாளர்களும் உருவாக வேண்டும்.

(வ-313)

# வறுமை கல்வி கற்பதற்கு ஒரு தடை அல்ல

## வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரி

சுன்னாகம், ஜூலை 27

வறுமை கல்வி கற்பதற்கு ஒரு தடையல்ல . அது கல் வியை ஊக்குவிக்கிறது என்று குறிப்பிட்டார் வீதி அபிவிருத்தி திணைக்கள பிரதம எழுது வினைஞரான சி.பரிபூரணன்.

கட்டுடை சைவவித்தியால யத்தில் யாழ்.எய்ட் நிறுவனத் தால் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மை யில் நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். பாடசாலை அதிபர் சி.சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றும் போது அவர் மேலும் குறிப்பிட்ட தாவது.

வறுமை நிலை ஒருவனை கல்விகற்க வேண்டுமென்ற உணர்வை ஏற்படுத்தும். இன்று அதிகாரிகளாகப் பெரிய பதவி களை அலங்கரிப்பவர்களை நோக் கினால் வறுமையுடன் போராடி வெற்றிபெற்றவர்களாக அவர் கள் இருப்பார்கள். வறுமை ஒரு வனை ஊக்குவிக்கும் அள வுக்கு செல்வநிலை ஊக்கு விக்காது.

எனவே, வறிய உங்களது பெற் றோர்களின் கனவுகளை நன வாக்கும் வகையில் சிறப்பாகக் கற்று முன்னேற வேண்டும். அதற்கு இத்தகைய சிறு உதவிகள் ஊக் கம் அளிப்பதாக அமையும். இந்த உதவிகளை முன்னேறுவதற் கான ஒருவழியாகக் கொண்டு செயற்படவேண்டும் என்றார். இதில் கலந்து கொண்டு ஆஸ் திரேலியாவிலிருந்து வந்த எஸ். சூரியநாராயணனும் உரையாற் றினார். (ம-38)

# வேலை வாய்ப்பின் முன்னோடி கணினி அறிவுதான்

## விரிவுரையாளர் டாக்டர் சார்ள்ஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 27

எமது நாட்டில் வேலை வாய்ப் பைப் பெற்றுக் கொள்வதற்கு தற்போது கணினி அறிவு இன்றி யமையாததாகும். அந்தவகை யில் தற்போது பட்டதாரிகளிட மிருந்து வேலைத்தளங்கள் கணினி அறிவைத்தான் அதிக மாக எதிர்பார்க்கின்றன. இவ் வாறு தெரிவித்தார் யாழ். பல் கலைக்கழக விஞ்ஞான பீட கணினி விஞ்ஞான பாட சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் சார்ள்ஸ்.

சி.சிவசன் எழுதிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் எனும் நூல் வெளியீட்டுவிழா யாழ்.இந்துக் கல்லூரி குமார சாமி மண்டபத்தில் பாடசாலை அதிபர் வீ.கணேசராசா தலைமை யில் இடம்பெற்றது. இந்த நிகழ் வில் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே இவ்வாறு தெரி வித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்:

எமது பிரதேசத்தைப் பொறுத்த வகையில் தகவல் தொழில்நுட் பத்தைக் கற்பிக்கக் கூடிய ஆசிரி யர் குறைவாகவே காணப்படு கிறது. ஒரு பாடசாலைக்கு ஓர் ஆசிரியர் வீதம்தான் உள்ளது. சிறிய பாடசாலைகள் கிராமப்புறப் பாடசாலைகளைப் பொறுத்தமட்டில் இந்தப் பாடப் பரப்புக்கு ஆசிரியர்களே இல்லை.

தொழில்நுட்பமானது தினமும் புதுப்புது விடயங்களை உள்ளடக் கியதாகவுள்ளது.இதைத் தொடர்ந்து கற்று வந்தால் மட்டுமே பூரண அறிவைப் பெற்றுக் கொள்ள லாம்.இன்றிருக்கும் விடயம் நாளை பழையதாகிறது. அதேவேளை நாளை இன்னொரு புதுவிடய மாக மாறுகிறது. மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியை இலகுவாகப் பெற்றிருக்கின்ற போதும் வணிகத்துறை, கலைத் துறை, விஞ்ஞானத்துறை, கணி தத்துறை ஆகிய துறைகளைக் கற்றாலும் கணினி அறிவு என் பது அத்தியாவசியமாகும். காலத் துக்கு ஏற்ற உற்பத்தியை செய்வது போன்று மாணவர்களும் அறி வைப்பெருக்கிக் கொள்வது அவசிய மாகிறது - என்றார் அவர்.(வ-313)

# வலிகாமம் வலய மனைப்பொருளியல் போட்டி முடிவுகள்

சுன்னாகம், ஜூலை 27

வலிகாமம் வலயத்தால் நடத் தப்பட்ட மனைப்பொருளியல் அறிவுப் போட்டியின் வலய மட்டப் போட்டி முடிவுகள் வெளி யிடப்பட்டுள்ளன. வெற்றி பெற்ற வர்களின் விவரம் வருமாறு.

**தரம் - 10**

ர.ரஜீபா( வீமன்காமம் மகா வித்தியாலயம்),ம.சரண்யா (ஆனைக்கோட்டை பாலசுப்பிர மணியம் வித்தி.), ம.தர்சிகா (இள வாலை கன்னியர் மடம் ம.வி).

**தரம்-11**

அ.லூட்ஸ் பியூஜினி( இள வாலை கன்னியர் மடம் ம.வி.), ரா.ஜெனார்த்தனி( யூனியன் கல்லூரி), சி.சிந்துஜா( நடேஸ்வராக் கல்லூரி).

**தரம்-12**

ச.ஜெனனி (மாதகல் சென். ஜோசப் ம.வி), செ.வினுசா (வட்டு. இந்துக் கல்லூரி), க.தர்மினி (சண்டிலிப்பாய் இந்துக் கல் லூரி).

**தரம்:-13**

நா.டர்சிகா (வட்டு. இந்துக் கல்லூரி), அ.மஜிதா (இணுவில் மத்தியகல்லூரி), தி.மயூரதி (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

இந்தப் போட்டிகளில் கோட்ட ரீதியாக வெற்றிபெற்றோர் விப ரம் வருமாறு;

**உடுவில் கோட்டம்**

**தரம்-10**

த.துஸ்ஜெனா(ஏழாலை மகாவித்தியாலயம்), சி.நர்மதா (இணுவில் மத்தியகல்லூரி), அ.துளசிகா (இராமநாதன் கல் லூரி).

**தரம்:-11**

ம.பிரதீபா (ஏழாலை மகா வித்தியாலயம்),வ.சோபிகா (தாவடி இ.த.க. பாடசாலை), பா.டிலோஜினி (ஏழாலை சைவ மகாஜன வித்தி.)

**தரம்:-12**

கு.திலக்சன் (இணுவில் மத்தியகல்லூரி),க.ரபிதா (இணுவில் இந்துக்கல்லூரி), [illegible] (ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

**தரம்: 13**

அ.மஜிதா (இணுவில் மத் திய கல்லூரி), அ.கலையுதா (இராமநாதன் கல்லூரி), இ.சங் கீதா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

**தெல்லிப்பழைக் கோட்டம்**

**தரம்:-10**

ர.றஜீபா(வீமன்காமம் மகா வித்தியாலயம்),ப.லக்சனா (மகா ஜனக் கல்லூரி), சி.ஹம்சா (வயா விளான் ம. மகாவித்.), நா.துஜினா (கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம்).

**தரம்:-11**

ரா.ஜெனார்த்தனி(யூனியன் கல்லூரி),சி.சிந்துஜா (நடேஸ் வரக்கல்லூரி), நி.கலையரசி (அளவெட்டி அருணாசலம் வித்தி.)

**தரம்-12**

க.கஜானா(யூனியன் கல் லூரி),ச.அனுசா (மல்லாகம் மகாவித்தியாலயம்),ம.ஜஸ் வினி (மகாஜனக் கல்லூரி).

**தரம்-13**

ம.வேணுஜா (மகாஜனக் கல்லூரி), வ.அனுசியா (யூனி யன் கல்லூரி),த.லக்சிகா (மல் லாகம் மகாவித்தியாலயம்)

**சங்கானைக்கோட்டம்**

**தரம்-10**

ம.சிவகிருஸ்ணமாலினி (வட்டு. மத்திய கல்லூரி) சி.டிசாந் தினி (வட்டு. இந்துக்கல்லூரி), இ.வசிதா (மூளாய் சைவப் பிரகாச வித்தி.)

(வளரும்)

# பதவி உயர்வு



யாழ்ப்பாணம், ஜூலை 27

தேசிய நீர் வழங்கல் வடி கால் அமைப் புச் சபையின் பிரதம பொறி யியலாளராகக் கடமையாற்றிய எந்திரி தி.பாரதிதாசன் உதவிப் பொது முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

கடந்த முதலாம் திகதியில் இருந்து செயற்படும் வகை யில் தேசிய நீர்வழங்கல் வடி கால் அமைப்புச் சபை இவருக் கான நியமனக் கடிதத்தைக் கடந்த 18 ஆம் திகதி அனுப்பி வைத்துள்ளது.

யாழ்.- கிளிநொச்சி குடி தண்ணீர் விநியோகத் (இரணை மடு குடிதண்ணீர்த் திட்டம் ) திட்டத்தின் திட்டப்பணிப் பாளருக்கு மேற்படி மேலதிக மாக உதவிப் பொதுமுகாமை யாளர் பதவி வழங்கப்பட் டுள்ளது. (வ-302)

# தேசிய மட்டத்தில் முதலாமிடம்



தேசிய மட்டத்தில் இடம் பெற்ற கணித வினாடிவினாப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரியில் தரம் 6 இல் கல்வி கற் கும் இரகுநாதன் ஆதிரையன் முதலாமிடத்தைப் பெற்றுள் ளார். (ம-23)

# ஆன்மீகச் சொற்பொழிவு

வடமராட்சி, ஜூலை 27

தொண்டமானாறு சந்நிதி யான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவை மாதந் தோறும் வெளியிட்டுவரும் ஆன்மீகச் சஞ்சிகையான 'ஞானச் சுடர்' ஆவணி மாத இதழ் வெளி யீட்டுவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

பேரவை உறுப்பினர் எஸ். அருணகிரிநாதன் தலைமை யில் இடம்பெறும் இந்த நிகழ் வில் வெளியீட்டுரையை சைவப் புலவர் திருமதி கே.சசிலேகா வும் மதிப்பீட்டுரையை திருமதி கௌரி சுரேசனும் நிகழ்த்துவர். (வ-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைத் தரத்தை உயர்த்த குடும்பத்தாதித் திட்டம் அறிமுகம்

## அமைச்சர் சுபைர் கூறுகிறார்

திருகோணமலை,ஜூலை 27

கிழக்கில் 50 ஆயிரம் விதவைகள் உள்ளனர். இந்த விதவைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு 'குடும்பத்தாதி' திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் கிழக்கு சுகாதார சமூக சேவைகள் அமைச்சர் எம்.எஸ்.சுபைர்.

சமூக பராமரிப்பு நிலையமொன்றை மூதூரில் திறந்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணம் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றமடைந்து வருகின்றது. இவ்வாறானதொரு முன்னேற்றம் விதவைகள், விசேட தேவையுடையோர் விடயத்திலும் ஏற்பட வேண்டும்.

கிழக்கு மாகாணத்தை மேலும் முன்னேற்ற மடையச் செய்ய வேண்டிய பொறுப்பு கிழக்கில் பிறந்த ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

விதவைகள், நலனை விசேடமாகக் கவனிக்கும் பொருட்டு 'சமூகசேவையாளர் கள்' சிலரை நியமனம் செய்துள்ளேன். எதிர்காலத்தில் இவர்கள் மூலமான பங்களிப்பு விதவைகளுக்கும் விசேட தேவையுடையோருக்கும் கிட்டும்.

சமூக பராமரிப்பு நிலைய அதிகாரிகள் மிகப் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அதேபோன்று சமூக சேவைத் திணைக்களத்தின் கீழ் செயற்படும் அனைத்து ஊழியர் களும் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும்.இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் போது மட்டும் தான்எமக்கு வேலை என்று எவரும் நினைத்துவிடக் கூடாது .

# சிறுபோக நெற்செய்கை அமோக விளைச்சல்

மட்டக்களப்பு,ஜூலை27

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்திற்குப் பின்னர் இந்த முறை செய்கை பண்ணப்பட்ட சிறுபோக நெற்செய்கை அமோக விளைச்சலைத் தந்திருப்பதாக மாவட்ட விவசாய திணைக்கள உதவிப் பணிப்பாளர் இரா. ஹரிகரன் தெரிவித்துள்ளார்.

இந்த முறை 50 ஆயிரம் ஏக்கரில் செய்கை புண்ணப்பட்ட சிறுபோக நெற்செய்கை அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை, வவுணதீவு, வெல்லாவெளி, வாகரை போன்ற பிரதேசங்களில் அதிகமான நிலப்பரப்பில் சிறுபோகச் செய்கை பண்ணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கட்டுத்துவக்கு வைத்திருந்த ஐவர் கைது

அம்பாறை,ஜூலை27

வாகரை, ஓமடியாமடு பிரதேசத்தில் கட்டுத்துவக்கு வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தில் ஐந்து பேர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை கைதுசெய்யப்பட்டதுடன், ஐந்து கட்டுத்துவக்குகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. வாகரைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக வாகரை பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி எம்.ஏ.எம்.ரம்ஸான் தெரிவித்துள்ளார்.

# கல்முனை மாநகர பகுதியில் வர்த்தகப் பாதுகாப்பு நிதியம்

## உறுப்பினர் ஜமால்தீன் வலியுறுத்து

அம்பாறை, ஜூலை27

கல்முனை மாநகரப் பகுதியில் வர்த்தகப் பாதுகாப்பு நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று கல்முனை மாநகரசபை உறுப்பினர் பி.ரி.ஜமால்தீன் வலியுறுத்தியுள்ளார்.மாநகர சபையின் மாதாந்த பொதுச் சபை அமர்வு அண்மையில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கல்முனை மாநகர சபைக்கென தீயணைப்பு இயந்திரம் இருந்தும் கூட அதனை உரிய நேரத்திற்கு செயற்படுத்த முடியவில்லை. காரணம் கேட்டால் ஆளணி இல்லை என்று கூறப்படுகிறது.

கல்முனை மாநகரப் பகுதியில் சுமார் 1,200 வர்த்தக நிலையங்களும் கடைகளும் உள்ளன. அவற்றிடமிருந்து மாதாந்தம் ஐம்பது ரூபா சந்தா அறவிடப்பட்டு, எமது நகரைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நகரின் பாதுகாப்பு விடயத்தில் மாநகர சபையை மட்டும் நம்பியிருக்க முடியாது- என்றார்.

## வரவேற்பு...



அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த காரைதீவுப் பிரதேச சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்புச் சார்பில் போட்டியிட்டு கூடிய வாக்குக்ளைப் பெற்றுத் தெரிவாகியுள்ள செல்லையா இராசையாவுக்கு ஆதரவாளர்கள் வரவேற்பளிக்கின்றனர். (30)

# பொலிஸாருக்கு தமிழ்மொழிக் கற்கை திருகோணமலையில் ஆரம்பம்

திருகோணமலை,ஜூலை27

திருகோணமலையில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் கல்லூரியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதன்முறையாக தமிழ்மொழிக் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது.

இந்தக் கற்கைநெறியினைக் கற்பதற்கு திருகோணமலை, கந்தளாய், கம்பளை, நுவரெலியா பிரதேசங்களில் கடமையாற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் அமைச்சுப் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த 94 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மொழிப் பிரச்சினையைத் தீர்த்தல், தமிழ் மக்கள் பெருமளவில் வாழும் பிரதேசங்களில் கடமைகளில் ஈடுபடுதல் உள்ளிட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டே இந்தத் தமிழ்மொழிக் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டதாக பொலிஸ் அத்தியட்சகர் பந்துல விஜேவர்தன தெரிவித்துள்ளார். (ச)

# கண்டியில் ரயில் பெட்டிகள் எரிந்தமை திட்டமிட்ட செயல் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஜூலை 27

கண்டி ரயில் நிலையத்தில் வைத்து நான்கு ரயில்பெட்டிகள் எரிந்தமை திட்டமிடப்பட்ட செயல் என போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சம்பவம் நடந்த இடத்தை நேரில்சென்று பார்வையிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் பெட்டிகள் சாதாரணமாகத் தீப்பிடித்திருந்தால் புகை எழுந்ததைக் கண்ட பத்தே நிமிடத்தில் அவை முற்றாக எரிந்திருக்கமாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனை வைத்துப் பார்க்கையில் பெட்டிகள் பெற்றோல் ஊற்றப்பட்டே எரிக்கப்பட்டுள்ளமை தெளிவாகின்றது என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு ரயில்வே பொது முகாமையாளருக்கு தாம் உத்தரவிட்டுள்ளார் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# மதுபானம் அருந்தியதாக 6 பொலிஸ் பயிலுநர்கள் வேலை நீக்கம்

மதுபானம் அருந்தியதாக குற்றஞ்சாட்டப்பட்ட கண்டி பொலிஸ் நிலையத்தில் சேவையில்ஈடுபட்டிருந்த ஆறு பொலிஸ் பயிலுனர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி அஸ்கிரிய பொலிஸ் இல்லத்தில் மதுபானம் அருந்தி இருப்பதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.எம். கருணாரத்னவுக்கு கிடைத்த தகவலையடுத்தே இந்த ஆறு பொலிஸ் பயிலுனர்களும் வேலை நிறுத்தப்பட்டுள்ளனர். (ச)

# இரண்டு உறுப்பினர்களிடம் சட்டவிரோத ஆயுதங்கள்

மட்டக்களப்பு,ஜூலை27

கிழக்கு மாகாணசபையில் அங்கம் வகிக்கும் இரண்டு உறுப்பினர்களிடம் சட்டவிரோத ஆயுதங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் இராணுவத்தினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அரசியல்வாதிகளுக்கு நெருக்கமானவர்களிடமும் இவ்வாறு சட்டவிரோத ஆயுதங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

நம்பகரமான தரவு மூலங்களின் ஊடாக இந்த இரகசிய தகவல்கள் கிடைத்துள்ளதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னதாக சட்டவிரோத ஆயுதங்கள்ஒப்படைக்கப்படவேண்டுமென கிழக்கு மாகாணத்தில் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் இந்த உத்தரவிற்கு இதுவரையில் சாதகமானபதில்கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# மாகாணசபையின் 7 அலுவலகங்கள் கேகாலை மாவட்டத்தில் திறக்கப்பட்டன

கொழும்பு, ஜூலை27

சப்ரகமுவ மாகாணசபை நிர்வாகத்துக்கு உட்பட்ட கேகாலை மாவட்டத்தில்மாகாண சபையின் ஏழு கிளை அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

மாகாண சபையின் சேவைகளை மேலும் விஸ்தரிக்கும் நோக்கில் இந்தக் கிளை அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. நிதி, கல்வி, கூட்டுறவு உட்பட 19 துறைகளை தன்வசம் வைத்துள்ள சப்ரகமுவ மாகாண சபை இதுவரை இரத்தினபுரி பிரதான அலுவலகத்தின் மூலமாகவும், கேகாலை உப அலுவலகத்தின் மூலமாகவும் மட்டுமே செயற்பட்டு வந்தது.

தற்போது திறக்கப்பட்டுள்ள ஏழு உப அலுவலகங்கள் மூலமாக மக்களுக்கு மேலும் சிறந்த சேவையை வழங்கமுடியும். (ச)

# தேக்குமரம் கடத்திய கான்ஸ்டபிள் கைது

மகியங்கனை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவர் அனுமதிப்பத்திரமின்றி 278 தேக்கு மரக் குற்றிகளை லொறியொன்றில் ஏற்றிக் கொண்டிருந்தபோது தெல்தெனிய பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் குற்றிகள் மகியங்கனையில் இருந்து கட்டுகஸ் தோட்டைக்குக் கொண்டுவரப்பட இருந்ததாகத் தெரிவிக்கப் படுகின்றது. தெல்தெனிய பொலிஸ் பொறுப்பதிகாரி டீ.டபிள்யூ. சீ.தர்ம [illegible] வருகின்றன. (ச-5)

# வாகரையில் பஸ் குடைசாய்ந்தது 12 ஆசிரியர்களுக்குக் காயம்

மட்டக்களப்பு,ஜூலை27

கிழக்கு மாகாணசபைக்குச் சொந்தமான பஸ்ஸொன்று வாகரை ,வெள்ளையடி என்னும் இடத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை திடீரென்று குடைசாய்ந்ததில் அதில் பயணித்த 12 ஆசிரியர்கள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு கதிரைவெளி விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலிருந்து மட்டக் களப்பு நோக்கி சென்று கொண்டிருந்த பஸ்ஸில் பயணித்த ஆசிரியர்களே காயமடைந்துள்ளனர்.

வாகரை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட காயமடைந்த ஆசிரியர்களில் ஐந்து பேர் சிகிச்சை பெற்ற நிலையில் வீடுகளுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் 7 பேர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:**
உறவினர்களுக்காகவோ, நண்பர்களுக்காகவோ கணிசமான பணத்தைச் செலவிடலாம். சிலரின் மனம் புண்படும் வகையில் பேசி, அவர்களின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். உல்லாசமாகப் பேசுவதால், வம்பில் மாட்டிக் கொள்ளலாம். இன்று செய்ய நினைத்த வேலை ஒன்றை நாளை செய்யலாம் என, பிற்போட்டு வைப்பீர்கள். மறதியால் அவதியுண்டு.



**இடபம்:**
புதிய விடயங்களை அறிந்து கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள். சில விடயங்களில் உங்கள் மீதுள்ள கோபத்தை நண்பர்கள் அல்லது சக ஊழியர்கள் வெளிப்படுத்தலாம். வருமோ, வராதோ என, நினைத்த பணவரவு ஒன்று வந்து விடலாம். சிலருக்கு வாக்குறுதி கொடுப்பீர்கள். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடிவுக்கு வரும்.



**மிதுனம்:**
வீட்டைச் சீரமைப்பதில், தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பதில் அக்கறை காட்டுவீர்கள். நீண்ட நாள்களாக உங்களுடன் இருந்த ஒருவரைப் பிரிய நேரிடலாம். பணிபுரியும் இடத்திலோ அல்லது வெளியிலோ சிலருடன் வாக்குவாதம் செய்யலாம். செலவுகள் கூடும் நாள். உடல் உபாதைகளால் உற்சாகம் தெம்பு, குறையலாம்.



**கடகம்:**
உங்களின் வழக்கமான வேலைகளில் சில மாற்றங்களைச் செய்வீர்கள். மனைவி, குழந்தைகள் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். நண்பர்களைப் பற்றி சிலரிடம் பெருமையாகப் பேசுவீர்கள். நீங்கள் குறைவாக மதிப்பிட்ட ஒருவர் மூலம் பெரிய அளவில் உதவி கிடைக்கலாம். சில பொருள்களை சகாயவிலைக்கு வாங்கலாம்.



**சிங்கம்:**
கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிக்கும் நாள். பிரியமானவர்களுடன் ஏற்பட்ட பிணக்குகள் தீரும். கடன் மிகுதிகளைச் செலுத்துவீர்கள். திட்டமிட்ட சில வேலைகளில் மாற்றங்கள் செய்து விட்டு, வேறு வேலைகளில் ஈடுபடலாம். பெரிய மனிதர்களின் ஆலோசனை கேட்டு சில காரியங்களைச் செய்வீர்கள்.



**கன்னி:**
வியக்கத்தக்க செய்திகளைக் கேட்கலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரை பார்க்க நேரிடலாம். திட்டமிட்ட வெளியூர் பயணங்கள் செல்லலாம். இறை வழிபாடுகள் மூலம் அமைதி பெறுவீர்கள். உடல் சோர்வு, அசதி இருந்தாலும், அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளை முடிப்பீர்கள். சில வேலைக்காகக் காத்திருக்கலாம்.



**துலாம்:**
வாக்குவாதங்களை, பரிகாசப் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டிய நாள். திட்டமிட்ட பயணங்களில் திடீர் மாற்றம் செய்யலாம். நீங்கள் சில நல்ல யோசனைகளைச் சொன்னாலும், அதை ஏற்றுக் கொள்ளாமல் குடும்ப உறுப்பினர்கள் புறக்கணிக்கலாம். முக்கியமான சில வேலைகளைச் செய்யும் முன்னர், ஒன்றுக்கு பல முறை யோசித்துச் செய்யவும்.



**விருச்சிகம்:**
சுபச்செலவுகள் அதிகரிக்கும் நாள். குடும்ப உறுப்பினர்கள் சிலர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். பெண்கள் உடன் பிறப்புக்களின் உதவிகளைப் பெறலாம். மற்றவர்கள் மீது நம்பிக்கை இல்லாமல், நீங்களே சில காரியங்களைச் செய்ய முற்படுவீர்கள். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடலாம்.



**தனுசு:**
இரண்டு நாள்களாக நிறுத்தி வைத்த வேலை ஒன்றை இன்று செய்து முடிப்பீர்கள். கடன் மிகுதி ஒன்றை தீர்ப்பீர்கள். உங்களின் வேலை ஒன்றை மற்றொருவரிடம் ஒப்படைத்து விட்டு, நீங்கள் தப்பித்துக் கொள்ளலாம். சிலரிடம் சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கை நிறைவேறும்.



**மகரம்:**
தொழில் ரீதியாக சிலருக்கு நல்ல ஆலோசனை சொல்வீர்கள். வெளியூர் பயணம் சென்றவர்கள் மீண்டும் ஊர் திரும்பலாம். மாமன், மைத்துனர்கள் அல்லது நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். நீங்கள் செல்லும் இடத்திற்கு உறவினர் ஒருவரும் வரலாம். பல நாள்களாக சந்திக்காத ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும்.



**கும்பம்:**
கடனாக வாங்கிய பணம் ஒன்றை திருப்பிக் கொடுப்பீர்கள். புதியவர்கள் சிலரின் உதவி கிடைக்கும். தேக பராமரிப்பு விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். தாய் வழியில் சுபச்செலவுகளை எதிர்கொள்ளலாம். சிலரின் தகுதிக்கு மீறிய செயற்பாடுகளைப் பார்த்து எரிச்சல் அடைவீர்கள். வேலை நெருக்கடிகளால் வெறுப்பு, எரிச்சல் உண்டாகும்.



**மீனம்:**
தெம்பு, தன்னம்பிக்கையுடன் செயற்படும் நாள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உங்களுக்கு கிடைக்கும் நல்ல வாய்ப்புகளை, சலுகைகளைப் பார்த்து மற்றவர்கள் பொறாமைப்படலாம். நீங்கள் செய்த உதவிக்கு நண்பர் ஒருவர் பதில் உதவி செய்யலாம். எந்த வேலையையும் நாளை என தள்ளி வைக்காமல் உடனுக்குடன் செய்வீர்கள்.

# தொடரு
# பதிவுகள
# கிலி கொ
# தமிழர்க

வடமாகாணத்தில் பாதுகாப்பு அமைச்சின் தேவைக்காக வாழ்நிலைத் தகவல்களைக் கணக்கெடுத்தல் என்ற செயற்பாட்டு புள்ளி விவரத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நாட்டின் வேறு எந்தப் பகுதியிலும் இல்லாமல் வடக்கில் மட்டுமே இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. ஆசிரியர்கள் இந்த நட வடிக்கையில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

தேர்தல் களேபரங்களுக்கு மத்தியில் வன்னியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் கணக்கெடுப்பு முழுமையாக முடிந்து விட்டது.

வன்னி மாவட்டத்தில் கணக்கெடுப்புப் பணியை தம்மால் மேற்கொள்ளமுடியாது என ஒரு பகுதி ஆசிரியர்கள் எதிர்த்த போதும் எஞ்சியவர்களைக் கொண்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டு முடிக்கப்பட்டன.

இந்தப் பணியை மேற்கொள்ள ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதையிட்டு ஆசிரிய சங்கங்கள் சிறு அளவில் தமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் பதிவு செய்ததுடன் தமது பணியை நிறுத்திக்கொண்டன.

யாழ். மாவட்டத்தில் நடந்த பயிற்சி வகுப்பிலும் கூட எதிர்பார்த்தளவுக்கு ஆசிரியர்கள் கலந்து கொள்ளவில்லை என்று கூறப்படுகின்றது. ஆனால் இங்கும் எஞ்சியவர்களைக் கொண்டு கணக்கெடுப்பின் 50 வீதமான பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன.

**படிவம் நிரப்பல்**

வாழ்நிலைத் தகவல்களைக் கணக்கெடுத்தல்

3

பகுதி 3 : வேறு பிரதேசங்களுக்கு வசிக்கச் சென்றறோர் பற்றிய விபரம்

(1982ம் ஆண்டு மற்றும் அதன் பின்னர் இந்தக் குடித்தனத்தில் குடும்பக் கூறுக்குள்ளே அல்லது கூட்டு வசிப்பிடம் போன்ற [illegible] னய இழந்து வசிக்கும் நபரின் குடும்பக் கூறின் உறுப்பினராக இருந்து வேறு பிரதேசத்திற்கு அல்லது வெளிநாட்டிற்கு வசிக்கச் சென்ற

| 1 | | 2 | 3 | | | | | | 4 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | குடித்தனத் தலைவருடனான உறவு முறை | | | | | | இந்த வீட்டில் / கூறிலிருந்து அவ்வாறு வசிக்கச் ( | | | | |
| | | | | | | | | | | இந்த நாட்டிற்குள் ஆனால் இந்த பி.செ. பிரிவில் இல்லையாயின் மாவட்டமும் பி.செ. பிரிவும் | | | |
| தொடர் இலக்கம் | | இந்தக் குடித்தனத்தில் உறுப்பினராக இருந்து அல்லது கூறில் தனியாக வசிக்கும் நபரின் குடும்பக் கூறில் உறுப்பினராகவிருந்து 1982ம் ஆண்டு மற்றும் அதன் பின்னர் வேறு பிரதேசத்திற்கு அல்லது வெளிநாட்டிற்கு வசிக்கச் சென்றவரின் பெயர் (வீட்டுப் பணியாட்கள் மற்றும் விடுதியாளர்கள் போன்ற தற்காலிகமாக இருப்பவர்கள் உள்ளடக்க வேண்டாம்) | கணவன் / மனைவி | மகன் / மகள் | மருமகன் / மருமகள் | தாய் / தந்தை | வேறு உறவினர் | வேறு | இந்த மாவட்டத்தில் மற்றும் இந்த பி.செ. பிரிவில் | மாவட்டம் | குறியீடு | பி.செ.பிரிவு | குறியீடு |
| | | | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 97 | | | | |
| | | | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 97 | | | | |
| | | | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 97 | | | | |
| | | | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 97 | | | | |
| | | | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 97 | | | | |
| | | | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 97 | | | | |
| | | | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 97 | | | | |
| | | | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 97 | | | | |
| | | | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 97 | | | | |
| | | | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 97 | | | | |
| | | | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 97 | | | | |
| | | | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 97 | | | | |

மாதிரி விண்ணப்பம்

2011 என்ற தலைப்பிடப்பட்ட ஐந்து பக்கங்களைக் கொண்ட ஒரு படிவம் மக்களுக்கு வழங்கப்பட்டு தகவல்கள் திரட்டப்படுகின்றன.

இதில் முதல் பக்கத்தில் தொகை மதிப்பாக நடைபெறும் பகுதியை/ நிலத்தை அடையாளம் காணும் தகவல்கள் கேட்கப்பட்டுள்ளன. அதே பக்கத்தில் இருப்பிடத்தின் வகை மற்றும் குடியிருப்பாளர்களின் அடிப்படை விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன.

இரண்டாம் பக்கத்தில் பகுதி ஒன்றில் வழமையான கேள்விகள் உள்ளன. குடும்ப தேசிய அடையாள அட்டை இலக்கம், உறவுமுறை, பால், பிறந்த ஆண்டு, மாதம், திகதி, மொழி, மதம் போன்றன கேட்கப்பட்டுள்ளன.

மூன்றாம் பக்கம் பகுதி இரண்டு சார்ந்த ஆழமான விவரங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. அதாவது வேறு பிரதேசத்தில் ஒருவர் வசித்தமை பற்றிய விவரங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**புலி ஆதரவாளரைத் தேடல்**

ஏற்கனவே 2 ஆம் பக்கத்தில் பகுதி ஒன்றில் குடித்தன விவரம் அல்லது கூறில் கூறப்பட்ட சகலரையும் உள்ளடக்கி அந்த ஒவ்வொரு நபரும் இந்த வசிப்பிடத்துக்கு வருகை தந்தமைக்கான விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன. இந்த விவரத்திலிருந்து ஒரு நபர் தான் வசிக்கும் மாவட்டத்துக்கு எப்போது வந்தார் என்பதை அடையாளப்படுத்த முயற்சிக்கிறார்கள். குறிப்பாக வன்னியிலிருந்து போரின் பின்னர் மீளக் குடியமர்ந்தவர் என்பதை அடையாளப்படுத்த முயற்சிக்கிறார்கள். அதிலும் புலிகளுடன் கூடச்சென்றவர்களா இயற்கை அனர்த்தத்தால் இடம்பெயர்ந்தவர்களா என்று அறிய முயன்றிருக்கிறார்கள்.

''பயங்கரவாத நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து இடைத்தங்கல் நிலையத்தில் இருந்து மீள் குடியேற்றப்படல், ஏனைய இடங்களிலிருந்து மீள் குடியேற்றப்படல் மற்றும் இயற்கை அனர்த்தத்தினால் இடம் பெயர்ந்து இடைத்தங்கல் நிலையத்திலிருந்து மீள் குடியேற்றப்படல் ஏனைய இடத்திலிருந்து மீள் குடியேற்றப்படல்'' என்று இது தொடர்பான விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன.

மூன்றாம் பக்கம் பகுதி மூன்றில் வேறு பிரதேசங்களுக்கு வசிக்கச்சென்றோர் பற்றிய விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன 1982ஆம் ஆண்டுக்குப் பின்னர் போரில் இறந்தோரின் விவரத்தை இதன் மூலம் பெற முயன்றிருக்கிறார்கள். அதே போன்று புலம் பெயர்ந்து சென்றவர்களின் விவரத்தையும் இதற்கூடாகப் பெற முயன்றிருக்கிறார்கள். அப்படிச் சென்றவர்கள் ஏன் போனார்கள். அவர்களுக்கும் புலிகளுடன் தொடர்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# …ும்
# …னால்
# …ாள்ளும்
# …கள்

…னய கூறு…ள்ளே தமது குடும்பத்தின் சகல உறுப்பினர்களையும் …ன்றவர்களின் விபரங்களை இங்கே பதியவும்.)

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 5 | | 6 | | | |
| …கச் சென்ற பிரதேசம் | | | வசிக்கச் சென்ற வருடமும் மாதமும் | | வேறு பிரதேசத்திற்கு அல்லது வெளி நாட்டிற்கு வசிக்கச் சென்றதற்கான காரணம் | | | |
| …வில் …ம் …யீடு | வெளி நாட்டிலாயின் அந் நாட்டின் பெயர் | குறியீடு | வருடம் | மாதம் | பயங்கரவாத நடவடிக்கை ஏற்படல் | பயங்கரவாத நடவடிக்கையால் இடம் பெயர்தல் | தொழிலுக்காக | வேறு |
| | | | | | 1 | 2 | 3 | 4 |
| …ப் படிவம் | | | | | 1 | 2 | 3 | 4 |
| | | | | | 1 | 2 | 3 | 4 |
| | | | | | 1 | 2 | 3 | 4 |
| | | | | | 1 | 2 | 3 | 4 |
| | | | | | 1 | 2 | 3 | 4 |
| | | | | | 1 | 2 | 3 | 4 |
| | | | | | 1 | 2 | 3 | 4 |
| | | | | | 1 | 2 | 3 | 4 |
| | | | | | 1 | 2 | 3 | 4 |
| | | | | | 1 | 2 | 3 | 4 |
| | | | | | 1 | 2 | 3 | 4 |

உண்டா இல்லையா என்பது குறித்தும் இந்த விவரங்கள் ஊடாக அறிய அரசு முயற்சிக்கிறது.

இறுதியாக இறந்த அல்லது காணாமல் போனோர் விவரம் பகுதி 5 இல் கோரப்பட்டுள்ளது. "1982 ஆம் ஆண்டு மற்றும் அதன் பின்னர் இந்தக் குடித்தனத்தின் குடும்பக் கூறில் அல்லது கூட்டு வசிப்பிடம் போன்ற ஏனைய கூறில் தமது குடும்பத்தின் சகல உறுப்பினர்களையும் இழந்து வசிப்பவர்களின் குடும்பக் கூறில் உறுப்பினராக இருந்து இறந்து அல்லது காணாமல் போனவர்கள் சம்பந்தமான விவரம்" தருமாறு கோரப்பட்டுள்ளது.

### இழப்புப் பதிவு

இறந்த, காணாமல் போனவர் பெயர், பால், உறவு, வருடம், இறப்புப்பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் என்பவற்றுடன் கேட்கப்பட்டுள்ளது.

கடந்த கால வன்செயல்களின் போது அல்லது இராணுவ நடவடிக்கையின் போது பல லட்சம் மக்கள் கொல்லப்பட்டும் காணாமல் போயும் உள்ளார்கள். அவற்றை நேர்மையாகத் திரட்ட இது வரை எந்த ஒரு நடவடிக்கையும் அரசு எடுக்கவில்லை.

படைத்தரப்பில் ஏற்கனவே இத்தகைய புள்ளி விவரங்களை வீடு வீடாகச் சென்று சேகரித்தனர். அதனைத் தமிழ் மக்களும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சர்வதேசமும் மனித உரிமை அமைப்புக்களும் கடுமையாக எதிர்த்தன இதன் அடிப்படையில் அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது. ஆனால், இராணுவத்தினரின் நடவடிக்கையைக் கைவிடுவதாக ஊடகங்களுக்கு அறிவித்த யாழ்.குடாநாட்டு இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, "மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் இருந்து இராணுவம் தனக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளும்" என்று அறிவித்தார். பாதுகாப்புத் தொடர்பான உயர் மட்டக் கூட்டத்தில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

### இராணுவத்துக்காகவே பதிவு நடவடிக்கை

இராணுவத்தின் தேவைக்காகவே தற்போதைய கணக்கெடுப்பு நடத்தப்படுகின்றது. இந்தக் கணக்கெடுப்பை இராணுவம் மேற்கொண்டால் கண்டனம் வருகின்றது. என்பதால் ஆசிரியர்களைக் கொண்டு, புள்ளி விவரத்திணைக்களத்தின் ஊடாக இதனை மேற்கொள்கின்றனர்.

இந்த நடவடிக்கை குறித்து புள்ளிவிவரத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவரிடம் கேட்டோம் அவர் தெரிவித்ததாவது:-

"புள்ளி விவரத் திணைக்களத்தினால் 10 வருடங்களுக்கு ஒரு முறை குடிசன மதிப்பீட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். அதனடிப்படையில் இந்தவருடம் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்படுகிறது. வடக்கில் இரு கட்டங்கள் முடிவடைந்துள்ளன. இறுதிக்கட்டம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதற்கிடையில் இந்த விசேட கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகிறது. இது எந்தத் திணைக்களத் தேவைக்கானது என்று எமக்குத் தெளிவாகத் தெரியாது.

> **இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து நடவழக்கை எடுத்திருக்க வேண்டிய அரசியல்வாதிகள் தங்கள் தேர்தல் பிரசாரங்களுடன் இதைக் கைவிட்டு விட்டார்கள். இதுதான் மக்களின் வேதனை**

இது தொடர்பில் கொழும்பில் உள்ள புள்ளி விவரவியல் திணைக்கள தலைமையகத்தில் கேட்ட போது, இது 2011 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்படும் வரவு-செலவுத்திட்டத்துக்கு வடக்குக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கவே மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது" என்றார்.

### கைவிட்ட அரசியல் வாதிகள்

இந்த விசேட கணக்கெடுப்பு எந்தச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது? இந்தப்பணியை புள்ளிவிவரத் திணைக்களம் மேற்கொண்டாலும் வழக்கமான கணக்கெடுப்பில் கேட்பதை விட மேலதிக விவரம் ஏன் கேட்கப்படுகிறது?

தகவல்கள் அந்தரங்கமாக பேணப்படுமா? எடுக்கப்படும் கணக்கெடுப்பின் சாராம்சம் வெளியிடப்படுமா? அந்த விவரங்கள் யார் யாருக்கெல்லாம் வழங்கப்படும்? இந்த விசேட கணக்கெடுப்புக்கான வாகன உதவிகள் தங்குமிட வசதிகள் அனைத்தும் இராணுவத்தால் ஏன் வழங்கப்படுகின்றன? வழக்கமாக பொதுசன மதிப்பீட்டில் ஈடுபடும் ஊழியர்கள் சத்தியக் கடதாசி முடிக்க வேண்டும். ஆனால் இந்த விசேட கணக்கெடுப்பில் ஈடுபடும் ஆசிரியர்கள் எவரும் சத்தியக் கடதாசி முடிக்கவில்லை.

அது ஏன்? அப்படிப்பட்ட ஒரு நிலையில் பெறப்படும் தகவல்களின் பாதுகாப்பு நம்பகம் எவ்வளவு? போன்ற பல கேள்விகளுக்கு இந்த விசேட கணக்கெடுப்பில் பதில்கள் கிடையாது என்றும் அந்த அதிகாரி கூறினார்.

"இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுத்திருக்க வேண்டிய அரசியல்வாதிகள் தங்கள் தேர்தல் பிரசாரங்களுடன் இதைக் கைவிட்டு விட்டார்கள். இதுதான் மக்களின் வேதனை" என்றும் அந்த அதிகாரி கவலைப்பட்டார்.

இந்தப் பதிவு நடவடிக்கைகள் குறித்துக் கூட்டமைப்பு நீதிமன்றத்தை நாடும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். எனினும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

## பக்தி வியாபாரம் அல்ல



வழிபாட்டின் நோக்கமே தன்னை இழத்தல். தன்னைப் பலி தருவதுதான் பக்தி(தான் என்கின்ற அகங்காரத்தை பலி தருதல்) பக்தியின் முதல்செயல் என்பதற்காகவே ஒவ்வொரு கோயிலின் நுழை வாயிலிலும் முதலாவதாகப் பலிபீடம் அமைத்தார்கள். ஆனால் அதற்கு முன்பாக உண்டியல்கள் வந்துவிட்டன. கோயிலுக்குள் உண்டியல்கள் வைப்பது பற்றி எந்த ஆகமத்திலாவது ஏதாவது இருக்கிறதா?

பலிபீடம் பின்னுக்குப் போனது தன்னைப் பலிதருதல் நின்றுபோனது. உண்டியல் முன்னுக்கு வந்தது. கோயில்களும் கொடுக்கல் வாங்கல் கேந்திரமாய் சடங்குகளின் சத்திரங்களாகி விட்டன. உண்மையான பக்தி என்பது என்ன? தாயிலிருந்த பாலும், தாய் மண்ணிலிருந்து நீரும் சுரந்து வழிவதுபோல உயிரில் ஊற்றெடுத்துப் பெருகும் உணர்ச்சியே பக்தி. பக்தி வெளியில் இருந்து இன்னொருவர் கற்றுக் கொடுக்கும் பாடத்திட்டம் அன்று.

ஸ்ரீரங்கத்தில் ஒரு பரம பக்தர் இருந்தார். பரம ஏழை. இரண்டு மூன்று நாள்களாகப் பட்டினி. மதிய நேரம் ஸ்ரீரங்கத்தில் உச்சிக் காலப் பூசை மணி அடித்தது. பக்தரின் மனைவி அரங்கனை நினைத்து "ரங்கா.... என் கண்கண்ட தெய்வமான கணவர் பட்டினி இருக்கிறார். நீயோ வேளாவேளைக்கு மணியடித்துச் சாப்பிடுகிறாயே நியாயமா?" என்று கண்ணீர்விட்டார்.

அரங்கன் " நமது நைவேத்திய பிரசாதத்தை எனது பக்தனுக்கு வழங்கி வரவும்" என்று கட்டளையிட்டார்.

மேளதாளத்தோடு பிரசாதம் வந்தது. பரம பக்தருக்கு பகவானுடைய உத்தரவு சொல்லப்பட்டது. பக்தர் உள்ளிருந்த தம் மனைவியைப் பார்த்து. "நீ ஏதும் கோளாறு செய்தாயா? என்று இழுத்தார். "நீங்கள் பட்டினியாக இருப்பது எனக்கு வருத்தமாக இருக்காதா? அதுதான் பகவானிடம் முறையிட்டேன்" என்றார் மனைவி. பரமபக்தர் சிரித்தபடி "இந்த ஜென்மத்தில் சில வருடங்கள் என்னோடு பந்தம் வைத்திருக்கும் நீயே என்மேல் இவ்வளவு அக்கறை காட்டினால் ஜென்மம் ஜென்மமாகப் பந்தம் உள்ள ரங்கநாதனுக்கும் என்மேல் அக்கறை இருக்காதா? பகவான் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் ஏதோ காரணம் உண்டு புரிந்து கொள்ளுங்கள் என்றார்.

பக்தியின் இன்னொரு பரிமாணம்; கொடூரமான வடிவத்துடன் நரசிம்ம அவதாரம் நிகழ்ந்தபோது அந்த உருவத்தைப் பார்த்து அத்தனைபேரும் பயந்து நடுங்கி அழுதார்கள். மகாலட்சுமி கூட அருகே போகப் பயந்தாள். ஆனால் அவரை நோக்கி அச்சமின்றி நடந்தான் பிரகலாதன். அருகில் போய் நின்றதும் அந்தப் பிஞ்சுக் குழந்தை அழுதது. "பயந்துவிட்டாயா ஏன் அழுகிறாய்?" என்று நரசிம்மன் கேட்டபோது, "இறைவா... எவ்வளவு அழகாக இருக்கிறீர். இந்த அழகுத் திருவுருவை சிறிதுநேரத்தில் மறைத்துக்கொள்வீரே என்று அழுகிறேன்" என்றார் பிரகலாதன்.

அழகற்ற கொடூரமான நரசிம்மன் எல்லோருக்கும் தெரிந்தபோது பிரகலாதனுக்கு மட்டும் அவர் எப்படி அழகாகத் தெரிந்தார்? அதுதான் அன்பு நிலை.... பக்தி மனம். இறைவனுடைய எல்லா நிலைகளுமே பக்தனுக்கு அழகாகவே தெரிய முடியும்.

இறைவனிடம் நீங்கள் எது கேட்டாலும் தருவார். ஆனால் கேட்பதை நாம் நம் தகுதிக்கேற்பதான் கேட்க முடியும். அவரிடமே விட்டு விடுங்கள் அவர் எது கொடுத்தாலும் அவர் தகுதிக்கேற்பவே கொடுப்பார். எம் தகுதியைவிட அவர் தகுதி மடங்கு பெரியதல்லவா?

ஓர் அரசர் காட்டு மிராண்டிகளிடம் சிக்கிக்கொண்டார் நான்கு இளைஞர்கள் அரசரை மீட்டனர். இதற்கு கைம்மாறாக "என்ன வேண்டும்?" என்றார் அரசர். ஒருவன் அரச வேலை கேட்டான். இன்னொருவன் தங்கச் சங்கிலி கேட்டான். கேட்டவர் கேட்டதை மன்னர் கொடுத்தார். ஒருவன் எதுவுமே கேட்கவில்லை.

முடிந்தால் ஆண்டுதோறும் மன்னர் எங்கள் கிராமத்துக்கு வந்து ஒருநாள் தங்கி எங்களை வாழ்த்த வேண்டும் என்றான். மறுவருடம் மன்னர் வரும் நாளில் அந்த ஊருக்குச் சாலை போட்டார்கள். மன்னர் தங்க சின்ன மாளிகை கட்டினார்கள். மன்னருக்கு சமைக்க அரண்மனையிலிருந்து சமையற்காரர்கள் வந்தார்கள். வருடா வருடம் அது ஒரு திருவிழா ஆனது. ஒரு முறை மன்னரோடு அவரது ஒரே மகள் திருமகள் வந்தாள். மன்னரைக் காத்த மாவீரனைக் கண்டு மனம் பறிகொடுத்தாள். அவ்வளவுதான். அவன் மன்னனின் மருமகன் ஆனான். நகை கேட்டவன், நிலம் கேட்டவன், வேலை கேட்டவன் கேட்டதைப் பெற்றான். எதையுமே கேளாதவன் எல்லாமே பெற்றான். பக்தியும் எதையுமே எதிர்பாராது. அதனால் பக்தனுக்கு எல்லாமே தரப்படும் என்கிற தெளிவு பக்தர்களுக்கு வேண்டும்.

**கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயன் வெளியீடான
# கல்விச்சுடர்

தரம் 05 மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்கான விசேட தொடர் வெளியீடு



த.பேரின்பராஜா,
அல் முபாரக் தேசிய பாடசாலை,
மல்வானை.

பரீட்சை இலக்கம்: 11


## தரம் 05 புலமைப் பரிசில் படிமுறைப் பரீட்சை - 2011

பெயர்/சுட்டெண்:........................ | வினாத்தாள்-1 | நேரம்: 45 நிமிடங்கள்

* எல்லா வினாக்களுக்கும் தரப்பட்ட அறிவுறுத்தல்களின்படி விடையளிக்குக.
* கீழே தரப்பட்டுள்ள படங்களில் ஒரு குறைபாடு காணப்படுகின்றது. அக்குறைபாட்டிற்குரிய சொல்லை இனங்கண்டு அதன் கீழ்க்கோடிடுக.

01. 
1) மனிதன்
2) மரம்
3) ஜன்னல்

02. 
1) காது
2) பொட்டு
3) நெற்றி

03. 
1) நீர்
2) கண்
3) வாய்

* பின்வரும் எழுத்துக்களைக் கொண்டு அதன் கீழ்த்தரப்படும் வினாக்களுக்குரிய சரியான விடையை எழுதுக.

| தி | க | வ | கு | ற | ப் | க் | ட | பு | ம |
|---|---|---|---|---|---|---|---|---|---|

04. பிரதான திசைகளுள் ஒன்று ..............................................................

05. கதவுகளைத் திறப்பதற்கு பயன்படும் ..................................................

06.

| | | |
|---|---|---|
| அ | ன் | பு |
| | | |
| க | ரு | ணை |

வெற்றுப்பெட்டிக்கு வரவேண்டிய சொல் எது?
1) பாசம்
2) இரக்கம்
3) அவா

07.

| | | |
|---|---|---|
| வி | ரு | து |
| | | |
| து | ம் | பு |

வெற்றுப்பெட்டிகளுள் வரவேண்டிய எழுத்து யாது?
1) ம், சு 2) மு, ம் 3) டி, ம்

* கீழே தரப்படும் சொற்களுக்கான பொருத்தமான தனிப்பதம் யாது என்பதை இனங்காண்க.

08. காகம், நாய், சிங்கம், புறா
1) பறவைகள் 2) விலங்குகள் 3) மிருகங்கள்

09. ஓடு, எழு, அழு, இரு
1) எச்சவினை 2) வினையெச்சம் 3) பெயரெச்சம்

* 10ஆம், 11ஆம் வினாக்களில் பிழையான வாக்கியத்தின் கீழ்க் கோடிடுக.

10. 1) கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே மறையும்.
2) பூமி தன்னைத்தானே சுற்றுவதனால் இரவு - பகல் தோன்றுகிறது.
3) பூமி சூரியனைச் சுற்றுவதனால் இரவு - பகல் தோன்றும்.

11. 1) புறாக்கள் நெல்லை பொறுக்கி விவசாயிகளுக்கு தீங்கு விளைவிக்கும்.
2) காகம் சூழலில் உள்ள அழுக்குகளை உண்ணும்.
3) கறையான் மகரந்த சேர்க்கைக்கு உதவும்.


12. சபானா வகுப்பில் கெட்டிக்காரி. அவள் வயது 12. ஆனால், அவள் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்ற முடியாது. இதற்கான காரணம்,
1) சபானாவுக்கு உரிய வயதெல்லை கடந்தமை.
2) அடிக்கடி பாடசாலைக்கு வராமல் இருந்தமை.
3) பரீட்சைகளில் குறைவான புள்ளிகளைப் பெற்றாள்.

13. பேதுறுதாலகால மலை சிவனொலிபாதமலையை விட உயரம் கூடியது. சிவனொலி பாதமலையை விட நமுனகுலகந்த மலை உயரம் குறைந்தது. இக்கூற்றின்படி சரியான கூற்று எது?
1) சிவனொலிபாதமலையை விட பேதுறுதாலகால மலை உயரம் கூடியது.
2) பேதுறுதாலகால மலையும் நமுனகுலகந்த மலையும் உயரத்தில் சமனாகும்.
3) இலங்கையின் உயரமான மலை சிவனொலிபாதமலையாகும்.


14. கீழே ஒரு நிகழ்வு நடைபெற்ற சம்பவத்தை ஒழுங்கின்றி காட்டுகின்றது. இந்நிகழ்வு நடைபெற்ற ஒழுங்கு வரிசைப்படுத்தும்போது 4ஆவது நடைபெற்ற நிகழ்வு யாது என்பதை இனங்கண்டு அதன்கீழ்க் கோடிடுக.
1) அனுமதி அட்டையைப் பெறல்.
2) சுற்றிப்பார்த்தார்கள்.
3) ரவியும், சுரேசும் நல்ல நண்பர்கள்.
4) 6 மணிக்கு வீடு நோக்கிப்புறப்பட்டார்கள்.
5) திட்டமிட்டப்படி சந்தித்தார்கள்.

15. கீழ்வரும் சம்பவத்தை ஒழுங்குபடுத்தும்போது வரும் சரியான விடையின் கீழ்க்கோடிடுக.
A - முகமூடி ஒன்றை வெட்டுதல்.
B - முகமூடி ஒன்றைப் பெறல்.
C - கடதாசியில் மெல்லிய கோடுகளால் முகமூடி வரைதல்.
D - சிறிய கத்தியால் மெதுவாக வெட்டுதல்.
1) ADBC 2) DBCA 3) BCDA

16. A இல் தரப்பட்டுள்ள உரு சம நிறைகளைக் கொண்டுள்ளது. B உருவை சமப்படுத்துவதாயின் எந்த உருக்களைத் தெரிவு செய்யவேண்டும்.




17. கீழ்வரும் உருக்களுள் ஒன்று பெருக்கல் மடங்குக்கு அமைய காணப்படுகின்றது. அவ்வாறு உள்ள உருக்கூட்டம் எது?




18. பொருத்தமில்லாத வசனத்தை இனங்கண்டு அதன் இலக்கத்தைச் சுற்றி வட்டம் இடுக.
1) தண்டு, கிளை, வேர், கனி, பூ.
2) சேட், காற்சட்டை, சட்டை, சாரி.
3) மரவள்ளிக்கிழங்கு, கோவா, கரட், உருளைக்கிழங்கு.

19. ஒரே கருத்தைத் தரக்கூடிய சொற் கூட்டத்தைத் தெரிவுசெய்க.
1) உலகம், வின், மண், பார், வையகம்.
2) அன்பு, கருணை, பாசம், பரிவு, துக்கம்.
3) மனை, அகம், இல்லம், வீடு.

* சரியான விடைகளைத் தெரிவுசெய்து அதன் கீழ்க்கோடிடுக.

20. தேங்காய்க் குவியல் ஒன்றில் பெரிய தேங்காய்களை விட 2 மடங்கு சிறிய தேங்காய்களும், 3 மடங்கு ஓரளவு சமவளவான தேங்காய்களும் காணப்பட்டன. மொத்தமாக 54 தேங்காய்கள் இருந்தன எனின், பெரிய தேங்காய்களை விட சிறிய தேங்காய்கள் எத்தனை இருந்தன?
1) 3 2) 18 3) 9

21. வட்டமான மைதானமொன்றில் சம இடைவெளியில் 64 கொடிகள் நடப்பட்டுள்ளன. இரண்டு கொடிகளுக்கிடையிலான தூரம் 4m ஆகும். வட்டத்தின் சுற்றளவு யாது?
1) 252m 2) 256m 3) 260m

22. விளையாட்டுப்போட்டி ஒன்றில் 100 m ஓட்டத்தில் சம்ரா யும்னாவைத் தாண்டி ருஸ்னாவையும் தாண்டி சென்றாலும் அவள் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. எனின், 2ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டவர் யார்?
1) யும்னா 2) சம்ரா 3) ருஸ்னா

23. ஆசிரியர்களுக்காக வழங்கப்பட்ட சங்கீத கதிரைப் போட்டியில் ஒரு தடவை இரண்டு கதிரைகள் எடுக்கப்பட்டன. 8ஆவது தடவையின்போது 22 கதிரைகள் மீதியாக இருந்தன. ஆயின் போட்டி யின் ஆரம்பத்தில் வைக்கப்பட்ட மொத்தக் கதிரைகள் எத்தனை?
1) 36 2) 34 3) 38

* ஒருவர் கிரிக்கெட் நிகழ்வொன்றை பார்ப்பதற்காக பிரதான வீதியினூடாக கார் ஒன்றில் சென்று கொண்டிருந்தபோது கார் திடீரென நடுவீதியில் நின்றுவிட்டது. அந்த சந்தர்ப்பத்தில் அவர் வலப்பக்கமாக கதவைத் திறக்க மோட்டார் சைக்கிள் ஒன்று நின்றது. மற்ற பக்கம் திறக்க அங்கு பேருந்து ஒன்று வந்து நின்றது. பின்பக்கமாக பார்த்தால் சூரியன் மறையும் வெளிச்சத்தால் அவருக்கு ஒன்றும் தெரியவில்லை எனின்,

24. பேருந்து அவருக்கு எந்தத்திசையில் நின்றது?
1) வடக்கு 2) கிழக்கு 3) தெற்கு

25. அவர் கார் ஓட்டிச் சென்ற திசை யாது?
1) மேற்கு 2) கிழக்கு 3) வடக்கு

26. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறாத அண்ணா அழுது கொண்டிருந்தபோது அம்மா பல ஆலோசனைகளையும் கூறினார். அம்மாவின் கூற்றுக்களுக்கு பொருத்தமான பழமொழி,
1) ஆறின கஞ்சி பழங்கஞ்சி.
2) போன பஸிற்கு கை காட்டுதல்.
3) ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது.

27. என்னிடமுள்ள பணத்தில் இரண்டில் ஒரு பங்கை புத்தகமும், மீதியில் 1/2 பங்கிற்கு பேனாவும் வாங்கினேன். மீதியாக இன்னும் 10 ரூபா இருந்தது.

(17ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்கலற்றதாகவும் தெளிவானதாகவும் இருக்கவேண்டிய காணி உரிமை

மண்ணின் மகிமை (பிம்சவிய) என்பது காணிக்கான உரிமையை பதிவு செய்யும் திட்டம் ஆகும். அதாவது இன்று புழக்கத்திலுள்ள உறுதி, அளிப்பு மற்றும் உத்தரவுப் பத்திரம் போன்ற பத்திரங்களுக்குப் பதிலாக புதிதாக ஒரு சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

காணி நிர்ணயத் திணைக்களம், காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம், நில அளவைத் திணைக்களம் என்பவற்றுடன் ஆட்பதிவுத் திணைக்களமும் இணைந்து பிரதேச செயலகங்களூடாக இத்திட்டத்தினை மேற்கொண்டு வருகின்றன. இத்திட்டம் இலங்கையின் ஏனைய பாகங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்துள்ள போதிலும் வட மாகாணத்தில் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் தற்பொழுது அறிமுகப்படுத்தப் பட்டு முதலில் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நிலம் என்பது ஒரு நாட்டின் அளப்பரிய சொத்து. ஒரு நாட்டின் அனைத்துச் சொத்துக்களையும் வளங்களையும் தாங்கி நிற்பதுடன் மனிதனின் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் நிலமே மூலாதாரமாகவும் விளங்குகின்றது. இந்த நிலத்திலிருந்து மனிதன் தன் தேவைக்காக ஒதுக்கிக்கொண்டு உரித்தாக்கிக் கொள்ளும் பகுதியே காணி எனப்படுகின்றது. ஒரு நாட்டுக்கு நிலம் எவ்வளவு முக்கியமோ அது போல தனி மனிதனுக்குக் காணி மிக முக்கியமான சொத்தாகக் காணப்படுகின்றது. பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய இக்காணியின் உரிமை சிக்கலற்றதாகவும் தெளிவானதாகவும் இருக்கும் பட்சத்திலே தான் அதன் மூலம் பெறப்படும் நன்மைகள் எம்மை வந்தடையும்.

இன்று இக்காணியின் உரிமையை, அதனை அனுபவிக்கும் உரிமையைப் பெற்றுக்கொள்ளப் பல வழிமுறைகள் காணப்படுகின்றன.

* விலை கொடுத்து வாங்கல்.
* நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளல்.
* நீண்ட காலமாக அனுபவித்துவருவதன் மூலம் காணியின் உடைமைப் பலம் பெறுதல்.
* பரம்பரையாக உடைமையாதல்.
* அரசால் வழங்கப்படுதல்.

இவ்வாறு பெறப்படும் காணி உரிமையானது உண்மையாகக் காணியினுடைய 'உரிமையை' உறுதிப்படுத்துவதில்லை. அதாவது இப்போது அரசாங்கத்தில் சட்டரீதியாக பதிவு செய்யப் பட்டு வரும் உறுதியானது ஓர் எழுத்து மூலமான ஆவணமே. அதாவது இருவருக்கிடையே அல்லது பலருக்கிடையே ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல் அல்லது ஒப்பந்தம் தொடர்பான தகவல்களாகும். இதன் மூலம் காணியின் உண்மையான உரிமை சட்டரீதியாகப் பதிவாவதில்லை. இதனால் இம்முறையில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன.

அவை -

* காணிக்காக வழங்கப்படும் பத்திரத்தில் காணியின் உண்மையான உரிமை பதியப்படாமல் காணிக்கான ஆவணம் மட்டுமே இங்கு பதிவு செய்யப்படுகின்றன.
* உறுதியைப்பதிவு செய்யும் தொழிற்பாடு தெளிவற்றதாகக் காணப்படுதல்.
* உறுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் எல்லைகளின் அடிப்படையில் காணியின் அமைவிடத்தை நிலத்தில் திட்டவட்டமாகக் கண்டுகொள்ள முடியாமை.
* காணியின் உரிமையைத் தேடுதல், அதனை உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்ளல் என்பன செலவு கூடியதும் நீண்டகாலம் எடுக்கக்கூடியதுமான தொழிற்பாடாகக் காணப்படுவதுடன் காணியின் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு மீண்டும் மீண்டும் தேடி அதன் அறிக்கையைப் பெற்றுக் கொள்ள வேண்டியும் காணப்படுகின்றமை.
* ஒரே காணிக்குப் பல உறுதிகளைப் பதிவு செய்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளதுடன் முதற்பதிவு என்ற அடிப்படையில் போலியான ஆவணங்கள் செல்லுபடியாகும் தன்மை காணப்படுகின்றமை.
* காணி உறுதியில் காணப்படுகின்ற இவ்வகைப் பிரச்சினைகள் காரணமாக வங்கிகள் போன்ற நிதி நிறுவனங்களில் கொடுக்கல் வாங்கல்களைச் செய்து கொள்ள முடியாமை.
* காணி உரிமையை முதலீடாக மாற்றும் போது ஏற்படும் சிக்கல்கள் காரணமாக முன்னேற்றம் தடைப்படல்.
* நாட்டிலுள்ள அனைத்துக் காணிகளுக்குமான சரியான ஒரு தரவுத் தளம் இல்லாமை.

இவ்வாறு பழைய முறையில் காணப்படும் குறைபாடுகளை நீக்கி காணிக்கான உண்மையான உரித்தை பதிவு செய்யும் திட்டமாக 'மண்ணின் மகிமை' திட்டம் காணப்படுகின்றது. இத்திட்டத்தின் மூலம் காணி உரிமையாளர்களுக்கு விண்ணப்பங்கள் வழங்கிக் காணி தொடர்பான தகவல் பெறப்படும். பின்னர் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அனைத்து காணித் துண்டுகளும் நில அளவை செய்யப்பட்டு வரைபடம் தயாரிக்கப்படுவதுடன் அக்காணியின் 30 வருடகால வரலாறும் உரிமையும் சரி பார்க்கப்பட்டு அக்காணிக்கான உரிமை வழங்கி அவ்வுரிமை பதிவு செய்யப்படுகின்றது. இதன்மூலம் காணிக்கான உண்மையான உரித்து பெறப்படும். இதன் மூலம் வழங்கப்படும் பத்திரம் நம்பிக்கையானதாகவும் புரிந்து கொள்ள இலகுவானதாகவும் இருக்கும். இப்பத்திரத்தின் மூலம் உடனடியாகவும் மறைமுகமாகவும் பல நன்மைகள் ஏற்படுகின்றன.

உடனடி நன்மைகளாக -

* சட்டரீதியான முறையில் காணியின் உரித்து உறுதிப்படுத்தப்படல்.
* அரசின் அங்கீகாரம் கிடைத்தல்.
* துரிதமாகவும் இலகுவாகவும் நம்பகமான முறையிலும் காணிக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக் கூடியதாக இருத்தல்.
* காணியின் 30 வருட கால உரிமை சரிபார்க்கப்படுவதனால் பிணை வைப்பதற்கும் வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் காணியைப் பயன்படுத்த முடிகின்றமை.
* காணிப் பிணக்குகள், மோசடிகள் குறைவடைதல்.

காணி தொடர்பான தகவல் முறைமை பேணப்படுவதனால் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முடிதல்.

மறைமுகமான நன்மைகளாக -

* நீண்ட கால அடிப்படையில் வறுமை ஒழிப்பு நடவடிக்கையாக அமைதல்.
* காணி, முதலீட்டுச் சொத்தாக மாற்றமடைவதால் மக்களின் பொருளாதார நடவடிக்கைகள் மேம்படுதல்.
* காணிச்சந்தை பலப்படுதல்.
* காணியில் காணப்படுகின்ற வளங்களை அறிந்துகொள்ள முடிவதுடன் அதனை பாதுகாக்கவும் முடிதல்.

எனவே ''மண்ணின் மகிமை'' என்னும் இத்திட்டத்தின் மூலம் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அனைத்துக் காணித்துண்டுகளும் பதிவு செய்யப்பட்டு உரிமைச் சான்றிதழ் வழங்கப்படும். இதன் மூலம் ஒவ்வொரு தனி மனிதனும் தனது காணியின் உரித்தைப் பதிவு செய்வதுடன் உரிமைப் பிரச்சினை, எல்லைப் பிரச்சினை, நிதி நிறுவனங்களில் கடன் பெற முடியாமை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும்.


காணிப் பிரிவு
பிரதேச செயலகம்,
நல்லூர்.

---

எனின், என்னிடமிருந்த மொத்த பணம் யாது? (16ஆம் பக்கத் தொடர்ச்சி)

1) 50.00 2) 30.00 3) 40.00

* ஒரு வகுப்பில் விருப்புக்குரிய பாடங்களை விரும்புவோர் பற்றிய விவரம் குறியீட்டில் தரப்பட்டுள்ளது. அதனை அவதானித்து 28ஆம், 29ஆம், 30ஆம் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவுசெய்க.





28. மூன்று பாடங்களையும் விரும்புவோரைக் குறிக்கும் எழுத்து எது?
1) B 2) C 3) E

29. சித்திரப் பாடத்தை விரும்பாத ஆனால், நாடகம், சங்கீதத்தை விரும்பும் பிள்ளைகளின் குறியீடு,
1) B 2) E 3) D


30. நாடகத்தை மட்டும் விரும்புவோர்,
1) E 2) B 3) A

* பின்வரும் ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையின் இலக்கத்தை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

31. இவ்வுருக்கு பொருந்தக்கூடிய உரு,




32. கீழேயுள்ள உருவுக்குப் பொருத்தமான கீழ்ப்பாதம்,





33. மூவிலக்க எண்களை குறியீட்டின் மூலம் கழித்தவிதம் கீழே தரப்பட்டுள்ளது. இங்கு
* எனும் குறியீடு குறிக்கும் இலக்கம்,

= * +
× + ×
228

1) 5 2) 4 3) 6


34. அடுத்து வரவேண்டிய உரு,




35. எனது வாழ்வு ...................... மயமானது. இடைவெளியில் வரவேண்டிய பொருத்தமான சொல்,
1) ஒலி 2) ஒளி 3) ஒழி

* இடைவெளிக்குரிய பெறுமானம் எவ்வளவு என்பதை எழுதுக.


36.




37.

| 234 | 345 | 456 | ........... |
|---|---|---|---|

38. இடைவெளிக்கு வரவேண்டிய உருப்பகுதியைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.




39. கஞ்சக் கருவிகளுள் அடங்காத சொல்லைத் தெரிவுசெய்க.
1) தம்பட்டம் 2) சல்லாரி 3) மரக்காஸ்

40. 75505 என்னும் என்பதை எழுதுக. ......................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலை வணங்குகின்றோம்

அடக்கு முறைகளுக்கும் அற்ப சலுகைகளுக்கும் தமிழினம் ஒருபோதும் பணிந்துவிடாது என்பதையும் சுயநிர்ணயம் எமது பிறப்புரிமை என்பதையும் தணியாத தாகத்துடன் வாக்களித்து எம்மினத்தைத் தலைநிமிர வைத்த வடக்கு, கிழக்குத் தாயக உறவுகளைத் தலைசாய்த்து வணங்குகிறோம்.

எமது மண்ணில் போட்டியிட்ட பெரும்பான்மையான சபைகளை வெற்றிபெறக் கூடிய வகையில் நெறிப்படுத்திய எமது கூட்டமைப்பின் தலைமைக்கும் எமது கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி, பச்சிலைப்பள்ளி வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட போது உதயசூரியன் சின்னத்தை எமக்கு அளித்தது மட்டுமன்றி தேர்தல் பரப்புரை பணிகளிலும் பலம் தந்து அப்பிரதேசங்களில் தமிழர்களின் சுய ஆட்சி உருவாக உதவிய எமது பங்காளிக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி அவர்களுக்கும் மிகுந்த நன்றிகள்.

எத்தனை சவால்களை எதிர்கொண்ட போதும் தமிழ்த் தேசியப் பற்றோடு தேர்தலை எதிர்கொண்ட வேட்பாளர்களுக்கும் பல்வேறு நெருக்கடிகளுக்கும் உயிர் அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் வாக்களித்த அன்புக்குரிய மக்களுக்கும் தார்மீகப் பலம் தந்து எம்மை வளப்படுத்தும் புலம்பெயர் உறவுகளுக்கும் தமிழக நெஞ்சங்களுக்கும் தலை சாய்த்து வணங்கி நன்றிகள்.

எல்லாவற்றுக்கும் மேலாக எங்களில் நாங்களாக இருந்து எங்களை இயக்குகின்ற எங்களோடு இருந்து எங்களுக்காக உயிர் தந்து கனவுகளோடு விழி மூடித் தூங்கும் எம் உறவுகளுக்கும் இந்த வெற்றியைக் காணிக்கையாக்குகிறோம்.

நாடாளுமன்ற உறுப்பினர்
சிவஞானம் சிறிதரனும்,
வேட்பாளர்களும்.
அறிவகம்,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு,
கிளிநொச்சி மாவட்டம்.


(சி/5916)(39)

மனம் கவரும் பொலிவு...




வேப்பிலை மஞ்சள்
சாதரண உலர்ந்த சருமத்திற்கு

4EVER SKIN NATURALS (PVT) LTD., No. 71/1, Nawala Road, Nugegoda. Tel: 0114 403 283, 0115 742 414.
web: 4everskinnaturals.com, email: info@4everskinnaturals.com



# நன்றி நினைவும் 45 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்:
01.05.1941

மறைவு:
16.06.2011

## அமரர் மயில்வாகனம் செல்லையா

(உரிமையாளர், மோகன் கூல்பார், மோகன் பன்சி)


16.06.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் **மயில்வாகனம் செல்லையா** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (26.07.2011) செவ்வாய்க்கிழமை கீரிமலையில் நடைபெற்றன. இன்று (27.07.2011) புதன்கிழமை எமது இல்லத்தில் வீட்டுக்கிருத்தியமும் நடைபெறும்.

இந்த நினைவு நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எம் தலைவரது இறுதிநாள்களில் அவரை வைத்தியசாலையில் பராமரித்த வைத்தியர்கள் இல்லம் வந்து பார்த்த வைத்தியர்கள் இறுதி நிகழ்வில் நேரடியாக வந்து கலந்துகொண்டோர், தொலைபேசி மூலம் தொடர்புகொண்டோர், தந்திகள் மூலம் தம் உணர்வை பரிமாறியோர், கடமைகளை நிறைவேற்றிய அந்தணர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பெரியபளை, பளை.

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயநெறி வழியில் அன்னப் பணியாற்றும் நயினாதீவு அமுதசுரபி அன்னதான சபை

*(13.07.2011 ஆம் திகதித் தொடர்ச்சி)*

நயினாதீவு நாகபூஷணி ஆலயத்துக்குச் செல்லும் அடியவர்கள் பசி தீர்க்கும் சிறந்த பணியை ஆற்றிவரும் 'அமுதசுரபி' அன்னதான சபையின் சிறப்பு சொல்லில் அடங்காது. அந்த வகையில் சபை தனது நோக்கத்தைச் சிறப்பாக மேற்கொண்டு வந்த சமயம் 1965 ஆம் ஆண்டில் நாட்டில் இடம் பெற்ற பிரச்சினைகள் காரணமாகச் சபையின் கொட்டகைகள் எரியூட்டப் பட்டன.


அன்றைய தினம் இரவோடிரவாக நெடுந்தீவில் இருந்து கிடுகுகள் தருவிக்கப்பட்டு உடனடியாகவே சபை தனது வழமையான பணியை மேற்கொண்டதாக நயினாதீவு மக்கள் பெருமைப்பட்டதுண்டு.

இடர் எதுவரினும் அது பற்றிப் பொருட் படுத்தாது தன்னுடைய பணி, தான் எடுத்துக்கொண்ட குறிக்கோள் சிதைவடையாது தொடர வேண்டும் என்பதில் உறுதியாக அனைத்து உறுப்

**லக்ஸ்மன்**

பினர்களும் இயங்குவது அதன் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக உள்ளது.

அதனால் முன்னர் சிறிய கொட்டகையில் இயங்கி வந்த இந்தச் சபை இன்று சுமார் 1500 இக்கும் அதிகமான மக்கள் ஒரே தடவையில் அமர்ந்து உணவு அருந்தக் கூடிய அளவுக்கு மண்டபங்களைக் கொண்டுள்ளதாக அமைந்திருக்கிறது. மக்கள் வசதியாகத் தங்கிச் செல்லக் கூடியதாக 36 அறைகளில் 30 அறைகள் யாத்திரிகர் தங்குவதற்கென வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அறையும் நயினாதீவைச் சேர்ந்தவர்களால் அவர்களது சொந்தச் செலவில் கட்டி வழங்கப் பட்டுள்ளது.



அன்னதான சபையை அமைப்பதில் எல்லோரது பின்புலமும் இருந்ததோ அதே போன்று அமுது வழங்குவதிலும் மிகப் பெரியளவு பின்புலம் உள்ளது. ஆண்டு தோறும் இடம்பெறும் அம்பாள் ஆலய உற்சவத்தையொட்டி அங்கு கூடும் பல லட்சக்கணக்கான அடியவர்கள் அம்பாளைத் தரிசித்தபின் அன்னதான சபையைத் தரிசிக்காமல் செல்வது கிடையாது. அத்தனை மக்களுக்கும் இல்லையென்னாது பகல் இரவு சேவையாக உணவு வழங்கும் பணி இடம் பெறுவதற்கு குடாநாட்டில் மட்டுமல்ல, தென் பகுதியில் உள்ள வர்த்தகப் பெருமக்களும் புலம் பெயர்ந்து வாழும் மக்களும் தாராளமாக வாரி வழங்குவது சிறப்புக்குரிய அம்சமாகும். சொல்லப் போனால் எல்லா மக்களுமே இந்தத் திருப்பணிக்கு முடிந்தவரை உதவுகின்றார்கள்.

அன்னையைத் தரிசிக்க வரும் அடியார்களுக்கு அமுதளிப்பதுடன் அதன் பணி நின்றுவிடவில்லை. இறைவழிபாட்டையும் சமய நெறிகளையும் விழுமியங்களையும் பாதுகாக்கக் கூடியதாக அறநெறி வகுப்புக்கள், நூலகம் உள்ளூர் அபிவிருத்திக்கான பங்களிப்பு என்பவற்றிலும் அமுதசுரபி தனது சேவையை நல்கி வருகின்றது.

''அன்பர் பணிசெய்ய எமை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும்'' என்பது ஆன்றோர் கருத்து. இதற்கமைய நல்ல உள்ளம் கொண்ட அனைத்துப் பெருமக்களினதும் உதவிகளால் அமுதசுரபி தனது அரும்பணியை ஆண்டு தோறும் செவ்வனே நிறைவேற்றி நயினாதீவு அம்பாளின் அருட்சிறப்பை வெளிக்கொணர்கிறது.

*(முற்றும்)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மக்கள் உரிமைக்காக ஏங்குவதையே வெளிக்காட்டுகிறது கூட்டமைப்பின் வெற்றி

கொழும்பு, ஜூலை 27

ஜனநாயக செயற்பாட்டைத் தம் கையில் எடுத்து தமது உரிமையின்குரலை உலகிற்குத் தெளிவாகத் தெரிவித்த தமிழ் வாக்காளர்களை உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் வாழ்த்துகின்றது.

இதேபோன்று எதிர்காலத்திலும் அனைத்து வகையான ஜனநாயக ரீதியிலான போராட்டங்களிலும் நமது மக்கள் வெற்றிகளைக் குவித்து தமிழர் தாயகம் என்ற பலத்தை தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்றும் அந்த இயக்கம் அறைகூவல் விடுக்கின்றது.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் செயற்குழு சார்பில், அதன் செயலாளர் நாயகம் ஜேர்மனிவாழ் துரை கணேசலிங்கமும், இயக்கத்தின் அனைத்துலக ஊடகப் பொறுப்பாளர் கனடாவாழ் ஆர்.என்.லோகேந்திரலிங்கமும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் இப்படி வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

வெறுமனே கைகட்டிப் பார்த்து நிற்கும் உலகநாடுகள் பலவற்றுக்கும், நமது மக்களின் தமிழ்த்தேசிய உணர்வு மற்றும் ஒற்றுமையின் பலம் ஆகியவை பற்றிய ஒருசெய்தியைக் கொண்டுசெல்லும் ஓர் ஊடகமாகவே இந்த வெற்றிச் செய்தி அமைகின்றது.

உயிர்தந்த எம் உறவுகளின் போராட்டங்கள் சிதைக்கப்பட்ட போதும், ஜனநாயக வழிப் போராட்டம் மூலம் எம்மக்கள் அளித்த வாக்குகள் 'எமது மக்கள் உரிமைக்காகவே ஏங்குகின்றார்கள்' என்னும் உண்மையை உலகம் கண்டுகொள்ள வேண்டும் என்பதே எமது பேரவாவாகும் - என்றுள்ளது.



கமநல அபிவிருத்தி வாரம் - 2011 இன் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஹோமாகம பிரதேசத்தில் அமைந்துள்ள கமநல சேவை நிலையத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மேல் மாகாண விவசாயத்துறை மற்றும் சுகாதார அமைச்சர் உதய கம்மன்பல காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த உற்பத்திப் பொருள்களைப் பார்வையிடுகிறார்.(ச)

# தேர்தல்கள் ஆணையாளரின் அதிகாரங்களை விஸ்தரிக்குக

## 'கபே' அமைப்பு வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 27

18 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் மூலம் வரையறுக்கப்பட்டுள்ள தேர்தல்கள் ஆணையாளரின் அதிகாரங்களை விஸ்தரிக்க வேண்டும் என்று 'கபே' அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்று முடிந்த 65 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலின்போது ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஒருசில அறிவுறுத்தல்கள் மற்றும் பணிப்புரைகள் உரிய வகையில் அமுல்படுத்தப்படவில்லை என்று கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச ஊடகங்கள் தொடர்பில் முறையான பணிப்புரைகள் விடுக்கக்கூடிய அதிகாரங்கள் இருக்கவில்லை என்பதுடன் இடமாற்றங்கள் குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் குறைந்தளவான சந்தர்ப்பமே இருந்தது.

இந்தநிலையில் ஆணையாளரின் பணிப்புரைகளை மீறி அரச சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டன.

18 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் மூலம் தேர்தல் ஆணையாளருக்குள்ள அதிகாரங்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு நிலையே காணப்படுகின்றது.

இதனைவிட கூடுதல் அதிகாரங்கள் உரித்தாகின்ற ஒரு அரசியல் அமைப்புத் திருத்தத்தை நோக்கி நாடு பயணிக்க வேண்டுமென்பது இந்தத் தேர்தலின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளருக்கு கூடுதல் அதிகாரங்களை உரித்தாக்குகின்ற ஓர் அரசமைப்புத் திருத்தத்தை நோக்கி நாடு பயணிக்க வேண்டும்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆணையாளரால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளைச் சம்பந்தப்பட்ட தரப்பினரோ அல்லது அரசில் கட்சிகளோ எந்தளவுக்கு கவனம் செலுத்தின என்பது கேள்விக் குறி.

தேவையான தீர்மானங்களை உரிய நேரத்தில் மேற்கொள்வதற்குத் தேர்தல்கள் ஆணையாளருக்குப் போதுமான அதிகாரங்கள் இல்லை.

சுதந்திரமான தேர்தல் குறித்து கவனம் செலுத்துவதாயின் அதற்குரிய அதிகாரங்களைத் தேர்தல் ஆணையாளருக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும்- என்றார். (சி)

CCNA
புதிய வகுப்புக்கள் விரைவில்
100% Exam pass Guarantee
* Hands on Experience with Real Cisco Routers & Switches
* Past Exam Questions will be discussing along with every related modules
IDM
CISCO. CCNA
Jaffna Branch # 216 Navalar Road, Jaffna, Sri Lanka
T: 021 222 9901 | info@idmjaffna.com | www.idmjaffna.com

மாபெரும் கருத்தரங்கு A/L -2011
இம் முறை வரலாறு பாடத்தில் க.பொ.த. உயர்தரத்துக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான கருத்தரங்கு
இடம்: புதிய உயர்கல்லூரி மண்டபம் (ஆரியகுளம் சந்தி)
காலம்: நாளை (28.07.2011) வியாழன் (29.07.2011) வெள்ளி
நேரம்: காலை 8 மணி
வெளி மாணவர்களுக்கான அனுமதிக் கட்டணம் 450 /=
(21-19) (6218)

கோழிக் குஞ்சு விநியோகம்
தரமான No.1 Prima புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் 28.07.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.
★ சூட்டிபாம் சென்ரர் - 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
★ நெல்லியடி பல்நோக்கு விற்பனை நிலையம் - 0774656377
★ நல்லூர் பாம் சென்ரர், பருத்தித்துறை - 0771392593
★ நல்லூர் பாம் சென்ரர், கனகராயன் வீதி, கிளிநொச்சி - 0776225944
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். 021 222 6944

மணமகள் தேவை யாழ். இந்து கௌரவ குடும்பம், 1980 இல் பிறந்த, சித்திரை 4 ஆம் பாதம், செவ். இல்லை, பாவம் 24½, B.Sc பட்டதாரி, லண்டன் ஸ்ருடன்ஸ் விசாவில் உள்ளார். அவருக்கு P.R உள்ள மணமகள் தேவை. தொடர்பு: 0212240476

உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) பதவி வெற்றிடம் நிரப்புதல்
வடமாகாணத்தின் தீவக வலயக் கல்வி அலுவலகத்தில் கடமை நிறைவேற்றும் உதவிக் கல்விப்பணிப்பாளர் (தமிழ்) பதவி வெற்றிடமாகவுள்ளது.
இதற்கு ஆகக் குறைந்தது 3 வருடமேனும் சேவையாற்றக் கூடிய வயதெல்லையுடைய இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 1, 2-1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்பதாரிகள் சம்பந்தப்பட்ட பாடத்தில் 3 வருடத்துக்குக் குறையாத கற்பித்தல் அல்லது செயன்முறை அனுபவமுடைய பட்டதாரியாக அல்லது இதற்குச் சமமான தரமுடையதான தொழில்சார் பரீட்சையில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
இந்தப் பதவிக்கு யாழ்.மாவட்டப் பாடசாலையைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்கலாம். இ.ஆ.சே.1 இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பத்தில் மட்டுமே இ.ஆ.சே.2-1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து தெரிவு மேற்கொள்ளப்படும்.
விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவத்தை வலயக் கல்விப்பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
ப.விக்னேஸ்வரன்,
மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.
(சி/2088)

வீட்டுத் தோட்ட பராமரிப்பாளர் தேவை
யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டில் வீட்டுத் தோட்டப் பராமரிப்பாளர் தேவை, காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை 45 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம் ரூபா 10,000/=
தொடர்பு:-0771392137

காணி விற்பனைக்கு உண்டு
தெல்லிப்பழை வீதியில் உள்ள சிறுவிளானில் மெயின்றோட் அருகில் 34 பரப்புக் காணி வெட்டுக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: மத்தேசு அருளப்பு
தொ.பே.இல.: 0779037518, 0779459186
பெரியவிளான், ஆத்தியோலை.

ஓம் சக்தி ஜோதிட நிலையம்
ஜோதிடர் - நரேந்திரன் சுவாமி
தொ.பே. 0779759393, 0756794959
இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள சுவாமி அவர்கள் ஜாதகம், கைரேகை, கம்பியூட்டர் ஜோதிடம் என்பன நல்ல முறையில் கூறுவார். சந்திக்கும் நேரம்-காலை 7மணி, பி.பகல் 7மணி.
அமுல் கிறீம் ஹவுஸ் அன் பேக்கரி,
இல.452, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

அந்தியேட்டி சபிண்டீகரண மதியபோசன அழைப்பு

மலர்வு: 28.05.1936
உதிர்வு: 25.06.2011
அமரர் கதிரவேலு இலட்சுமிப்பிள்ளை
(பரமேஸ்வரி - நெல்லியடி, கரவெட்டி)
(சித்தம்மான் - வள்ளியம்மை தம்பதிகளின் புதல்வி)
25.06.2011 அன்று சிவபதமடைந்த எமது தாயாரின் துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள். அன்னாரின் நினைவாக இன்று(27.07.2011) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப.11 மணிக்கு ஆரம்பமாகும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையைத் தொடர்ந்து மதியபோசனமும் இடம்பெறும். இதைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.
சரஸ்வதி வித்தியாலய வீதி,
சேர்ச் ஒழுங்கை,
கரவெட்டி வடக்கு.
எஸ்.சிவநாதன் (மகன்- கொழும்பு 13)
பி.சாந்தினி (மகள் - UK),
கே.சாந்தகுமார் (மகன் - UK)
கே.வசந்தினி (மகள்- கரவெட்டி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷவை தண்டிக்கக் கோரி கையெழுத்து இயக்கம் நடிகர் விஜய் கையொப்பமிட மறுத்தார்



சென்னை, ஜூலை 27

இனப்படுகொலை செய்த ஜனாதிபதி ராஜபக்ஷ கும்பலை அனைத்துலக நீதிமன்றம் தண்டிக்கக் கோரி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் ஆரம்பித்த பொதுமக்களிடம் கையெழுத்துப் பெறும் படிவத்தில் நடிகர் விஜய் கையெழுத்து போட மறுத்துவிட்டார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரில் இனப் படுகொலை செய்த அந்த நாட்டு ஜனாதிபதி ராஜபக்ஷ கும்பலை அனைத்துலக நீதிமன்றம் தண்டிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி நாடு கடந்த தமிழீழ அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக விடுதலைச் சிறுத்தைகளின் மாபெரும் கையொப்ப இயக்கம் கடந்த 12 ஆம் திகதி சென்னையில் ஆரம்பமாகியது.

கடந்த 25 ஆம் திகதி திரைத் துறையைச் சார்ந்த சத்தியராஜ், மணிவண்ணன், ஆர்.கே. செல்வமணி, ரோஜா, அறிவுமதி உள்ளிட்ட பலர் கையொப்பம் இட்டனர்.

இதேபோல் நடிகர் விஜய் ஈழத் தமிழர்களைப் பற்றி பேசி வருவதால், அவரிடம் கையெழுத்து வாங்க விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் செய்தித் தொடர்பாளர் வன்னியரசு தலைமையில் மாநில நிர்வாகி தகடூர் தமிழ்ச் செல்வன், மடிப்பாக்கம் வெற்றிச் செல்வன், விடுதலைச் செல்வன், செந்தில்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் முடிவு செய்தனர்.

சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள ஓர் இடத் தில் இயக்குநர் சங்கர் இயக்கி வரும் நண்பன் படத்தின் படப் பிடிப்பில் நடிகர் விஜய் இருந்துள்ளார். படப் பிடிப்பு முடிந்து ஓய்வு எடுத்துக்கொண்டிருந்த விஜய்யிடம், கையெழுத்து இடுமாறு கேட்டனர். இதற்கு நடிகர் விஜய் கையெழுத்து போட மறுத்துவிட்டார்.

இதுகுறித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் செய்தித் தொடர்பாளர் வன்னியரசு கூறியதாவது:

நடிகர் விஜய் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. எனக்கு விருப்பம் இல்லை என்று சொல்லி கையெழுத்து போட மறுத்துவிட்டார். இதையடுத்து விஜய்யின் தந்தை இயக்குநர் எஸ்.ஏ.சந்ரேசேகரைத் தொடர்பு கொண்டபோது அவர் கூறுகையில், உங்களைப் போலவே நாமும் ஒரு அமைப்பு வைத்திருக்கிறோம். உங்களுக்கு கையெழுத்துப் போடவேண்டிய அவசியம் இல்லை. படப் பிடிப்புக்கு தொந்தரவு கொடுக்காமல் அந்த இடத்தை விட்டு வெளியேறுங்கள் என்றார்.

இதேவேளை விஜய் கையெழுத்துப் போட மறுத்திருப்பது உலக தமிழர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. (வ)

## இலங்கை மீனவர்கள் 13 பேர் இந்தியாவில் தடுத்துவைப்பு

ஒரிஸா,ஜூலை 27

இலங்கை மீனவர்கள் 13 பேர் இந்திய எல்லைப் பாதுகாப்புப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஒரிஸா கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்ததனாலேயேயே இந்த மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

எல்லைப் பாதுகாப்பு பிரிவினர் மேற்படி மீனவர்களையும் அவர்களின் படகுளையும் எல்லைப் பாதுகாப்பு பொலிஸாரிடம் கையளித்துள்ளனர்.

இவர்கள் பயணித்த ரோலர் படகுகள் குறித்து இந்திய சுங்கத் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(வ)

# மருத்துவ உதவி வழங்க அனுமதி பெற்றுத் தருக

### மத்திய அரசிடம் கோரிக்கை

சென்னை,ஜூலை.27

இலங்கையின் வடக்குப் பகுதி மக்களுக்கு தமது சேவையை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசிடம் அனுமதியைப் பெற்றுத்தருமாறு சமூக ஒருமைப்பாட்டுக்கான மருத்துவ சம்மேளனக் குழு இந்திய மத்திய அரசிடம் தமது கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை வட பிராந்தியத்தில் தமிழ் மக்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்குவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு கோரி மேற்படி மருத்துவக் குழு சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

மேலும் மருத்துவ நிவாரணங்களை வழங்குவதற்கு தாம் இலங்கைக்கு வர வேண்டியிருப்பதாகவும் தமது கோரிக்கையில் அந்த சம்மேளனம் தெரிவித்துள்ளது. (வ)

# பத்மநாப சுவாமி கோயில் பாதாள அறைகளுக்கு இரும்புக் கதவுகள்

திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோயில் பாதாள அறை பொக்கிஷங்களைப் பாதுகாக்க இரும்புக் கதவுகள் அமைக்கப்பட வேண்டும் என்று மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கேரள தலைநகர் திருவனந்தபுரத்தில், பிரசித்தி பெற்ற பத்மநாப சுவாமி கோயிலின் பாதாள அறைகளில், ஒன்றரை லட்சம் கோடி ரூபாவுக்கும் மேல் மதிப் புள்ள பொக்கிஷங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்தப் பொக்கிஷங்களைப் பாதுகாக்க, மாநில அரசு சிறப்பு பொலிஸ் ஏற்பாடு செய்துள்ளது.

பொக்கிஷங்கள் குறித்து மதிப்பீடு செய்ய, ஐந்து பேர் கொண்ட குழுவை மேல் நீதிமன்றம் அண்மையில் நியமித்தது. இதன் தலைவராக, தேசிய அருங்காட்சியக இயக்குனர் ஆனந்த்போஸ் நியமிக்கப் பட்டுள்ளார். பொக்கிஷங்கள் குறித்து பொலிஸின் நம்பிக்கைக்குரிய வீடியோ கலைஞரும், புகைப்படக் கலைஞரும் நியமிக்கப்பட்டு அவர்கள் மூலமாக புகைப்படங்கள் எடுக்கலாம் என்றும் மேல் நீதிமன்றம் தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளது.

(வ)

IDM
City Campus # 3

IDM REGIONAL HEAD OFFICE
-NORTH & EAST

The Sri Lankan Brand for Higher Education



IDM Nations Campus

Courses available in Jaffna District

DEGREE FOUNDATION PROGRAMMES
- Diploma in ICT
- Diploma in Multimedia
- Advanced Diploma in Computer Networks
- Diploma in Business Management

HIGHER DIPLOMA PROGRAMMES
- Higher Diploma in Software Development
- Higher Diploma in ICT Systems Support
- Higher Diploma in Business Management

Our Service Providers in Jaffna District

IDM NATIONS CAMPUS – JAFFNA
#214, Navalar Road, Jaffna
T: 021 222 9901 | Email: jaffna@idmcc3.lk

IDM NATIONS CAMPUS – CHAVAKACHCHERI
#5 1/1, Kandy Road, Chavakachcheri
T: 021 227 0270 | Email: chava@idmcc3.lk

IDM NATIONS CAMPUS – CHANKANAI
#30, Main Street, Chankanai
T: 021 742 9060 | Email: chankanai@idmcc3.lk

IDM eKids & eTeens Division - JAFFNA
#1, 1st Lane, Brown Road, Neeraviyadi, Jaffna
T: 021 720 0266 | Email: idmek@idmcc3.lk

City Campus #3 – North & East Regional Head Office
IDM Nations Campus
#16, [illegible] Colombo 06
T: +9[illegible] 11 236 1807
info@idmcc3.lk | www.idmcc3.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாவது "தேசத்துக்கு மகுடம்" கண்காட்சி

# 2600 ஏக்கர் நிலப்பரப்பில் நடத்த ஏற்பாடு

## ஜனாதிபதி நேரில் சென்று பார்வையிட்டார்

ஆறாவது "தேசத்திற்கு மகுடம்" கண்காட்சி அநுராதபுரம் பகுதியில் 2600 ஏக்கர் நிலப்பரப்பில் நடைபெறவுள்ளதுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்த இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

கிராமிய அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் பெரிய மற்றும் நிலையான அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி இதன்போது பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆறாவது "தேசத்திற்கு மகுடம்" கண்காட்சியானது 2600 ஏக்கர் நிலப்பரப்பில் 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி முதல் தந்திரிமலை ஓயாமடுவ பிரதேசத்தில் நடைபெற உள்ளது.

இம்முறை நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சியை அடிப்படையாகக் கொண்டு இந்தத் திட்டதை செயற்படுத்துமாறும் அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள குளங்கள் அனைத்தையும் புனரமைப்பதற்கு நட வடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கண்காட்சிக்காக சுமார் 1300 ஏக்கர் நிலப்பரப்பை சுத்தம் செய்யும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 500 ஏக்கர் பிரதேசம் கண்காட்சிக் கூடங்களுக்காகவும் மேலும் ஒரு பகுதி இராணுவ பயன்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்பட உள்ளதுடன் எஞ்சிய பிரதேசத்தில் விவசாயப் பண்ணை ஒன்றினை ஆரம்பிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

பண்ணைக்காக ஒதுக்கப்பட்டுள்ள பிரதேசத்தையும் ஜனாதிபதி நேரில் சென்று பார்வையிட்டுள்ளதுடன் அனைத்து அபிவிருத்திப் பணிகளையும் நிரந்தர பயன்பாட்டிற்கு உதவும் வகையில் மேற்கொள்ளுமாறு தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவிற்கு ஜனாதிபதி இதன்போது ஆலோசனை வழங்கினார்.



இந்தப் பிரதேசத்தில் பொருளாதார மத்திய நிலையமொன்றும் நிர்மாணிக்கப்பட உள்ளதுடன் முதலீட்டுச் சபையினால் இங்கு விவசாய உற்பத்திக்கான பெறுமதி சேர்க்கும் செயற்றிட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் அமைச்சர் ரஞ்சி சியம்பிலாப்பிட்டிய தெரிவித்தார்.

ஜனாதிபதியுடன் கமநலசேவைகள் மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன, பெருந்தோட்டக் கைத்தொழில் பிரதி அமைச்சர் ஏர்ல் குணசேகர, நாடாளுமன்ற உறுப்பினர் அசங்க சேமசிங்க உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர். (ற)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 27

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் ஆடிப்பூரத் திருவிழா கடந்த 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி விசேட பூசை வழிபாடுகளுடன் இடம் பெற்று வருகின்றது.எதிர்வரும் முதலாம் திகதிவரை விசேட அபிசேகங்களும் இலட்சார்ச்சனையும் நடைபெறும்.(ற-313)

***

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் ஆடி அமாவாசை நிகழ்வுகள் எதிர்வரும் சனிக்கிழமை வில்லூன்றிப் புனித தீர்த்தத்தில் நடைபெறவுள்ளன. காலை 5.45 மணிக்கு விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி வசந்த மண்டபப் பூசையும் புனித தீர்த்த வாரியும் அமாவாசை தீர்த்த சங்கற்பமும் இடம் பெறும். (ற-313)

***

ஊரெழு கிளானைப்பதி மனோன் மணி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்று வரும் சாகல்யப் பெருந்திருவிழாவில் நாளை வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு கைலாசவாகனம் இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு தைலாப்பியங்கம் இடம்பெறும். (ற)

***

வல்வை கப்பலுடையவர் ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த வியாழக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இன்று புதன்கிழமை வசந்தோற்சவமும் எதிர்வரும். சனிக்கிழமை ஆடி அமாவசை தினத்தன்று ஊறணி சமுத்திரத்தில் தீர்த்தமாடி நெடியகாடு திருச்சிற்றம்பல பிள்ளையார் ஆலயத்தில் தங்கியிருந்து மாலை 6.30 மணிக்கு ஆலயம் நோக்கி விநாயகப் பெருமான் செல்வார் (ற-253)

## சிறுகதைத் தொகுப்பு வெளியீடு

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் ஸ்ரீ பாத தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் ம.நிரேஸ்குமார் "இவர்களும் யதார்த்தவாதிகள்தாம்" என்னும் சிறுகதைத் தொகுப்பு நூல் அறிமுக விழா எதிர்வரும் சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு கல்லூரியின் பிர தான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈழத்தின் மூத்த எழுத்தாளர் செங்கை ஆழியான் கலந்து கொள்வார். (ற-313)


## நன்றி நவில்கின்றேன்

உள்ளூராட்சி தேர்தல் 2011 நகரசபை, சாவகச்சேரி

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்

இறப்பியேல் தேவசகாயம்பிள்ளை

வழங்கும் நன்றி அறிதல்



இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு முழுமையான ஆதர வைத் தந்து தங்கள் வாக்கு களை தமிழரசுக் கட்சிக்கும் எனது விருப்பு இலக்கமான 2 இற்கும் அமோக வாக்களித்து வெற்றி பெறச்செய்த வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது இதய பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இ.தேவசகாயம்பிள்ளை


## இலங்கையின் சுற்றுலாத்துறை வருமானத்தில் துரித வளர்ச்சி

கொழும்பு, ஜூலை 27

இலங்கையின் சுற்றுலாத்துறை வருமானம் 2011ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் 370 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் இதே காலப்பகுதியில் 245 மில்லியன் அமெரிக்க டொலர்களே வருமானமாகக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு இலங்கையில் துரிதமாக வருமானத்தை அதிகரித்து வருவதில் சுற்றுலாத்துறை பெரும் பங்கு வகிக்கிறது எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மேலும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 36.9 வீதமாக அதிகரித்துள்ளது.

இந்த வருடம் முதல் ஆறு மாத காலப்பகுதியில் 381,538 பேர் சுற்றுலாப் பயணிகளாக இலங்கைக்கு வந்துள்ளனர் எனவும் கடந்த வருடத்தில் முதல் ஆறு மாதகாலப் பகுதியில் 278,652 சுற்றுலாப் பயணிகளே வருகை தந்தனர் எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.


## சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சு

அரசாங்க மரக்கூட்டுத்தாபனம் -கிளிநொச்சி

### ஏலவிற்பனை

கிளிநொச்சி,ஸ்ரேசன் வீதியில் அமைந்துள்ள அரசாங்க மரக் கூட்டுத்தாபன விற்பனை நிலையத்தில் 28.07.2011 அன்று மரங்கள், அரிவுமரங்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

மரங்கள் : பாலை
முதிரை
யாவறணை
காட்டாமணக்கு

பொறுப்பதிகாரி
அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்
கிளிநொச்சி.

தொலைபேசி இல :
021 2285409 (கிளிநொச்சி)
021 2220278(யாழ்ப்பாணம்)


## தெய்வீக இசை விருந்து

யாழ்ப்பாணம், ஜூலை 27

உலகப்புகழ் பெற்ற இந்தியப் பாடகரும் பகவான் பாபாவின் பக்தருமான ஸ்ரீ ரவிராஜ் நசேறி வழங்கும் தெய்வீக இசை விருந்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சேர் பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

(ற)


### தவறிவிட்டது

சாசாலை வடக்கு சாவகச்சேரி என்னும் முகவரியுடைய திருமதி மகேஸ்வரன் நளாயினி என்பவரின் தே.அ.அ [706592458 V], இராணுவ அடையாளஅட்டை,வங்கிப் புத்தகங்கள், உத்தியோக அட்டை [Job card] என்பன சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கும் சாசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடனோ அல்லது தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.

யாழ்.ரெக்ஸ், சாவகச்சேரி
021 227 0201, 0779395108

### தவறிவிட்டது

278A,பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த S. தங்கராஜா என்பவருடைய முக்கிய மருந்து வகைகளும் உடுபுடைவைகளும் அடங்கிய நீல நிற பாக் [Ranjanas] நல்லூருக்கும் நாவற்குழிக்கும் இடையில் நேற்று அதிகாலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

071 3056107, 021 222 1504



## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 01 ★ 01 ★ 1964



இறைவன் அடியில் 06 ★ 08 ★ 2010

அமரர் சுப்பிரமணியம் நவரத்தினம் (நவம்)

(உரிமையாளர், நவம் களஞ்சியம், சாவகச்சேரி)

ஓராண்டு ஓடி மறைந்தாலும்
உன் நினைவால் உழல்கின்றோம்
உன் சகோதரர்கள், மைத்துனர்கள்
மற்றும் உற்றார், உறவினர்கள்
எல்லோரும் ஓடி ஓடித்தேடுகின்றோம்
உன் நிழலைக் கூட காணவில்லையே
நீ உன் வாழ்வின் சலிப்பிலா
இறைவன் நிழலில் ஒதுங்கிவிட்டாய்!
நாங்கள் எப்போது உன்னைக் காண்பது

உன்பிரிவால் துயறுரும்
மனைவி,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(136) (45-19-20)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஒரிசாவில் 'பாஸ்கோ' உருக்காலை அமைப்பதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பைக் கோரும் தென்கொரியா

## அந்நாட்டு அதிபர் தெரிவிப்பு

சியோல், ஜூலை 27

''இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில், ''பாஸ்கோ'' உருக்காலை அமைப்பதற்கு, இந்திய அரசு ஒத்துழைப்புத் தர வேண்டும்'' என தென்கொரிய அதிபர் லீ மியுங் பாக், இந்திய ஜனாதிபதி பிரதிபா பாட்டீலிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஒரிசாவின் ஜகத்சிங்பூர் மாவட்டத்தில், தென்கொரியாவின், 'பாஸ்கோ' நிறுவனம், 54 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருக்காலை அமைக்க, 2005இல் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், கடந்த ஆறு ஆண்டுகளாக அந்தப் பகுதி மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால், உருக்காலைப் பணிகள் ஆரம்பிக்கப்பட வில்லை. இந்தநிலையில், கடந்த இரு நாள்களாக தென் கொரியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய ஜனாதிபதியிடம், தென் கொரிய அதிபர் லீ மியுங் பாக், பாஸ்கோ விவகாரம் குறித்துப் பேசினார்.

இதுகுறித்து, அதிபர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''இந்தியாவில் சாலை, மின்சாரம் மற்றும் தொழிற்சாலை ஆகிய உட்கட்டமைப்புப் பணிகளில், தென்கொரிய நிறுவனங்கள் பங்களிக்கும் அதேநேரம், ஒரிசாவில், 'பாஸ்கோ' உருக்காலை அமைப்பதற்கு இந்திய அரசின் ஒத்துழைப்பு வேண்டும் என, அதிபர் குறிப்பிட்டார்'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தொடர்ந்து, இந்தியாவின் அணு மின் திட்டங்களில் தென் கொரிய நிறுவனங்கள் பங்கேற்க வழி செய்யும் இருதரப்பு சிவில் அணுசக்தி ஒப்பந்தம், நேற்று முன்தினம் கையெழுத்தானது.

கடந்தாண்டு ஒக்ரோபரில், வியட்நாம் தலைநகர் ஹனோயில் நடந்த 'ஏஷியன்' உச்சி மாநாட்டின் போது, இருதரப்பு அணுசக்தி ஒப்பந்தம் குறித்து, பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் லீ மியுங் பாக் இடையில் பேச்சு நடந்தது. அதன் தொடர்ச்சியாக, தற்போது ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

மேலும், கடல்வழிப் போக்குவரத்து, இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு, ஊடகப் பரிமாற்றம், இருநாடுகளிலும் பணிபுரியும் இருநாட்டு பணியாளர்களின் சமூகப் பாது காப்பு ஆகிய ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின.

# 5.கீ.மீ. ஆழத்தில் நீர்மூழ்கியை இயக்கி சாதனை



மூன்று மனிதர்களுடன் கடலுக்கடியில் சுமார் 5057 மீற்றர் ஆழம் வரை நீர்மூழ்கியை இயக்கி சீனா புதிய சாதனை படைத்துள்ளது.

ஜியோலாங் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த நீர்மூழ்கி பசிபிக் கடலின் மிக ஆழமான பகுதியில் சோதனை செய்து பார்க்கப்பட்டது.

இதில் நீர்மூழ்கியை சுமார் 5057 மீற்றர் ஆழம் வரை இயக்கி சீனா சாதனை படைத்துள்ளது. இதுவரை அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளே 3500 மீற்றர் ஆழத்துக்கும் கீழே நீர்மூழ்கிகளை இயக்கி சாதனை படைத்த நாடுகள் எனபது குறிப்பிடத்தக்கது. இந்த வரிசையில் இடம்பிடித்து சீனா சாதனை படைத்துள்ளது.

# பல கட்சிகளை அங்கீகரிக்கும் மசோதாவை சிரிய அரசு ஏற்பு

டமாஸ்கஸ், ஜூலை 27

சிரியாவில், பல கட்சிகளை அங்கீகரிக்கும் மசோதாவை அந்தநாட்டு அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதன்மூலம் அந்தநாட்டு அரசியலில் மாற்றம் வரலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. எனினும், இது வெறும் கண் துடைப்பு என எதிர்க்கட்சிகள் கூறியுள்ளன.

சிரிய அரசியல் சாசனப்படி அந்தநாடு நாடாளுமன்றம் ஜனநாயக அரசியல் கொண்டது என்றாலும், அரபு சோசலிச மறுமலர்ச்சி கட்சி (ஆளும் பாத் கட்சி) தான் 1963 இல் இருந்து ஆட்சியில் உள்ளது.

கடந்த மார்ச் 15ஆம் திகதி முதல், சிரியாவில் அதிபருக்கு எதிராக நடந்து வரும் போராட்டத்தில், அரசியல் சீர்திருத்தக் கோரிக்கை தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது. போராட்டத்தை அடக்கும் வகையில், தற்போது பல கட்சிகளையும் அங்கீகரிக்கும் மசோதாவை அந்தநாட்டு அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்த மசோதா விரைவில் நாடாளுமன்றில் தாக்கல் செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்படும். இம்மசோதாவின்படி, மதம்,பழங்குடியினர் விவகாரம், மண்டல மற்றும் தொழில் ரீதியான அமைப்புகள் ஆகியவற்றின் அடிப்படையிலான கட்சிகள் அனுமதிக்கப்படமாட்டாது. அதேபோல், சிரிய நாட்டவர் அல்லாதோர் கட்சி ஆரம்பிக்கக் கூடாது.



அரசுமுறைப் பயணமாக தென்கொரியா சென்றுள்ள இந்திய ஜனாதிபதி பிரதிபா பட்டீலுக்கு, தலைநகர் சியோலில் உற்சாக வரவேற்பு அளிக்கும் தென்கொரிய அதிபரின் மனைவி லீ யங்-பாக்

# ஈராக்கில் குர்து முகாம் மீது தாக்குதல்

பாக்தாத், ஜூலை 27

ஈராக்கில் உள்ள குர்து இன பிரிவினைவாதிகள் முகாம் மீது ஈரான் ராணுவம் நடத்திய தாக்குதலில், அந்தப் பிரிவைச் சேர்ந்த வீரர்கள் 8 பேர் இறந்தனர். குர்து இன பிரிவினைவாதிகளின் ஆதரவுப் பிரிவைச் சேர்ந்த மேலும் இருவரும் பலியானதாகத் தகவல்கள் கூறுகின்றன.

சண்டை காரணமாக இடம் பெயர்ந்துள்ள 800 பேருக்குத் தேவையான அடிப்படை உதவிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மேற்கொண்டுள்ளனர். ஏவுகணைத் தாக்குதல் காரணமாக சமீபத்தில் இவர்கள் அனைவரும் குவாதில் என்ற மலைப் பிரதேசத்தை விட்டு வெளியேறியவர்களாவர்.

இவர்களுக்கு தற்காலிக குடியிருப்பு வசதிகளுடன் இந்த மக்களுக்குத் தேவையான படுக்கைகள், குடிநீர் வடிகட்டி உபகரணங்கள் உள்ளிட்ட வற்றை வழங்கியுள்ளதாக ஜெனீவாவில் உள்ள சர்வதேச தொண்டு நிறுவனமான செஞ்சிலுவைச் சங்கம் செய்தி வெளியிட்டுள்ளது.

# கடன் உச்ச வரம்பு விடயத்தில் மெத்தனம் குடியரசுக் கட்சி மீது ஒபாமா குற்றச்சாட்டு

வாஷிங்டன், ஜூலை 27

அமெரிக்க தேசிய கடன் உச்சவரம்பை உயர்த்தும் விடயத்தில் பிரிதிநிதிகள் சபை குடியரசுக் கட்சியினர் மெத்தனம் காட்டியதாக ஜனாதிபதி ஒபாமா குற்றம் சாட்டினார்.

அமெரிக்காவின் இந்த ஆண்டு வரவு செலவு நிதி நிலை பற்றாகுறை 1.5 லட்சம் கோடி டொலராக உள்ளது. இதனால் தேசிய கடன் உச்சவரம்பு அளவான 14.3 லட்சம் கோடி டொலரை எட்டும் அபாயம் அமெரிக்காவுக்கு ஏற்பட்டது.

ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதிக்குகள் கடன் உச்ச வரம்பை உயர்த் தாவிட்டால் அமெரிக்க அரசு எந்தத் திட்டப் பணிகளுக்கும் நிதிதர முடியாத நிலை ஏற்படும்.

வரி அதிகரிப்பு திட்டத்திற்கும் குடியரசுக் கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்தனர். குடியரசுக் கட்சி யினர் 1.21 லட்சம் கோடி டொலர் செலவின குறைப்பு மேற்கொள்ள அறிவுறுத்தி உள்ளனர். 1 லட்சம் கோடி டொலர் கடன் உச்ச வரம்பை அதிகரிக்க முன்வந்துள்ளனர்.

இதுகுறித்து ஒபாமா கூறுகையில்,''இது சரியான முடிவாக இருக்காது. இன்னும் 6 மாதத்தில் மீண்டும் கடன் உச்ச வரம்பு அதிகரிக்க வேண்டிய நெருக்கடி ஏற்படும்'' என்றார்.

# விண்ணிலிருந்து பார்க்கக் கூடியவாறு பெயரைப் பொறித்த கோடீஸ்வரர்

ஐக்கிய அரபு நாட்டை சேர்ந்த கோடீஸ்ரர் ஹமாத், சமீபத்தில் அபுதாபி அருகே உள்ள அல் புடய்சி என்ற தீவை விலைக்கு வாங்கினார். அங்கு தனது பெயரை 3 கி.மீற்றர் நீளத்துக்கு எழுதி வைத்தார்.

தனது பெயரின் ஒவ்வொரு எழுத்தையும் சுமார் 0.5 கி.மீற்றர் நீளத்துக்கு ஆங்கில எழுத்தில் பொறித்துத் தரையில் பதித்து வைத்துள்ளார். அந்த எழுத்துக்களை விண்ணில் பறந்தபடியே பார்க்க முடிகிறது.

இந்த எழுத்துக்கள் பேஷ்புக் இணைய தளத்திலும் இடம் பெற்றுள்ளன. அந்த எழுத்துக்கள் தண்ணீரால் அழிக்க முடியாதபடி எழுதப் பட்டுள்ளன.

சமீபத்தில், இவர் ரூ.12 கோடிக்கு உலகின் மிக விலை உயர்ந்த அதிநவீன காரை வாங்கினார். அபுதாபியில் இவருக்கு ஆட்டோமொபைல் மியூசியம் உள்ளது.

அங்கு கவர்ச்சிகரமான 200 வெளிநாட்டுக் கார்கள் உள்ளன. இவர் மிகப்பெரிய ஒரு லொறியை வடி வமைத்துள்ளார். அது அவரது மாளிகையை விட 64 மடங்கு பெரியது என்று குறிப்பிடத்தக்கது.

# மக்கள் முன்னிலையில் விசாரிக்க நோர்வே தாக்குதலாளி விருப்பு

## பொலிஸ் சீருடையில் வரவும் அனுமதி கோருகிறார்

ஒஸ்லோ, ஜூலை 27

நோர்வேயில் கடந்த வெள்ளிக்கிழமை குண்டு வைத்தும், துப்பாக்கியால் சுட்டும் 93 பேரைக் கொன்ற ஆண்டர்ஸ் பெரிங் பிரீவிக் தன்னை பொது மக்கள் முன்னிலையில் விசாரிக்க வேண்டுமெனக் விருப்பம் தெரிவித்துள்ளார்.

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் பிரதமர் அலுவலகக் கட்டடம் அருகே கடந்த வெள்ளிக்கிழமை குண்டு வெடித்ததில் 7 பேர் இறந்தனர். இந்த சம்பவம் நடைபெற்ற 2 மணி நேரத்தில் தலைநகரின் அருகே உள்ள உடோயா தீவில் குழுமியிருந்த நூற்றுக் கணக்கான இளைஞர்களை பொலிஸ் உடையில் வந்த இளைஞர் கண்மூடித்தனமாகச் சுட்டுக் கொன்றார்.

இந்த இரு சம்பவத்துக்கும் காரணமான ஆண்டர்ஸ் பெரிங் பிரீவிக் என்ற 32 வயது இளைஞரை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தனது குற்றத்தை ஒப்புக் கொள்வதாகத் தனது வழக்கறிஞர் கெர்லிப்பெஸ்டாட் மூலம் தெரிவித்துள்ள பிரீவிக் திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு டவுன்டவுன் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அப்போது பொதுமக்கள் மத்தியில் தன்னை விசாரிக்க வேண்டும் என்ற பிரீவிக்கின் விருப்பத்தை அவரது வழக்கறிஞர் தெரிவித்தார். இது குறித்த முடிவை நீதிபதி அறிவிப்பார் எனத் தெரிகிறது.

இது தொடர்பாகச் செய்தியாளர்களிடம் பேசிய வழக்கறிஞர், பிரீவிக்கிற்கு இரு விருப்பங்கள் உள்ளன. அதில் ஒன்று தான் எதற்காக இந்தத் தாக்குதலை நடத்தினேன் என்று தெரிவிப்பதற்காக, பொதுமக்கள் மத்தியில் வைத்து தன்னை விசாரிக்க வேண்டும்.

மற்றொன்று விசாரணையின் போது பொலிஸ் சீருடையில் வர அனுமதிக்க வேண்டும் என்பதாகும் எனத் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு முன்னதாக லண்டன் முகவரியிட்ட 1,500 பக்க அறிக்கை ஒன்றை எழுதியுள்ளார். அதில் தனது தலைவர் இங்கிலாந்தை சேர்ந்த ரிச்சர்ட்.

இஸ்லாத்தை பொறுத்துக் கொள்ளும் ஐரோப்பிய நாடுகளை கவிழ்ப்பதற்காக என்னைப் போல 80 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று அதில் குறிப்பிட்டுள்ளதாக 'தி டெலிகிராப்'நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதையடுத்த லண்டனுக்கு பிரீவிக் எப்போது வந்து சென்றார் என்பது பற்றி ஸ்கொட்லாந் பொலிஸார் விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் தடவையாக நடந்த

# 12 வயதுப்பிரிவு வலைப்பந்தாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து கிண்ணம் சுவீகரிப்பு

வலி.வடக்கு, ஜூலை 26

''நெஸ்லே'' நிறுவனத்தால் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே முதல் தடவையாக 12 வயதுப் பிரிவினருக்கு நடத்திய வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இந்தப் போட்டி முதல் தடவையாக நடைபெற்றபோதிலும் இரு அணிகளின் வீராங்கனைகளும் சளைக்காது மோதிக் கொண்டனர்.

முதல் பாதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 3:0 என்ற புள்ளிகளின் அடிப் படையில் முன்னணியில் நின்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் பலத்த எதிர் பார்ப்புக்களுக்கு மத்தியில் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களின் பலத்த ஆலோசனையைப் பெற்று களமிறங்கின.

இரு அணிகளும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் கடுமையாக மோதிக் கொண்டதுடன் இரு அணிகளினாலும் புள்ளிகள் பெறும் முயற்சியிலும் பெரும் பின்னடைவுகள் காணப்பட்டன.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒரு புள்ளி பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவடைந்தது.

ஆட்ட நிறைவில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி 4:1 புள்ளி என்ற அடிப்படை யில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியை வெற்றி பெற்று சம்பியனாகியது.

மூன்றாம் இடத்தை உடுவில் மகளிர் கல்லூரி தட்டிச் சென்றது.

(ஐ-86)

# நான்கு பதக்கங்கள் பெற்று எழுவைதீவு முருகவேள் சாதனை



வெற்றி பெற்ற மாணவர்கள் தீவக வலய கல்விப் பணிப்பாளர் வி.ராதாகிருஸ்ணன் மற்றும் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆசிரிய ஆலோசகர், பாடசாலை அதிபர் ச.கமல தீபன், பொறுப்பாசிரியர்கள் ஆகியோருடன் .

யாழ்ப்பாணம், ஜூலை 27

வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டி அண்மையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மைதானத்தில் நடை பெற்றது.

இதில் எழுவைதீவு முருகவேள் வித்தியாலய மாணவர்கள் 2 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கங்கள் என்பவற்றைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

11 வயதுப்பிரிவு நீளம் பாய்தலில் ஜெ.ஜெனிற்றா தங்கப் பதக்கத்தைப் பெற்றதுடன் சிறந்த மைதான வீராங்கனைக்குரிய கேடயத்தையும் பெற்றுள்ளார். 15 வயதுப் பிரிவு நீளம் பாய்தலில் ந.தர்சிகா வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். 17 வயதுப்பிரிவு உயரம்பாய்தலில் க.தனுஷன் தங்கப் பதக்கத்தையும் சிறந்த மைதான வீரனுக்குரிய கேடயத்தையும் பெற்றுக்கொண்டார்.

19 வயதுப் பிரிவு அரை மரதன் போட்டியில் ஜெ.மரிய கொறற்றி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டார்.

(ஐ)

# மாத்தறையில் வலைப்பந்தாட்டம்; யாழ்.பாடசாலைகளும் பங்கேற்பு

வலி.வடக்கு, ஜூலை 27

அகில இலங்கை பாடசாலை அணிகளுக்கிடையே "நெஸ்லே" நிறுவனத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் சனிக்கிழமை முதல் மாத்தறை உயன்வத்தை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள வலைப் பந்தாட்ட சுற்றுப் போட்டியில் யாழ் மாவட்ட அணிகளும் பங்கேற்கின்றன.

பங்குகொள்ளவுள்ள அணிகள் விவரம் வருமாறு:

**12 வயதுப்பிரிவு**

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, சுழிபுரம் விக்ரோறி யாக் கல்லூரி, உடுவில் மகளிர் கல் லூரி, அராலி சரஸ்வதி மத்திய மகாவித்தியாலயம், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, வடமராட்சி பருத்தித்தறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப்பாடசாலை.

**14 வயது பிரிவு**

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம், வடம ராட்சி இந்துமகளிர் கல்லூரி, அராலி சரஸ்வதி மத்திய மகா வித்தியாலயம், வடமராட்சி பருத்தித் துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி,

**16 வயது பிரிவு**

வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி, அராலி சரஸ்வதி மத்திய மகாவித்தியாலயம், தெல்லிப்பழை யூனியன்கல்லூரி, வடமராட்சி பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, மருதனார்மடம் இராம நாதன் கல்லூரி

**18 வயது பிரிவு**

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி, உடுவில் மகளிர்கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, புத்தூர் சோமஸ் கந்தக் கல்லூரி.

(ஐ-86)


## மனமார்ந்த நன்றிகள்

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் 2011 இல் மானிப்பாய் தொகுதிக்கு உட்பட்ட வலிகாமம் தென். மேற்கு மற்றும் வலிகாமம் தெற்கு ஆகிய இரு பிரதேச சபைகளுக்கும் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களை பெருவெற்றிபெற வாக்களித்து அயராது உழைத்த எமது வாக்காளர்களுக் கும், ஆதரவாளர்களுக்கும், அர்ப்பணிப்பு டன் இரவு, பகல் பாராது எம்முடன் செயலாற் றிய கட்சிப் பிரமுகர்களுக்கும் நலன் விரும்பிகளுக்கும் என் றென்றும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இலங்கை தமிழரசுக்கட்சி மானிப்பாய்த் தொகுதி

க.கௌரிகாந்தன்
தலைவர்

பா.கஜதீபன்
செயலாளர்

## மனமார்ந்த நன்றிகள்

சாவகச்சேரி நகரசபைத் தேர்தல் -2011



நடைபெற்று முடிந்த நகரசபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு கூடிய வாக்களித்து என்னையும் மூன்றாவதாக வெற்றி பெறச் செய்த மதிப்புக்குரிய வாக்காளப் பெரு மக்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்

கந்தையா மயில்வாகனம்
(ஓய்வுபெற்ற அதிபர்)

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(1976)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் யோகேந்திரன் துஷாளினி



பிறப்பு 20 12 2003

இறப்பு 27 06 2011

எட்டுவயதினிலே
பெற்ற எம்மை ஏங்கித்
தவிக்கவிட்டு எமலோகம்
ஏன் சென்றீர்
பள்ளிப்பருவத்திலே
பாசமுடன் வளர்த்த
எம்மை பரிதவிக்க
வைத்து விட்டு
பரலோகம் ஏன் சென்றீர்.
மழலைப்பருவத்திலே திறமை பல படைத்து
விட்டு மின்னாமல் முழங்காமல் மறு உலகம் ஏன் சென்றீர்
பிஞ்சுப் பருவத்திலே பூத்துக்குலுங்கி எம்மை
கதிகலங்க வைத்து விட்டு விண்ணுலகம் ஏன்
சென்றீர். உம் ஆத்மா சாந்திபெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்

என்றும் உம் நினைவால் வாடும்
குடும்பத்தினர்

(1977)

MEDECINS SANS FRONTIERES

பதவி வெற்றிடம்
உளவியல் ஆதரவு உத்தியோகத்தர்

வரையறையற்ற வைத்தியர்கள் - ஒல்லாந்து (எம்.எஸ்.எவ் - ஹொலண்ட்) ஒரு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம். இந்நிறுவனமானது மனிதனால் அல்லது இயற்கை அனர்த்தங்களினால் துன்புற்ற மக்களுக்கும் மற்றும் ஆயுத வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவியை சாதி மத இன மற்றும் அரசியல் இணக்கப்பாடின்றி வழங்கிவருகின்றது. எமது கிளிநொச்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் பதவி நிலைக்கான பொருத்தமானவர்களை எதிர்பார்க்கின்றோம்.

உளவியல் ஆதரவு உத்தியோகத்தர்கள் - கிளிநொச்சி

பொறுப்புக்கள்:-

- பயனாளிகள் மற்றும் அவர்களது குடும்பங்களிற்காக தனிப்பட்ட மற்றும் குழு உளவளத்துணையை வழங்குதல்
- தனிப்பட்ட மற்றும் குழு சிகிச்சை சார் செயற்பாடுகளை நடாத்தல்
- உளவியல் - கல்வி பகுதியை நடாத்துதல்.
- துணைநாடியின் தகவல்களையும், இரகசியம் பேணலையும் கடைப்பிடித்தல்.

தேவைப்படும் தகுதிகள்:-

- இலங்கைத் தராதரத்திற்கமைவான சமூக சேவை மற்றும்/அல்லது உளவியல் மற்றும்/அல்லது தேசிய நிறுவனத்தின் சமூக அபிவிருத்தி உளவளத்துணைக்கான சான்றிதழ்
- மெய்ப்பிக்கதக்க உளவளத்துணையில் பணியாற்றிய அனுபவம் அல்லது உளவளப்பணியுடன் சம்பந்தப்பட்ட உளநலம், போர், மனவடு, இடப்பெயர்வு, இழப்பு மற்றும் மீள்குடியேற்றம் விரும்பத்தக்கது.
- மொழித்திறன்கள்:- சரளமாக தமிழ் மொழியை கையாளல்,அடிப்படை ஆங்கில அறிவு: சிங்களம் விரும்பத்தக்கது.
- கிளிநொச்சி மாவட்டத்தில் வசித்தல் அவசியமானது
- எம்.எஸ்.எவ் - ஹொலண்ட் நிறுவனத்தின் கொள்கைகள் இலக்குகளிற்கு ஏற்ப மருத்துவ கோட்பாடுகளை மதித்து நடத்தல்.

இந்தப் பதவியில் ஆர்வமுடையோர் , தயவுசெய்து உங்களுடைய சுருக்கமான சுயவிபரக் கோவையையும் இந்த பதவியை தெரிவு செய்ததற்கான காரணத்தை உள்ளடக்கிய கடிதத்தினையும் இணைத்து 03/08/2011 திகதியோ அதற்கு முன்னதாகவோ அனுப்பிவைக்கவும்.

நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர்
எம்.எஸ்.எவ் - ஹொலண்ட்
இல. 180, துர்க்கை அம்மன் வீதி
ஆனந்தபுரம் , கிளிநொச்சி.

தொலைபேசி இல:-024-324-8030/021-228-5490
ஈ-மெயில்: kilinochchi-ns@oca.msf.org

தகுதியான விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகத் தேர்விற்கு தொடர்பு கொள்ளப்படுவர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இலங்கை அணியில் யாழ்.வீரர்களும் விரைவில் இடம்பிடிப்பர்

## உங்கள் கனவுகள் நனவாகும் காலம் வரும் என்கிறார் சங்கக்கார

இந்தப் பிரதேசத்தில் உள்ள இளம் கிரிக்கெட் வீரர்கள் இலங்கை அணியில் இடம் பிடிக்க வேண்டுமென்ற கனவையும், இலட்சியத்தையும் மறந்து விடக்கூடாது. அத்துடன் இந்த இடத்து வீரர்கள் இலங்கை அணியில் இடம் பிடிக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதையும் மறந்து விடக்கூடாது.

இவ்வாறு இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் தலைசிறந்த துடுப்பாட்ட வீரருமான குமார் சங்கக்கார 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் சிறுவர் புற்று நோய் வைத்தியசாலையை அமைக்கும் பொருட்டு அதற்கான 200 மில்லியன் ரூபா நிதி திரட்டும் நடை பயணம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தெய்வேந்திர முனையில் ஆரம்பமாகி பருத்தித்துறை முனையை நோக்கி இந்தப் பயணம் இடம் பெற்று வருகின்றது. இந்தப் பயணம் 25 ஆம் திகதி யாழ்நகரை வந்தடைந்தது. இதில் 26 ஆம் திகதி யாழ். நகரிலிருந்து வல்லையை நோக்கிய பயணத்தில் பங்குபற்றுவதற்காகவும் கௌரவிப்பு நிகழ்வில் பங்குபற்றுவதற்காகவும் இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் குமார் சங்கக்கார யாழ்ப்பாணம் வந்திருந்தார். இதன்போதே 'உதயனுக்கான' சிறப்பு நேர்காணலையும் அவர் வழங்கினார். அவரது நேர்காணலின் முழு விபரமும் வருமாறு,

*" இலங்கை அணி உலகக் கிண்ண ஒரு நாள் ஆட்டத்தில் இறுதி வரை முன்னேறி தோல்வியடைந்தது. இருப்பினும் இங்கிலாந்துடனான தொடரில் பின்னடைவைச் சந்தித்துள்ளது. இது ஏன் ? "*

" எங்களுக்கு ஒரு இலக்கு இருந்தது நாங்கள் இந்தக் கிண்ணத்தை வெல்ல வேண்டுமென்று. அத்துடன் நாங்கள் நான்கு தடவைகள் உலகக் கிண்ணங்களின் இறுதி வரை முன்னேறி விட்டோம். 1996 ஆம் ஆண்டு முதல் தடவையாக இறுதி ஆட்டத்துக்கு முன்னேறினோம். தொடர்ந்து 2007 ஆம் ஆண்டு, 2009 ஆம் ஆண்டு 'ரி-20' உலகக் கிண்ணம், தற்போது 2011 உலகக் கிண்ணம். இருப்பினும் இதில் 1996 ஆம் ஆண்டு மட்டும் தான் சாதித்திருக்கின்றோம்.

இது இரண்டு வித்தியாசமான சுற்றுத் தொடர். உலகக் கிண்ண ஆட்டம் முடிவடைந்ததன் பின்னர் அணி மீளக்கட்டியெழுப்பப்படும். வயதானவர்கள் ஓய்வை அறிவித்துக் கொள்வார்கள். அணியும் புதிய இளம் தகுதியான வீரர்களை தேடி எடுத்துக்கொள்ளும். நாம் இங்கிலாந்துக்கு பயணம் மேற்கொண்டதும் அவ்வாறானதொரு நிலையில்தான். எமக்கு அணியை மீளக் கட்டியெழுப்புவதற்கான காலம் கிடைக்கவில்லை. இங்கிலாந்துடனான தொடர் எமக்கு கடினமானதாகவே இருந்தது. இருப்பினும் நாங்கள் போராடினோம். குறிப்பாக முதலாவது டெஸ்டின் இறுதி நாளில் துடுப்பாட்டத்தில் சொதப்பியமை மற்றும் இறுதி ஒரு நாள் ஆட்டத்தில் துடுப்பாட்டத்தில் மீண்டும் சொதப்பியமையே எமது தோல்விக்கான காரணம். முதல் டெஸ்ட்டின் இறுதி நாள் கூடாத நாளாக அமைந்தது. அடுத்து வந்த இரு டெஸ்ட் ஆட்டங்களிலும் எமது திறமையை சரிவர வெளிப்படுத்தி போராடினோம். இந்த ஆட்டங்களில் அறிமுக வீரர்கள் மற்றும் இளம் வீரர்களாலும் சிறப்பாக ஆட முடியவில்லை. இருப்பினும் நாங்கள் இந்தத் தொடரிலிருந்து நிறையக் கற்றுக்கொண்டோம் "

*" இலங்கை அணி அடுத்து மோதவுள்ள ஆஸ்திரேலிய தொடரில் சொந்த மண்ணில் வெற்றியை தக்க வைக்க முடியுமா?"*

" நாங்கள் இங்கிலாந்துத் தொடரில் விட்ட தவறுகளை சரி செய்து வருகின்றோம். அத்துடன் எமக்கு அணியை மீளக் கட்டியெழுப்புவதற்கு போதிய கால அவகாசம் கிடைத்துள்ளது. இதனால் நாம் கடினமான முறையில் பயிற்சி மேற்கொண்டு வருகின்றோம்.

ஆஸ்திரேலிய அணி உலகக் கிண்ணத்தை வெல்லா விட்டாலும் பலமான அணி. இந்தத் தொடர் எங்களுக்கு மிக முக்கியமான தொடராகவே உள்ளது. எமது நாட்டில் நடைபெறும் தொடரில் நாம் திறமைகளை சிறந்த முறையில் வெளிப்படுத்தி மீண்டும் எமது பலத்தை நிரூபிக்க வேண்டும். எமது நாட்டில் நடைபெறுவதால் இந்தத் தொடரில் நாங்கள் வெல்வதற்கு சாதகமான நிலைமை உள்ளது. நாங்கள் மிகச்சிறந்த முறையில் ஆஸ்திரேலியாவுடன் போராடத் தயாராகவே இருக்கின்றோம். எனவே இந்தத் தொடரை வெல்லுவோம் என்றே கூறுகின்றேன் "

*" இலங்கை அணியில் தற்போது இடம்பிடித்துள்ள இளம் வீரர் டினேஸ் சந்திமால் தொடர்பிலும், டில்ஷானின் புதிய அணித் தலைமை தொடர்பிலும் என்ன நினைக்கின்றீர்கள் ? "*

" டினேஸ் சந்திமாலுக்கு நல்ல எதிர்காலம் அமையும். அவர் இங்கிலாந்துத் தொடரில் சிறப்பாகச் செயற்பட்டமையை யாரும் மறக்க முடியாது. அதிக ஓட்டங்கள் குவிக்க முடியாத லோட்ஸில் நடந்த ஒரு நாள் ஆட்டத்தில் சதம் அடித்து அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார். குறிப்பாக இறுதி ஒரு நாள் ஆட்டத்தில் அணியின் இக்கட்டான நிலைமையில் பொறுப்பான - அனுபவ - வீரராக விளையாடி அசத்தினார். அந்த ஆட்டத்தில் அணி வெல்ல முடியாமல் போனது துரதிஷ்டமே. இலங்கை அணிக்கு கிடைத்த வரப்பிரசாதமாகவே சந்திமாலை நான் கருதுகின்றேன்.

> " நீங்கள் உங்களுக்கு கிடைக்கின்ற வளங்களையும், சந்தர்ப்பங்களையும் சரிவரப் பயன்படுத்துங்கள். உங்களுடைய கனவை கலைக்க வேண்டாம். தொடர்ந்து முயற்சியுங்கள். நீங்கள் இலங்கை அணியில் இடம்பிடிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை."

அணித்தலைவர்களைப் பொறுத்த வரையில் அனைவரும் வித்தியாசமானவர்கள். அவர்களின் திறமைக்கு ஏற்ற வகையிலேயே அணியை வழி நடத்தும் திறன் அமையும். டில்ஷானின் தலைமையில் ஆஸ்திரேலியாவை வீழ்த்த முடியும். அத்துடன் ஒவ்வொரு சுற்றுத் தொடர்களிலிருந்தும் டில்ஷான் கற்றுக் கொள்ள வேண்டும். டில்ஷான் அணியின் ஒவ்வொரு விடயங்களையும் தானே பார்த்துச் செய்பவர்.

எவ்வாறு இருப்பினும் இறுதியில் நோக்கப்படுவது எந்தனை ஆட்டங்கள் வெல்லப்பட்டது என்பதுதான். அதைத்தான் கணக்கிடுவார்கள். எனவே டில்ஷான் தனது தலைமையில் அதிக ஆட்டங்களில் வெல்வதன் மூலமே தன்னை நிலைநிறுத் திக் கொள்ள முடியும். அதன் மூலம்தான் சிறந்த அணித் தலைவரா இல்லையா என்பது நோக்கப்படும்"

*"சச்சினைப் பற்றி என்ன கருதுகின்றீர்கள்? மேலும் சச்சின் தற்போது நெருங்கும் 100 ஆவது சதம் என்ற சாதனையை நீங்கள் முறியடிப்பீர்களா ? "*

" இல்லை. நான் ஒரு போதும் சச்சினது சாதனையை முறியடிக்க மாட்டேன். நான் சச்சினை நேசிக்கின்றேன். உலகில் மிக மிக சிறந்த கிரிக்கெட் வீரர் என்றால் அது சச்சின்தான். அதை அவர் நிரூபித்தும் வருகின்றார். இந்த வயதிலும் அவரது ஆட்டத்தை பார்க்கும் போது ஆச்சரியமாக இருக்கின்றது. அவரிடமிருந்து யாரும் எத்தகைய நுணுக்கங்களையும் கற்றுக் கொள்ள முடியும்"

*"இலங்கை அணியில் யாழ்ப்பாணத்து வீரர்கள் எவரும் இடம்பிடிக்கவில்லை. அவ்வாறு இடம்பிடிக்க வேண்டுமென்று நினைப்பவர்களுக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள் ? "*

" அவ்வாறு கனவு காண்பவர்கள், அந்த இலக்கினை அடைய முயற்சி எடுக்க வேண்டும். கடின பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். தற்போதுள்ள வளங்களை வைத்து பயிற்சியை சிறப்பாக மேற்கொள்ளுங்கள். இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு மிகப் பெரிய பொறுப்பு ஒன்று உள்ளது. இந்தப் பிரதேச கிரிக்கெட் வீரர்களுக்குரிய வளங்களை வசதிகளை வழங்க வேண்டும்.

அவ்வாறு வழங்கப்படுவதன் மூலம் அவர்களை இலங்கை அணிக்கு உள்வாங்க முடியும். இந்த பிரதேசத்திற்கு இலங்கை கிரிக்கெட் சபை மேற்கொள்ளும் முதலீடு அணியில் சிறந்த வீரர்கள் உள்வாங்கப்படுவதற்கானதே. இந்தப் பகுதியிலிருந்தும் சிறந்த வீரர்கள் அணிக்கு வரும்போது எமது இலங்கை அணி பலமடையும்.

அத்துடன் நீங்கள் உங்களுக்கு கிடைக்கின்ற வளங்களையும், சந்தர்ப்பங்களையும் சரிவரப் பயன்படுத்துங்கள். உங்களுடைய கனவை கலைக்க வேண்டாம். நீங்கள் இலங்கை அணியில் இடம்பிடிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை. தொடர்ந்து முயற்சியுங்கள். கடின பயிற்சி மேற்கொள்ளுங்கள்.

உங்கள் பிரதேச வீரர்களின் திறமைகளை நான் மீரிகமவில் நடைபெற்ற முரளி கிண்ண சுற்றுப் போட்டியில் கண்டுகொண்டேன். திறமையான - இலங்கை அணியில் உள்வாங்கப்படக்கூடிய வீரர்கள் இங்கு உள்ளனர். அதுதான் நான் மீண்டும் சொல்கின்றேன் நீங்கள் இலங்கை அணியில் விளையாடும் காலம் மிக விரைவில் உங்களுக்கு கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை"

சந்திப்பு:
டிலீப்

## சாதித்தது இங்கிலாந்து; சறுக்கியது இந்தியா

டெஸ்ட் அரங்கில் முதலிடத்தில் இருக்கும் இந்திய அணிக்கு மிகப் பெரும் அடியைக் கொடுத்தது இங்கிலாந்து அணி. அதிகம் எதிர்பார்க்கப்பட்ட லோர்ட்ஸ் டெஸ்டில் இங்கிலாந்திடம் 196 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது. வாலாற்று சிறப்புமிக்க இந்த 2000 ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் வென்ற இங்கிலாந்து அணி, சொந்த மண்ணில் சாதித்துக் காட்டியது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி முதல் கட்டமாக நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கின்றது. முதல் டெஸ்ட் ஆட்டம் லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்தது. இது டெஸ்ட் அரங்கில் 2000 ஆவது ஆட்டம் என்பதால் மிகுந்த எதிர்பார்ப்பு காணப்பட்டது. இதன் முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 474/8 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதில் இங்கிலாந்தின் சார்பில் பீற்றர்ஸன் ஆட்டமிழக்காமல் 202 ஓட்டங்களைப் பெற்றார். இதற்குப் பதிலளித்து ஆடிய இந்தியா டிராவிட்டின் சதத்துடன் 286 ஓட்டங்கள் எடுத்தது.

பின்னர் இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 6 விக்கெட்டுக்களுக்கு 269 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதையடுத்து இந்திய அணியின் வெற்றிக்கு 458 ஓட்டங்கள் என்ற கடின இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய அணி இரண்டாவது இன்னிங்சில் ஒரு விக்கெட்டுக்கு 80 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

நேற்று முன்தினம் ஐந்தாவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. இந்திய அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் அன்டர்சன் வேகத்தில் வரிசையாக சரணடைந்தனர். முதல் இன்னிங்சில் சதம் அடித்த டிராவிட், இந்த முறை அன்டர்சன் பந்தில் 36 ஓட்டங்களுக்கு வெளியேறினார். பின்னர் லக்ஸ்மன், கம்பீர் இணைந்து போராடினர். டெஸ்ட் அரங்கில் தனது 53 ஆவது அரைசதம் அடித்த லக்ஸ்மனும் (56), அன்டர்சன் வேகத்தில் வீழ்ந்தார். சுவான் சுழலில் கம்பீர்(22) சிக்கினார்.

அடுத்து வந்த சச்சின் அன்டர்சன் பந்தில் வெறும் 12 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து ஏமாற்றினார். இதையடுத்து லோர்ட்ஸ் அரங்கில் 100 ஆவது சதம் அடிக்கும் சச்சினின் கனவு தகர்ந்தது. பின்னர் சுரேஷ் ரெய்னா, டோனி இணைந்து அணியை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இந்த நேரத்தில் பொறுப்பற்ற 'ஷொட்' அடித்த டோனி (16), ரெம்லட் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த பின்வரிசை வீரர்கள் அதிக நேரம் தாக்குப்பிடிக்கவில்லை. அன்டர்சன் பந்தில் ஹர்பஜன் (12) காலியானார். புரோட் வேகத்தில் பிரவீன் குமார் (2) போல்டானார். போராடிய ரெய்னா, டெஸ்ட் அரங்கில் தனது 6 ஆவது அரைச் சதம் கடந்து ஆறுதல் தந்தார். ரெய்னாவை (78) அன்டர்சன் [illegible] 5 [illegible] ஓட்டத்தில் வெளியேற, இந்திய அணி இரண்டாவது இன்னிங்சில் 261 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. 196 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற இங்கிலாந்து அணி, தொடரில் 1--0 என்ற முன்னிலை பெற்றது. முதல் இன்னிங்சில் இரட்டை சதம் அடித்த இங்கிலாந்து வீரர் பீற்றர்சன் ஆட்ட நாயகன் விருதை வென்றார்.

(15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பணியாளர்கள் தேவை

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்ட பிரபல கம்பனிக்கு சாரதிகள் (AD) மற்றும் உதவியாளர்கள் தேவை.

தொடர்பு:
021 2220614, 021 5671024

## பெற்றோல் குறித்து இதுவரை 5,750 முறைப்பாடுகள்

தரம் குறைந்த பெற்றோலை பாவித்ததால் பழுதடைந்த வாகனங்கள் தொடர்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு இதுவரை சுமார் 5,750 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த முறைப்பாடுகள் தொலைபேசி வாயிலாகவும், மின்னஞ்சல் வாயிலாகவும் அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

வாகனங்கள் பழுதடைவது தொடர்பாகக் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள், மேலும் கிடைக்கவிருக்கின்ற முறைப்பாடுகள் ஆகியவை தொடர்பாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் மூவர் கொண்ட குழுவினூடாகத் தினந்தோறும் ஆராயப்பட்டு வருவதாக கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-சி)

## மனமார்ந்த நன்றிகள்



தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அமோக ஆதரவு தந்து பெரு வெற்றியீட்டித் தந்ததுடன் என்னையும் பிரதேச சபை உறுப்பினராகத் தெரிவு செய்த மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றியுடன்.
S.தங்கராசா,
இலங்கைத் தமிழரசுக் கட்சி,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. (சி/574703)

## மரண அறிவித்தல்

### அழகன் முருகேசபிள்ளை



புதுக்குடியிருப்பு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அழகன் முருகேசபிள்ளை 25-07-2011 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற அழககிரி - காளியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நல்லதம்பி- புவனேஸ்வரி (இந்தியா) தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பமலரின் அன்புக் கணவரும், ஸ்ரீகந்தராசா (சிறி - பிரான்ஸ்), இலங்கேஸ்வரன் (ரவி), காலஞ்சென்ற மகான் மற்றும் நரேஸ்வரன் (டில்லி - பிரான்ஸ்), காலஞ்சென்ற புஸ்பமாலா, மற்றும் அசோக்குமார்(அசோ), காலஞ்சென்றவர்களான சற்குணராசா, ஜீவகுமார், மற்றும் இரத்தினமாலா (தங்கா), வசிக்குமார் (வசி - லண்டன்), திலீப்குமார் (பிரான்ஸ்), பிறேம்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகுத் தந்தையும், இராஜேஸ்வரி (ராதா - பிரான்ஸ்), லதா , இந்துமதி (பிரான்ஸ்), பாமதி (பாமா), அன்பழகன், சுமதி (லண்டன்), கலா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், புஸ்பமாலை, காலஞ்சென்ற புஸ்பரத்தினம் மற்றும் கன்னிகாபரமேஸ்வரி, இந்திராணி, அம்பிகாவதி (பிரான்ஸ்), சகுந்தலாதேவி (பிரான்ஸ்), செல்வராணி (இந்தியா), அருந்தவராசா (தவம் - பிரான்ஸ்), காலஞ்சென்ற கருணை மற்றும் கமலாம்பிகை (பிரான்ஸ்), ஈஸ்வரன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கீர்த்தனா(பிரான்ஸ்), அகல்யன் (பிரான்ஸ்), அபிநயா(பிரான்ஸ்), சாருண்யா, பிரகாஸ்(பிரான்ஸ்), சஞ்சீவன் (பிரான்ஸ்), துஸ்யந்தி, சாருண்யன், பிரணவன் (பிரான்ஸ்), மினுசா, அனுசா காலஞ்சென்ற யதுசன் மற்றும் ஜீவன், வர்மன், மதுசன், சர்மினி, லக்சன் (லண்டன்) அபிசனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், விதுசன், விதுசா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் நடைபெற்று பூதவுடல் புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

4 ஆம் வட்டாரம், கோம்பாவில்.
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு. (6241)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி முத்துகிருஸ்ணா வள்ளிநாயகி



புலோலி மேற்கு, தம்பசெட்டி, "மாணிக்க வாசா" வைப் பிறப்பிடமாகவும் கொழும்பில் வசித்தவருமாகிய முத்துகிருஸ்ணா வள்ளிநாயகி ஞாயிற்றுக்கிழமை ஆடி 24ஆம் திகதி கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வத்தம்பி முத்துகிருஸ்ணா அவர்களின் பாசமிகு துணைவியாரும் வைத்திய கலாநிதி சதானந்தன், நித்தியானந்தன், கலாநிதி சர்வானந்தன் (ph.D.) (அபிவிருத்திக்கான பருத்தித்துறை ஆய்வகம்) கலாநிதி சாந்தி (D.Sc., ph.D.) ஆகியோரின் பாசமிகு தாயும் கல்யாணி, லலிதா, வைத்தியகலாநிதி திருமங்கை (Castle Street Hospital for Women) ஆகியோரின் மாமியும் வைத்திய கலாநிதி சிவாந்தி வைத்திய கலாநிதி கிரிஷாந்தி ஆகியோரின் அன்புக்குரிய பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஆடி 25ஆம் திகதி தொடக்கம் இன்று 27ஆம் திகதி வரை அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக் கிரியைக்கா புதன்கிழமை 27ஆம் திகதி மாலை 4.30 மணியளவில் கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு மாலை 5.30 மணியளவில் தகனஞ்செய்யப்படும்.

03, சோமசுந்தரம் வீதி,
புகையிரத நிலைய வீதியூடாக
(Off Station Road)
வெள்ளவத்தை, கொழும்பு - 06.

(சி/1995)

தகவல்:
குடும்பத்தினர்.

## Computer Express
### Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in computer science. | 4 Months | 1000/= |
| * Dip. in web page Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Graphic Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Desk top publishing. | 4 Months | 1000/= |
| * Dip. in Hardware Engineering. | 3 Months | 1000/= |
| * Dip. in Auto CAD. | 3 Months | 1000/= |
| * Dip. in MicroSoft Office. | 3 Months | 1000/= |
| * Dip. in Acc.Package.(MYOB,Accpac,Q Book) | 3 Months | 1000/= |
| * Dip.in programming | 3 Months | 1000/= |
| * Honours Dip. in computer science. | 5 Months | 1000/= |

**Advances Courses**

| | | |
|---|---|---|
| Diploma in Video Editing | 4Months | 1000/= |
| Diploma in Multimedia | 4Months | 1000/= |

பதிவுகளுக்கு முந்துங்கள்

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Monday to Friday 9Am to 3.30Pm
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=

Batch I -27.07.2011 9Am or 3pm Batch II -29.07.2011 9Am or 3pm
Batch III -30.07.2011 9Am or 3pm Batch IV -31.07.2011 9Am or 3pm

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி
பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புகள் நடாத்தப்படும்.

Tally புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

# STUDY IN UK
## September 2011

### FULFIL YOUR AMBITION FOR A TRULY PRESTIGIOUS DEGREE

உலகத்தரம் வாய்ந்த பிரித்தானிய உயர் கல்வி உங்கள் அபிலாசைகளை பூர்த்தி செய்யும்

**LONDON FOUNDATION CAMPUS**

## Start with your O/L

Progress to the UK's leading universities with preparation on the campus of Birkbeck, University of London.

- ✓ Undergraduate Foundation
- ✓ Master's Foundation
- ✓ English Language Preparation

20 Hours part time work allowed

For more information contact us on +44 (0)1223 345698
or visit www.londonfoundationcampus.com

KMS has placed more than 700 student in the past ten years to UK Universities from Jaffna

| | | |
|---|---|---|
| Date | 28/07/2011 | 29/07/2011 |
| Venue | KMS (Colombo 04) | Udayan Auditorium (Jaffna) |
| Time | 10.00 a.m - 01.00 p.m | 10.00 a.m - 01.00 p.m |

Please bring your original educational certificates
Please Call Now to Book Your Place - 0777 209 446

**LEADING BRITISH EDUCATIONAL CONSULTANTS**

Knowledge Management Systems
Your Gateway to British Degree
14, Castle Lane, Colombo 04.
Tel : 0112 555 243 Advise Line : 0777 209 446
Website : www.kmsworldwide.com
was established in the year of 2000
UK Office No 0044-7905038050

Cambridge Education Group
UK Education Specialist

## யாழ் மண்ணில் முதன்முதலாக

UK பல்கலைக்கழக பட்டப்படிப்பின் இறுதியாண்டில் இணைய அரிய சந்தர்ப்பம்.

bucks new university-UK Degree @ ESOFT Jaffna



### B.Sc (Hons) in Computing

Duration:-1 Year
Part Time:- Week ends
Entry Requirements:-Edexcel HND,BCS.Dip, NIBM Higher Dip,SLIIT Adv.Dip, NCC-IAD,HNDE,HNDIT(ATI) மேற்குறிப்பிட்ட தகமையுடையோர் பட்டப்படிப்பின் இறுதியாண்டில் இணைந்து பட்டப்படிப்பை தொடரமுடியும்.

Course Fee Only Rs 135,000/=
Installment Rs 13,500x10



### B.A.(Hons) in Business and Finance

Duration:-1 Year
Part Time:- Week ends
Entry Requirements:-CIMA,AAT,Chartered,CIM,ACCA,ABE,Edexcel HND(Business),HNDA(ATI), HNDM(ATI),HNDC(ATI) மேற்குறிப்பிட்ட தகமையுடையோர் பட்டப்படிப்பின் இறுதியாண்டில் இணைந்து பட்டப்படிப்பை தொடரமுடியும்.

Course Fee Only Rs 150,000/=
Installment Rs 15,000x10

வரையறுக்கப்பட்ட ஆசனங்களே ஒதுக்கப்பட்டுள்ளதால் உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்.

Closing Date:-10-08-2011

**ESOFT COMPUTER STUDIES.**
Regional Head Office-North
No.166/3, Navalar Road Jaffna.
Tel:0212224142 Hotline:0773099308

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிந்தவூர் அல்-மதீனா வித்தியாலய மாணவர் தலைவர்கள் தின விழாவில் அவர் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டார்.

''அனைத்துலக சமூகம் தீர்வு தொடர்பில் தீவிர அக்கறை காட்டுகிறது. அதனால் கூட்டமைப்புடன் அரசு பேசி வருகிறது. இருப்பினும் அதில் முஸ்லிம்களின் பங்களிப்பு என்ன என்பது குறித்து தெளிவு படுத்தப்படவில்லை. இந்த விடயத்தில் அரசு தொடர்ந்து மௌனம் செலுத்தி வருகிறது'' என்று ஹஸனலி அங்கு குற்றஞ் சாட்டினார்.

அரசுடன் முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்த போது, முஸ்லிம்களின் உரிமைகளைப் பெற அரசு உறுதுணையாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்ட போதும் அரசியல் தீர்வு தொடர்பான பேச்சில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுவது கவலையளிக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தம்முடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து கொண்டதை அரசு பலவீனமாகக் கருதக்கூடாது. அரசியல் தீர்வு விடயத்தில் முஸ்லிம்களுக்கு என்ன செய்யப் போகிறது என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

இங்கு தேசிய கீதத்தை மாணவர்கள் சிங்களத்தில் பாடினார்கள். அப்படிச் செய்ய வேண்டும் என்பதில்லை. நாம் தமிழிலும் தேசிய கீதத்தைப் பாடலாம். நாம் தேசப்பற்றுள்ளவர்கள்தான் அதற்காக எமது மொழி, கலாசாரம், தனித்துவம், பண்பாடு என்பவற்றை விட்டுக் கொடுக்கத் தேவையில்லை.

பெரும்பான்மைச் சமூகம் தம்மை மட்டும் முன்னுரிமைப்படுத்தி நிர்வாக மையங்களைத் தம் வசப்படுத்தி வைத்திருப்பதால் சிறுபான்மை சமூகங்களால் தமது முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது உள்ளது.

அம்பாறையில் திட்டமிடப்பட்ட நில ஆக்கிரமிப்பு நடைபெறுகிறது. இங்கு பெரும்பான்மையின நிர்வாகமே இருப்பதால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது உள்ளது.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் ஏன் நிர்வாக பிரதேசம் ஒன்றை அரசால் தரமுடியாது? கல்முனை, பொத்துவில், சம்பாந்துறை தொகுதிகளை இணைத்து புதிய கரையோர மாவட்டம் ஒன்றை உருவாக்கி அதனை முஸ்லிம்களிடம் வழங்க முடியும்.

இதனைக் கேட்பதால் நாம் தனிநாடு கேட்கிறோம் என்று அர்த்தமல்ல. முஸ்லிம்கள் கேட்கும் தனிமாவட்டத்துக்கு தமிழ் மக்களும் ஆதரவு தர வேண்டும்.

இன்று இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்படும் என்று கூறப்படுகிறது. சிங்களவர்களின் ஆதிக்கத்தில் இருக்கக் கூடிய நாடாளுமன்றத்தால் அமைக்கப் படும் தெரிவுக் குழு மூலம் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காது என்பதுதான் யதார்த்தம்.

- இவ்வாறு ஹஸனலி தெரிவித்தார். (உ-30)

## சரணடைகிறான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளைவு இது'' - என்று பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மூத்த விரிவுரையாளர் ஒருவர் ஆதங்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தியில் சங்கிலிய மன்னனுக்குச் சிலை நிறுவப் பட்டிருந்தது. அந்தச் சிலையைப் புனரமைக்க யாழ். மாநகர சபை நடவடிக்கை எடுத்திருந்தது.

முன்னர் அங்கு நிறுவப்பட்டிருந்த சிலை சுக்கு நூறாக்கப்பட்டு, புதிய சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் கைலாசபிள்ளையார் கோயில் திருப்பணிக்காக இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த சிற்பி ஒருவரினால் புதிய சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

புதிய சங்கிலியன் சிலையின் மாதிரி உருவில் அவனது வலது கரம் தாங்கி இருந்த வாள், முன்னர் இருந்த நிலையிலும் பார்க்க கீழ் இறங்கி இருந்தது. இது குறித்துக் கடும் கண்டனங்கள் தாயகத்திலும் புலத்திலும் எழுந்தன.

இதனை அடுத்து சங்கிலியனின் கை மேலே உயர்த்தப்பட்டுள்ளது. இப்போது சங்கிலியன் தனது கைகளில் வாளினை தூக்கிப் பிடித்தபடி சரணடைவதற்குத் தயாராக இருப்பது போன்ற பாவனையில் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

வலது கரத்தினை தோள் உயரத்துக்குத் தூக்கியபடி, உள்ளங்கை வெளித் தெரிய வாளினைத் தூக்கிப் பிடித்தபடி இருக்கும் சங்கிலியனின் சிலையே தற்போது முத்திரைச் சந்தியில் வைக்கப் பட்டுள்ளது.

சங்கிலியனின் இந்த நிலையே மீண்டும் விமர்சனங்களுக்கு ஆளாகி உள்ளது. சரணடைய மறுத்து ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட ஒரு மன்னனை இதை விடக் கேவலப்படுத்த முடியாது என்று வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

"கைகளை உயரத் தூக்கி உள்ளங்கை வெளித் தெரிய நிற்கும் நிலை சரணடைதலுக்கான உடல் மொழியாகவே உலகெங்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் அர்த்தம் எதிரே இருக்கும் எவருக்கும் தன்னால் ஆபத்து ஏற்படாது என்று உணர்த்துவதும் தனது கைகளில் ஆயுதங்கள் ஏதுமில்லை என்று நிரூபிப்பதும் தான். சங்கிலியனும் இப்போது அப்படித்தான் கைகளைத் தூக்கியபடி நிற்கிறான்'' என்றார் பல்கலைக்கழக விரிவுரையாளர்.

இந்த நிலையில் எதிர்வரும் 4ஆம் திகதி புதிய சிலை திறந்து வைக்கப் படும் என்று யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா நேற்று அறிவித்தார்.

ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் இந்த விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று நடத்தப் பட்டது.

திறப்பு விழாவுக்கு அறிவுசார் பெருந்தகைகளையும் அரசியல் தலைவர்களையும் அழைப்பது என்று அந்தக் கூட்டத்தில் இணங்கப்பட்டது. எனினும் சிலையை யார் திறந்து வைப்பார் என்று கூட்டத்தில் தெரிவிக்கப் படவில்லை.

ஆனால், "திறப்பு விழா முழுவதும் அரசியல் மயப் பட்டதாகவே இருக்கும்'' என்று முதல்வர் தெரிவித்தார்.

உள்வீட்டுத் தகவல்களின்படி பாரம்பரிய கைத் தொழில் சிறு கைத் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே சிலையைத் திறந்து வைப்பார் என்று தெரிகிறது. (உ-07)

## ஆட்சியைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுகள் இது தொடர்பில் உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளாததன் விளைவாகவே இன்றைய நிலை உருவாகியது. இதனை உணர்ந்து இனியாவது அரசு தமிழ் மக்களுக்கான உரிய தீர்வினை வழங்க முன்வர வேண்டும்

கடந்த காலங்களில் இல்லாத அளவு இந்தத் தேர்தலில் அடாவடித்தனங்கள் இடம்பெற்றுள்ளன. எப்படியாவது வெற்றி பெற்று விடவேண்டும் என்று அரசு பல தந்திரங்களைக் கையாண்டது. ஆனால் மக்களின் மனங்களை அவர்களால் வெல்ல முடியவில்லை.

வேட்டி, சேலைகள் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் என நன்கொடைகள் வழங்கப்பட்டன. மக்களின் அடையாள அட்டைகள் பறிக்கப்பட்டன. பலரின் வாக்குகள் பதிவு செய்யப்படவே இல்லை. இவ்வாறான நிலையிலும் கூட்டமைப்பு பெரும் வெற்றி பெற்றுள் ளது.

யாழ்ப்பாணத்தின் தீவகத்தில் எம்மால் பிரசாரம் செய்ய முடியவில்லை. அங்கும் பிரசாரம் செய்ய முடிந்திருந்தால் நிச்சயமாக அந்தச் சபைகளையும் வென்றிருப்போம்.

ஆட்சி அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும், தமிழ் மக்களின் பொருளாதார சமூக கலாசார பண்பாட்டு செயற்பாடுகள் பேணப்படவேண்டும் என்ற செய்தியையே இந்தத் தேர்தல் முடிவுகள் தெரிவிக்கின்றன.

இன்று சர்வதேசமும்கூட தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் பேணப் படவேண்டும் ஜனநாயகம் மதிக்கப்பட வேண்டும் என்ற செய்தியை வெளிப் படுத்தி வருகிறது. அரசுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சு ஆக்கபூர்வமாக அமைய வேண்டும் எனவும் சர்வதேச சமூகம் வலியுறுத்தி வருகின்றது. அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளும் இதனையே வலியுறுத்துகின்றன.

இந்தத் தேர்தலில் எப்படியாவது வெற்றி பெற்று தமிழ் மக்கள் தங்கள் பக்கம் இருக்கின்றனர் என்று சர்வதேசத்துக்குக் காட்ட அரசு முனைப்புடன் செயற்பட்டது. ஆனால் அரசின் போலித்தனமான நடவடிக்கைகளுக்கு மக்கள் அமைதியாக இருந்தவாறே தமது பதிலை வெளிப்படுத்தி விட்டனர்.

தமிழ் மக்களின் நம்பிக்கையை வீணடிக்காமல் தொடர்ந்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ளும் - இவ்வாறு சம்பந்தன் தெரிவித்தார். (உ)

## தேர்தல் முடிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களிடம் கத்தி மற்றும் வாளினைக் காட்டி மிரட்டி மோட்டார் சைக்கிளைக் கொள்ளையடித்துள்ளனர்.

இளைஞர்களிடம் இருந்த 3 கைத் தொலைபேசிகள் மற்றும் ஒரு தொகைப் பணம் என்பவற்றையும் அவர்கள் கொள்ளையிட்டுச் சென்றனர் என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

''இந்த இளைஞர்களிடம் கொள்ளையிட்ட மோட்டார் சைக்கிளில் பயணித்த கொள்ளைக் கோஷ்டி உரும்பிராய் விளாத்தியடியில் வைத்து மற்றொரு மோட்டார் சைக்கிளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளது'' என்று பொலிஸார் கூறினர்.

வீதியில் வந்து கொண்டிருந்த இரு இளைஞர்களிடம் இருந்தே அந்த மோட்டார் சைக்கிள் கொள்ளையிடப்பட்டுள்ளது.

தமது மோட்டார் சைக்கிளைக் கொள்ளையிட்டவர்கள் சென்ற மற்றொரு மோட்டார் சைக்கிளின் இலக்கத்தை அவர்கள் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்த போது, அது ஏற்கனவே கொள்ளையிடப்பட்ட மோட்டார் சைக்கிள் என்று தெரியவந்தது.

மூவர் கொண்ட கோஷ்டி ஒன்றே இந்தக் கொள்ளையில் ஈடுபட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (உ)

## 5,200 தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டிய ரத்னாயக்க, ''தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கு அரசு தீர்வு காணவில்லை. தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி நாளை 28ஆம் திகதி மாலை 4 மணிக்கு கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதேபோல், ஒவ்வொரு மாவட்டத்திலும் இனவாதத்துக்குப் பதிலாக இன ஒற்றுமையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ள பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன'' - என்றார். (உ-சி)

**A/L பரீட்சை - 2011**

Bio/ Maths/ Commerce என்பவற்றுக்கான Vishaka, Royal, Trinity, FWC வினாத்தாள்கள் English/ Tamil மொழிகளில் விடைகளுடன் வீடு வந்து தரல். ஏற்பாதரவு ரூபா 1000+ போட்டோ பிரதி. அழையுங்கள் வித்யா. சுழற்றுங்கள் 0777730838/ 226 4814

பிள்ளைகளின் கல்வி உங்களின் வெகுமதி

## அன்பு நெஞ்சங்களுக்கு உள்ளங்கனிந்த நன்றிகள்



வலி. தென்மேற்கு பிரதேச சபை தேர்தல் 23.07.2011 ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (E.P.D.P) சார்பில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெறச் செய்து வலி. தென்மேற்கு பிரதேச சபைக்கு உறுப்பினராகத் தெரிவு செய்த மக்கள் அனைவருக்கும் இரு கரம் கூப்பி நன்றி கூறுகின்றேன்.

8 ✕

க. நடராசா,
நவாலி.
(சி/574716)

## நீங்கா நினைவுகளுடன்

முதலாம் ஆண்டில்...

மலர்வு 28 ★ 12 ★ 1924 — உதிர்வு 06 ★ 08 ★ 2010



அமரர் சின்னத்தம்பி முத்தையா

5ஆம் ஆண்டில்....

மலர்வு 14 ★ 04 ★ 192? — உதிர்வு 06 ★ 01 ★ 2007



அமரர் திருமதி முத்தையா சிவக்கொழுந்து

(நயினாதீவு -7)

நினைவிலே நிஜமாகி
நிஜத்திலே நிழலாகி
மனதிலே நிலைத்தோரே!
நித்தமுங்கள் முகம் தேடி
நினைவுகளை சுமக்கின்றோம்.
பல ஜென்மம் ஆனாலும்
பாசமென்றும் மாறிடாது
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

532, பலாலி வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்

(6242)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி பிரதேச சபைத் தேர்தல் 2011 முதன்மை வேட்பாளர்

**குமாரு சர்வானந்தன்**

அவர்கள் எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்கு முன்னின்று உழைப்பவர். இவர் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டி யிட்டு அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார். இவருடைய பணி தொடர மனமார வாழ்த்துகின்றோம்.

நிர்வாகிகள்
வீரபத்திரர் சனசமூக நிலையட,
கெற்பேலி, மிருசுவில்.

## வெற்றிலைக்கேணி உணவத்தைக் கண்ணகியம்மன் ஆலய பரிபாலன சபை விசேட கூட்டம்

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையினால் இதுவரை காலமும் பராமரிப்பு இன்றியிருந்த மேற்படி ஆலயத்தை புனரமைப்பதற்கும் பூசையை ஆரம்பிப்பதற்குமான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 28.07.2011 வியாழக்கிழமை அன்று முற்பகல் 11.00 மணியளவில் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் புதிய நிர்வாகத் தெரிவும் நடைபெறவுள்ளதனால் அடியவர்கள் முக்கியஸ்தர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபையினர்.** (சி/574719)

## மரண அறிவித்தல்

### திருமதி நடராசா மனோன்மணி



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் கம்மாலையடி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா மனோன்மணி நேற்று (26.07.2011)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமு-லக்சுமி தம்பதியரின் அன்பு மகளும் நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வர்களான நாகமுத்து - அசுபதி தம்பதியரின் அன்பு மருமகளும் ரஞ்சித்ராஜ், ரெஜிந்தினி, ரஜிப் பிரசாத், வினோத்ராஜ், பிரசாந்ராஜ், அஜிந்தன் (தரம் 8 சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2011) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் விளான் விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கம்மாலையடி,
சண்டிலிப்பாய் (6251)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நல்லையா சாரதாதேவி

மீசாலை கிழக்கு, நெல்லியடி, முருகன் வீதியைச் சேர்ந்த திருமதி நல்லையா சாரதாதேவி நேற்று (26.07.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

நெல்லியடி, முருகன் வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை

தகவல்:
செ.பத்மநாதன்
(அண்ணா)

### திருமதி சண்முகவடிவேல் பார்வதி



கரவெட்டி கிழக்கு தொண்டப் புலத்தைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகவடிவேல் பார்வதி நேற்று (26.07.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகவடிவேலின் (CTB) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தர் - அரிநாச்சி தம்பதியரின் அன்பு மகளும், சத்தியநாதன் சிவாஜியின் அன்புத் தாயும், கந்தையா சத்தியநாதனின் அன்பு மாமியும் விதிநினி, சத்தியானந் (உரிமையாளர் K.Sவெதுப்பகம் ), நிலானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சோனப்பு மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரவெட்டி.

தகவல்:
சத்தியானந்
(K.S.வெதுப்பகம்)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினசாமி அன்னம்மா



வேலணை கிழக்கு வேலணை 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல 153/11, நாவலர் வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினசாமி அன்னம்மா நேற்று (26.07.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இரத்தினசாமியின் அன்பு மனைவியும் பேபிசாந்தா, இரத் தினகுமார், குணசீலி ஆகியோரின் அன்புத் தாயும் குணரெத்தினம், இயந்திராதேவி, காலஞ்சென்ற தவராசா ஆகியோரின் பாசமிகு மாமியும் யமுனகா, விருதரூபன் சிந்துஜா, தவரூபன், காலஞ்சென்ற பிறேமா மற்றும் பத்மா, உதயன் (யாழ். தாதியர் கல்லூரி மாணவன்), மாலினி (நோர்வே), நந்தினி(கனடா), காந்தரூபி (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (27.07.2011) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 153/11, நாவலர் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### மாணிக்கம் திருஞானசம்பந்தமூர்த்தி



புலோலி, காளையந்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு E.S.Fernando Mawatte யும் அல்வாய் வடக்கு விளாப்புக் கூடலையும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் திருஞானசம்பந்தமூர்த்தி நேற்று (26.07.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம்-தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற முத்தையா-சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும், கல்யாணி, கஸ்தூரி, கோகுலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், யசிதரன், மதிவர்ணன் ஆகியோரின் மாமனும், தரண்யாவின் தாத்தாவும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் கமலநாதன், பரமேஸ்வரி, தங்கமணி ஆகியோரின் சகோதரனும், இரத்தினம், கனகம்மா, விஜயம், சிவகுமாரசாமி (சிவஞானம்), பாலசுப்பிரமணியம் (அழகுமாமா) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் காலஞ்சென்ற முத்துக்கிருஷ்ணன் மற்றும் மனோகரன், கோபாலகிருஷ்ணன், சிறீதரன், மனோன்மணி, நவமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2011) நண்பகல் 12 மணியளவில் விளாப்புக்கூடலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு தகனக்கிரி யைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளாப்புக்கூடல்,
அல்வாய் வடக்கு,
அல்வாய். (சி/574720)

தகவல்:
குடும்பத்தினர்

A/L - 2011
விவசாய விஞ்ஞானம்
முன்னோடிப் பரீட்சையும் கருத்தரங்கும்
(02 நாள்கள்)
ஆரம்பம்- 29.07.2011, நேரம்- பி.ப. 1.00 மணி
ஆசிரியர் - வை.சசிகுமார்.(0770691573)
JAFFNA DMI

## தவறிவிட்டது

வசந்தகுமாரன் சசிகலா என்பவரது (775874350V) எனும் இலக்க தேசிய அடையாளஅட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொ.பே:- 0213212841, 0776844396

## மனமார்ந்த நன்றிகள்

### வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தேர்தல் 2011



தமிழினத்தின் வழி காட்டிகள் தமிழ்த் தலைவர்கள் தான். மற்றையோர் எம்மில் குதிரைவிட என்றுமே அனுமதிக்கமாட்டோம் என்ற திடகாத்திரமான முடிவினை தன்மான உணர்வுடன் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு வழமை போல் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) அமோக வாக்களித்து விருப்பு வாக்குகளை எனக்கு வழங்கி வெற்றி வாகை சூட்டிய என் அன்புக்குரிய உடன்பிறப்பான வாக்காளப் பெருமக்களுக்கு எனது மனம் கிழ்ந்த நன்றிகள்.

தருமலிங்கம் கிருஷ்ணராசா
வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை.

வெளிவந்து விட்டது
அரச திணைக்கள தாபன
அலுவலக முறைமை,
நிதி முறைமை
ஆக்கம்: த.ஜெயராஜ்
ந.கமலநாதன் (வவுனியா)
2011 - திருத்திய பதிப்பு
ஏக விநியோகத்தர்கள்: அன்னை புத்தக சாலை, யாழ்ப்பாணம். 2229881
(சி/5747704)

## வேலையாள்கள் தேவை

அபி புரெடக்சன் காமன்ஸ்க்கு வேலை செய்யக்கூடிய தையல் அனுபவமுள்ளவர்களும் மற்றும் உதவியாள்களும் தேவை.
ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும் (6230)

தொடர்புகளுக்கு:
காளிகோவில் வீதி, மீசாலை. தொ.பே: 077 6701495

## வேலையாள் தேவை

John Deere மற்றும் Indra Traders Gropu of Companies இன்
கிளிநொச்சி கிளைக்கு வேலையாட்கள் தேவை
[இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்]

தகுதி :- க.பொ.த உயர்தரம்
(வணிகத் துறையில் 3 பாடங்களில் சித்தி மற்றும் கணனி அறிவு விரும்பத்தக்கது)

நேர்முகத் தேர்வு :- 30.07.2011 காலை 10.00 மணி

தொடர்புகளுக்கு :- 021 4925623

தகுதியுடையோர் கிழ்க்காணும் முகவரிக்கு சுயவிபரக் கோவையுடன் சமூகம் தரவும்

SAJE MOTORS

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் வீடு ஒன்று வாடகைக்கு தேவை. தொடர்புக்கு: 0778695031

மாபெரும் கருத்தரங்கு
புவியியல்
புதிய, பழைய பாடத்திட்டத்துக்கு அமைவானது
வளவாளர் திரு. P.S.V.தினேஸ்
புதிய பாடத்திட்டம் 30.07.2011 பகுதி I
பழைய பாடத்திட்டம் 31.07.2011 பகுதி II
நேரம் காலை 8-12மணி
பழைய பாடத்திட்டம் → இடவிளக்கப் படம், விபரணப் படம், எறியங்கள், நில அளவையியல்.
01.08.2011 காலை 8மணி - 12மணி
★மாதிரி வினாத்தாள்கள் கையளிக்கப்படும். ★விடைத்தாள்கள் மதிப்பீடு செய்கின்றபோது கவனிக்கப்படுகின்ற பிரதான விடயங்கள், விடையளிக்கும் முறையியல் உள்ளிட்ட இன்னோரன்ன விடயங்கள் கலந்தாலோசிக்கப்படும். ★முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களுடன் கூடிய கருத்தரங்காகும்.
விக்னா கல்வி நிறுவனம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ். கட்டணம் 250/=

ஆவலுடன் எதிர்பார்த்த கருத்தரங்கு
A/L தமிழ்
திரு.குழந்தை
புதிய பாடத்திட்டம் 28.07.2011 காலை 8 மணி.
பழைய பாடத்திட்டம் - 29.07.2011 காலை 8 மணி
★ இன்று முதல் அனுமதியை பெற்றுக் கொள்ளவும்.
★ ஆசிரியரிடம் கல்விகற்கும் மாணவர்களுக்கு 300/=
ஏனைய மாணவர்களுக்கு 500/=
விக்னா கல்விநிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# குண்டு வெடிக்கும் வண்டு



புழு, பூச்சிகள், ஒன்றை ஒன்று தின்று வாழ்கின்றன. அதே சமயத்தில் ஒன்றிடம் இருந்து ஒன்று தப்பித்து வாழவும் இயற்கை அவற்றுக்கு வழிவகுத்துள்ளது. ஒவ்வொரு உயிரினத்துக்கும் அதிகமாக எதிரிகள் இருக்கின்றன. மனிதர்களைவிட பிராணிகள், பூச்சியினங்களின் வாழ்க்கைதான் போராட்டக் களமாக உள்ளது. இந்தப் பூச்சிகளுள் சிலந்தி, தன் இரையை மிகவும் தந்திரமாகப் பெற்றுக் கொள்கிறது. வலையைப் பின்னிவிட்டு, எப்போது பூச்சி மாட்டிக்கொள்ளும் என்று சிலந்தி காத்திருக்கும். பின்னிய வலையில் பூச்சி வந்து மாட்டிக்கொண்டதும் ஒரு வகை சிலந்தி, பாய்ந்து கடித்து விடும். இந்த அவசர வகை சிலந்திக்கு ''நெபலியா'' என்று பெயர் உண்டு. சிலந்தி வலையில் அடிக்கடி அகப்பட்டுக் கொள்வது ஒரு வகைச் சில்வண்டுதான். சிலந்திகளிடம் இருந்து தப்பித்துக் கொள்ள இந்த வண்டுகளுக்கு ஒருவகை ஆற்றலை இயற்கை அளித்திருக்கிறது. இந்த வண்டுகளைக் குண்டு வெடிக்கும் வண்டு என்று கூறுகிறார்கள்.

இந்த வண்டுகளின் வயிற்றின் அடிப்பாகத்தில் சிறிய சுரப்பி இருக்கிறது. அந்தச் சுரப்பியில் ஒரு வேதித் திரவமும், பிராண வாயுவும் சுரக்கின்றன. இந்த இரண்டும் சேர்ந்து வெடிக்கும் தன்மை கொண்டவை.

சிலந்தி வலையில் இந்த வண்டு மாட்டிக் கொண்டதும், நெபலியா வகைச் சிலந்தி அதைத் தின்ன உடனே பாய்ந்து போய் கௌவ்வும். ஆபத்தை அறிந்த வண்டு, தன் வயிற்றுப் பாகத்தைச் சிலந்தி யின் பக்கம் திருப்பி, குறிபார்த்துச் சுரப்பியை வெடிக்கச் செய்யும். அந்த வெடிச் சத்தத்தை சிலந்தியால் தாங்க முடியாது. மேலும் காரமான ஒரு திரவமும் அதன் மீது பாய்ச்சப்படும். வெடிச்சத்தம், திரவ முழுக்கில் இருந்து சிலந்தி மீள்வதற்குள் அந்த வண்டு தப்பித்துப் போய் விடும்.

இந்த வகை ஆற்றல் இருப்பதால் குண்டு வெடிக்கும் வண்டுக்கு ஆபத்தோ, எதிரிகளோ அதிகம் இல்லை என்று சொல்லலாம். ஆனால், இதற்கும் ஓர் எதிரியை இயற்கை படைத்திருக்கிறது. இந்த வண்டை அவசரப்படாமல் சாமர்த்தியமாகப் பிடிக்கும் தன்மை கொண்ட இன்னொரு வகைச் சிலந்தி இருக்கிறது. அதனை 'அர்கோப' என்று கூறுவதுண்டு.

# அரிய எலிகள் கண்டுபிடிப்பு



பல ஆண்டுகளாக விஞ்ஞானிகள் கண்ணில் அகப்படாத புதிய வகை எலிகள் பிலிப்பைன்சில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவின் புளோரிடா மாநில பல்கலைக்கழக விலங்கியல் துறை ஆராய்ச்சியாளர்கள் ஸ்டீபன் தலை மையில் பிலிப்பைன்சின் லூசான் பகுதியில் தீவிர ஆய்வு மேற்கொண்டு வருகின் றனர். இங்குள்ள காடுகளை சுற்றி பல்வேறு உயிரினங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டி வருகின்றனர். இவர்களது ஆய்வில் 7 அரிய வகை எலிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. மற்ற எலிகளைவிட இவற்றின் ஜீன்கள் வித்தியாசமாக இருப்பதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதுபற்றி விஞ்ஞானிகள் மேலும் கூறுகையில், இந்த எலிகள் பெரும்பாலும் காடுகளில் வாழ்பவை. 'ஜீனஸ் அபோமிஸ்' என்பது இவற்றின் விலங்கியல் பெயர். பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே இவை தோன்றியுள்ளன என்றனர். இயற்கைச்சூழல் பாதுகாக்கப்படும் இடங்களில் இத்தகைய உயிரினங்கள் அதிகம் இருக்கும் என்பதால் பிலிப்பைன்சில் மேலும் பல்வேறு அரிய உயிரினங்கள் இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுவதோடு அங்கு தொடர்ந்து ஆய்வு நடத்தி வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.








உத்தரவு பெற்ற விநியோகத்தர்கள்
Debug
இல.58, 42ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-06, இலங்கை.
தொ.பே.:(094) 11 7 520000/011 5 338261
தொ.ந.: (094) 011 2 362612

thINK
Incredible products, profitable solutions

டிபேக் காட்சியறைகள்
* தலைமையகக் காட்சியறை - 011 7 520000 * லிபேட்டி - 011 7 400830 * நீர்கொழும்பு - 031 7 388790
* குருநாகல் - 037 7 388790 * அநுராதபுரம் - 025 7 388790 * மாத்தறை - 041 7 388790
* இரத்தினபுரி - 045 7 388790 * கண்டி - 081 7 388790 * பண்டாரவளை - 057 7 388790
* பேலியகொடை - 011 7 388790 * யாழ்ப்பாணம் - 077 2 919045 * மட்டக்களப்பு - 065 7 388790
திருகோணமலை - 026 7 388790

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பலபொருள் தரும் ஓவியங்கள்



பார்ப்பதற்கு ஓர் ஓவியம் போல இருக்கும். இந்த ஓவியத்திற்குள் பல உருவங்கள் உள்ளன. ஓவியக்கலைஞரின் அற்புதமான படைப்புக்களில் இவையும் ஒன்று.

# ஆழ்கடலில் காணப்படும் விநோத மிருகங்கள்

ஜப்பானுக்கு அருகில் உள்ள மிரயானா என்ற தீவுப்பகுதியில் உள்ள கடலின் ஆழத்தில் பல விநோதமான கடல் வாழ் உயிரினங்கள் காணப்படுகிறன. ஆராய்ச்சியாளர்கள் எடுத்த புகைப்படங்களை இங்கு காணலாம்.



# ஏழு வகை எலிகள் கண்டுபிடிப்பு

பல ஆண்டுகளாக விஞ்ஞானிகள் கண்ணில் அகப்படாத புதிய வகை எலிகள் பிலிப்பைன்ஸில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
அமெரிக்காவின் புளோரிடா மாநில பல்கலைக்கழக விலங்கியல் துறை ஆராய்ச்சியாளர்கள் ஸ்டீபன் தலைமையில் பிலிப்பைன்ஸின் லூசான் பகுதியில் ஆய்வுமேற்கொண்டு வருகின்றனர்.
இங்குள்ள காடுகளைச் சுற்றி, பல்வேறு உயிரினங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டி வருகின்றனர்.
இவர்களது ஆய்வில் 7 அரிய வகை எலிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
மற்ற எலிகளைவிட இவற்றின் ஜீன்கள் வித்தியாசமாக இருப்பதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.
இதுபற்றி விஞ்ஞானிகள் மேலும் கூறுகையில்,
இந்த எலிக்ள் பெரும்பாலும் காடுகளில் வாழ்பவை.
ஜீனஸ் அபோமிஸ் என்பது இவற்றின் விலங்கியல் பெயர். பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே இவை தோன்றியுள்ளன-என்றார்.
இயற்கைச்சூழல் பாதுகாக்கப்படும் இடங்களில் இத்தகைய உயிரினங்கள் அதிகம் இருக்கும் என்பதால் பிலிப்பைன்ஸில் மேலும் பல்வேறு அரிய உயிரினங்கள் இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

# பாலைவனச் சோலை ஏரி




சஹாராப் பாலைவனப்பகுதியில் உள்ள (Erg Awbari) எர்க் ஆவ்பாரி என்ற இடத்திலிருந்து 30 கிலோ மீற்றர் தொலைவில் (Ubari) உபாரி ஏரி உள்ளது. இந்த ஏரி உப்பு நீர் ஏரியாகும்.

# பண்டா கரடி செய்யும் வேடிக்கை



மனிதர்களுக்கு தும்மல் வரும்போது பல விதமான சத்தம் வெளிவரும். அதே போல பண்டா கரடிக்கு வரும் தும்மல் சத்தம் பார்ப்பதற்கு வேடிக்கையாகத்தான் இருக்கும்.

# இலைகளில் உருவாக்கப்பட்ட ஓவியம்



நாம் பல விதமான ஓவியங்களைப் பார்த்திருக்கிறோம். இப்போது நாம் பார்க்கப் போவது அரச மரத்தின் இலைகளில் உருவாக்கப் பட்ட கலைநயம்மிக்க அற்புதமான ஓவியங்கள்.

# சிந்தனைத் துளிகள்...

* மனிதன் சிரிப்பது பிறரைப் பார்த்து; அழுவது தன்னைப் பார்த்து.
சாதித்தவன் சிறந்த மனிதன் அல்லன்; அதைச் சேமிப்பவனே சிறந்த மனிதன்.
* உழைக்கக் கற்றபின் பொறுமையும் நேர்மையும் சக்தி வாய்ந்தவை.
* பலவீனத்திற்குப் பரிகாரம்; தொடர்ந்து பலவீனம் குறித்து சிந்திப்பதல்ல மாறாக வலிமை குறித்து சிந்திப்பதுதான்.
* வலிமைதான் வாழ்வு; பலவீனமே மரணம்.
இல்லை என்று ஒருபோதும் சொல்லாதே; என்னால் இயலாது என்று ஒருநாளும் எண்ணாதே.
* சுதந்திரமானவனாக இரு. எவரிடத்தும் எதையும் எதிர்பார்க்காதே.
* ஒவ்வொரு நாளையும் அன்புடன் தொடங்கு; அன்பில் செலவிடு, அன்பால் நிரப்பு, அன்பில் பூர்த்திசெய்.
* சந்தேகத்தின் விரோதி சந்தேகம்.
சிறப்புடன் வாழின் சிரிக்கப் பழகு.
* இறைவனைத் தவிர வேறு எதிலும் மிகுந்த பற்று வைக்கக்கூடாது. கடந்த காலத்தைப் பற்றி வருந்தி எதிர்காலத்தை வீணாக்கக் கூடாது.
* உழைப்பவர்களுக்கே உண்ணும் உரிமையுண்டு.

நித்தியா.

# அருவியை கடக்கும் ரயில் பாதை



இந்தியாவின் கர்நாடக மாநிலத்திற்குச் செல்லும் வழியில் தான் இந்த அழகான ரயில் பாதை அமைந்துள்ளது. இந்த ரயில் பாதையில் உள்ள அருவி துசாகர் அருவி என்றழைக்கப் படுகிறது. உல கின் உயரமான அருவி களில் இந்த துசாகர் அருவியும் ஒன்றாகும். 2000 அடி உயர மலையிலிருந்து இந்த அருவி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org